
கல்கி

KALKI 22-5-1977 75 காசு



புதிய ரெக்ஸோனா

உங்கள் சருமத்தைப் பராமரிக்கிறது...



மெருகு மிளிர வைத்திருக்கிறது.



இப்போது, எழில் கொஞ்சும் புது வடிவிலே, கையடக்கமாக வருகிறது புதிய ரெக்ஸோனா.
சருமப் பராமரிப்புக்கான நாலு இயற்கைத் தைலங்களின் கலவை அதிலுள்ளது: ஹபுஷா (தேவதாரம்), கருவா, கிராம்பு, சானம். மேனி மின்னக் குளித்தெழுவீர்...நீராடிய உங்கள் மீது நேரமெல்லாம் ரெக்ஸோனா மெல்லொளி மெருகு, நாளெல்லாம் ரெக்ஸோனா நறுமண உறவு. குளித்துப் பாருங்கள் இன்றே.

புதிய ரெக்ஸோனா உங்கள் சருமத்திற்கு நல்லது.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லின்டாஸ்—RX.71-203 TM

முதல் பக்கம்

முடியும் பொழுதெல்லாம் விடியும்!

வெற்றி பெற்றவனுக்கு எதுவும் சர்வ சாதாரணமாகத் தெரிகிறது; தோல்வியுற்றவனுக்கு எதைக் கண்டாலும் பயம் வருகிறது.

வென்றவனுக்கு மலையும் கடுகு; தோற்றவனுக்குக் கடுகும் மலை.

அவன் மலையோடு மோதிச் சாகிறான்; இவன் கடுகைக் கண்டும் பயந்து சாகிறான்.

வெற்றி மயங்க வைத்துத் தோல்வியை இழுத்து வருகிறது. தோல்வி அடக்கத்தைத் தந்து வெற்றியைக் கொண்டு வருகிறது.

இது ஒரு சகடம்; ஏற்றம் இறக்கம்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தில் ஹிட்லர் வெற்றி பெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், தோல்வியைப் பற்றி யாராவது பேசியிருந்தால் சிரித்திருப்பான். ஒரு வருடத்திற்கு முன்பு இந்தியாவில் காங்கிரஸ் தோல்வி அடையும் என்று சொல்லி இருந்தால், பிற நாட்டுக்காரர்கள் கூட ஒப்புக் கொண்டிருக்க மாட்டார்கள். இது சாசுவதம்; இது நிரந்தரம் என்ற மாயை எல்லோர் கண்ணையும் மறைக்கிறது. முதுகிலே அடி விழும் போது தான் தனக்கு ஒரு முதுகு இருப்பதும், அடிக்க ஒரு கம்பு இருப்பதும் புரிகிறது.

தோற்றவர்களையும் நான் மரியாதையாகத் தான் பார்ப்பேன்; காரணம் அவர்களுக்கும் ஒரு காலம் வரும். வென்றவர்களைப் பரிதாபமாகப் பார்ப்பேன், 'இவர்கள் எப்போது அடி வாங்கப் போகிறார்களோ' என்று. வெற்றி மயக்கம் தோல்விக் கலக்கம் இரண்டும் அற்ற நிலையினை மேற்கொண்டு விட்டவனுக்கு உணர்ச்சி ஒன்றுதான். அது சந்தோஷமும் அல்ல, துக்கமும் அல்ல. அது நிரந்தர நிலை; அதற்கு அழிவு கிடையாது. பாபுவின் தூண்டிலில் இன்று நிறைய மீன் கிடைத்தால், நாளை ராமுவின் தூண்டிலில் அதிக மீன் கிடைக்கும்.

வருவது போவதற்காக; போவது வருவதற்காக. பிறப்பது இறப்பதற்காக; இறப்பது பிறப்பதற்காக. அழிவது மீள்வதற்காக; மீள்வது அழிவதற்காக. விதைப்பது அறுப்பதற்காக; அறுப்பது விதைப்பதற்காக.

கோடையில் குளம் வற்றிவிட்டதே என்று கொக்கு கவலைப்படக் கூடாது; மீண்டும் மழைக்காலம் வருகிறது.

மழைக்காலம் வந்து விட்டதென்று நதி குதிக்கக் கூடாது; அதோ, வெயில் காலம் வந்து கொண்டிருக்கிறது.

சூரியன் கொதிக்கும்போது தூக்கிப் பிடித்த குடையை, இருட்டி விட்ட பிறகும் மடக்காதவன் மடையன்.

இருட்டிய போது ஏற்றி வைத்த விளக்கை, விடிந்து விட்ட பிறகும் அணைக்காதவன் அடிமடையன்.

குடை ராட்டினத்தில் மேலே போகும் போது பல காட்சிகள் தெரியும்; கீழே இறங்கும் போது சுற்றி நிற்கும் ஜனங்கள்தான் தெரிவார்கள்.

புதுவெள்ளம் வரும்போது குழந்தைகளுக்கு உற்சாகம் அதிகம்; அதிலே குளித்தால் ஜல தோஷம் பிடிக்கும்.

புது வெற்றியில் தலைக்கனம் அதிகமாகும்; அது அதிகமானால் அடுத்தாற்போல் காத்து நிற்பது அவமானம்.

தேரில் உட்கார்ந்திருப்பவன் குதிரையை மட்டும் கவனித்தால் போதாது, பாதையையும் கவனித்தாக வேண்டும்.

என் தேர்; என் குதிரை என்று காட்டினும் மேட்டினும் ஓட்டினால் கவிழ்ந்து போகும்.



'நான்' என்று நினைக்காதீர்கள்; நினைத்தால் ஆண்டவன், 'தான்' என்பதைக் காட்டி விடுவான்.

காவிரிப்பூம்பட்டினத்தில் குடியேறிய போது அது கடலில் மூழ்கும் என்று எவனுக்காவது தெரியுமா?

தம்பதிகள் மாற்றிக் கொள்ளும் மாலையே எதிர்காலத்தில் தூக்குக் கயிறாகவும் மாறலாம்.

ஆகவே எந்தத் துறையில் உள்ளவர்களுக்கும் சொல்லுவேன்:

தோல்வி அடைந்தவர்களைப் பழி வாங்காதீர்கள்; அன்போடு நடத்துங்கள்.

காலை வெயிலில் உங்கள் நிழல் முன் பக்கமாக விழுந்தால், மாலை வெயிலில் பின்பக்கமாகத்தான் விழும்.


கண்ணதாசன்

ங்ரி

பழைய கால மரபு இக்காலத்திய தரமாக ஏற்றம் பெறுகிறது!

இந்தியக் கலாசாரத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் கர்நாடக இசையும் ஹிந்துஸ்தானி சங்கீதமும் பொதுவாக இசைத்துறையின் பல சிறப்புகளைக் கொண்டவை. இந்த இசை கேள்வி ஞானத்திலே தலைமுறைத் தலைமுறையாக வந்தது.

இதைப்போலவே தாவண்கெரேயில் எங்கள் ஆலையில் தயாரிக்கப்படும் துணிகளின் தரம் பாரம்பரியமானது. மாறாத தரங் கொண்டவை. பருத்தி முதல் மென்மையும் மிகுந்த வகைகள் வரை, தாவண்கெரேயில் தரத்திலே சிறந்த இழை நயங்களில் மேம்பாடான துணிவகைகள் தயாரிக்கப் படுகின்றன. கொடுக்கும் பணத்திற்குக் கூடுதலான மதிப்பைத் தரவல்லவை.



Reshma ரேஷ்மா 2 x 2 ...ப் வாயில் புடவைகள்

Merlin மெர்லின் பிரிண்டட் வாஷ்-ன்-வேர் காம்பிரிக்ஸ்

Mysore Beauty மைசூர் ப்யூட்டி டைட்டு வாஷ்-ன்-வேர் காம்ப்ரிக்ஸ்

ங்ரி

யானையின் பிளிறு சப்தத்தைக் குறிக்கிறது

தாவண்கெரே

என்றும் சிரஞ்சீவமாயுள்ள தரம்

தி தாவண்கெரே காட்டன் மில்ஸ் லிமிடெட், தாவண்கெரே, கர்நாடக மாநிலம்.

THOMAS/DCM/776/ Tam



கல்கி

1977 மே 22
பிங்கள ஞு
வைகாசி 9

ராஜாஜி சிந்தனை

அரசாங்கம் நல்ல முறையில் நடத்தப் படாவிட்டால் ஜனங்கள் கஷ்டப்படுவார்கள். குடிகளின் சம்மதத்தின் பேரில் நடக்கும் அரசாங்கமே இந்தக் காலத்துக்குத் தகும்.

எல்லோரும் சேர்ந்தாற் போல் கும்பலாக அதிகாரம் செலுத்த முடியாது. அதற்காகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும். நல்ல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தால் நல்ல வழியில் அரசாங்கம் நடக்கும்.

தேர்தல்களில் பணத்துக்கும் தாட்சிண்யத்துக்கும் ஆதரவுச் சீட்டுப் போடக் கூடாது. யோக்கியமாக நடப்பவர்களுக்கே ஆதரவு கொடுக்க வேண்டும். யாரையாவது கண்டு பயந்தோ அல்லது லஞ்சம் பெற்றுக் கொண்டோ, அல்லது கண்ணை மூடிக்கொண்டு யோசனையில்லாமலோ பெட்டியில் ஆதரவுச் சீட்டு போடுவது ஊரைக் கெடுத்த பாவமாகும். தேர்தலுக்கு முன் கூட்டங்கள் கூடி விஷயங்களை ஆலோசித்துத் தைரியமாகவும் நியாயமாகவும் ஆதரவுச் சீட்டுகள் போடும் வழக்கம் ஏற்பட்டால்தான் நாம் சரியான அரசாட்சி அடைவோம்.

சீட்டைப் பெற்று அரசாங்க சபைகளுக்குப் போகிறவர்கள் தைரியமாகவும் விவேகமாகவும் யோக்கியமாகவும் காரியங்களை நடத்த வேண்டும். மக்களின் பொதுநன்மையையே எப்போதும் கவனித்து வர வேண்டும். சிலருடைய ஆதரவைப் பெறுவதற்குப் பலருக்கு நஷ்டம் உண்டாகும் காரியங்களை அவர்கள் செய்யக் கூடாது. துஷ்டர்களைக் கண்டு பயப்பட்டு நியாயத்துக்கு விரோதமாக எதுவும் செய்யக் கூடாது.

— 'ஊருக்கு நல்லது' கட்டுரைத்தொடர்

கல்கி சந்தா

	ஒரு வருடம்	ஆறு மாதம்
	ரூ.பை	ரூ.பை
இந்தியா	38.00	19.00
இலங்கை (இலங்கை நாணயப்படி)	38.00	19.00
வெளிநாடுகள்	90.00	45.00

அருள்மிகு ஈச்சநாரி விநாயகர் திருக்கோயில் கும்பாபிஷேகம்

கோவையிலிருந்து பொள்ளாச்சி செல்லும் சாலையில் 9 கிலோ மீட்டர் தூரத்தில் சாலை முகப்பிலேயே இந்தக் கோயில் இருக்கிறது. இந்தக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் விநாயகர் பெருமான் மிகவும் சக்தி வாய்ந்தவர். வேண்டுபவர்களுக்கு வேண்டியதை எல்லாம் அருளுபவர் என்பது அனுபவ உண்மை.

இந்தக் கோயில் திருப்பணி சுமார் ஏழு லட்ச ரூபாய் செலவில் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது.

வரும் வைகாசி மாதம் 21ஆம் தேதி 3-6-77 வெள்ளிக்கிழமை காலை 6-45க்கு மேல் 7-30 மணிக்குள்ளாக ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜெயேந்திர சுவாமிகள் அவர்கள் தலைமையேற்று மகா கும்பாபிஷேகத்தை நடத்தி வைக்கிறார்கள்.

இந்த மகா கும்பாபிஷேகத்தில் ஒவ்வொருவரும் தம் குடும்பத்துடன் கலந்து கொண்டு ஸ்ரீ விநாயகப் பெருமான் திருவருளைப்பெற வேண்டுகிறேன்.

அன்பர்கள் தங்களால் இயன்ற பொருள் உதவி செய்து இப்பெரிய திருப்பணியில் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்திருப்பணிக்குச் செலுத்தப்படும் தொகைக்கு இந்திய அரசு வருமானவரி துறையினரால் No. 822 (F. No. 176/6/75 IT) (AI) வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

நா. மகாலிங்கம், தலைவர்
அருள்மிகு ஈச்சநாரி விநாயகர் திருக்கோயில் திருப்பணிக்குழு

பொருள் உதவும் அன்பர்கள் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

பி. கே. துரைசாமி (மேனேஜிங் பார்ட்னர் - ஆனைமலை ஏஜன்ஸீஸ்)
துணைத் தலைவர் & பொருளாளர் - ஈச்சநாரி விநாயகர் திருக்கோயில் திருப்பணிக்குழு.
4/1, மேட்டுப்பாளையம் ரோடு, கோவை - 641011


அரசியல்
கட்சிகள்


பதவி
மோகம்


அ.இ.அ.தி.மு.க
175
இடங்களில்
தனித்து
போட்டி!
அறிவிப்பு

தமிழ்நாட்டில் மதுவிலக்கு

க. சந்தானம்

தமிழ்நாட்டின் புதிய ஆளுனர் மது விலக்கில் அபார நம்பிக்கை கொண்டவராக இருப்பது நமது அதிர்ஷ்டம். அவர் மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்துவதிலும் மது பர்மிட் பெறுவதைக் கடினமாக்குவதிலும் ஏற்கெனவே தமது கவனத்தைச் செலுத்தி வருகிறார்.

மதுவிலக்கு ராஜாஜியின் அபரிமித ஆசைகளுள் ஒன்று. இந்த ஒரு லட்சியத்துக்காக அவர் தமது நேரத்தையும் சக்தியையும் செலவழித்தது போல் வேறு எதற்கும் செய்ததில்லை. 1925—30-ல் அவர் காந்தி ஆசிரமத்தில் இருந்த போது உலக மதுக் குறைப்பு இயக்கத்தின் காரியதரிசியாகவும் இருந்தார். அவர் இந்த உயர் நோக்குக்காகத் தம்மை முழுமையாகச் சமர்ப்பித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த பிரிட்டிஷ் அரசு சேலம் ஜில்லாவில் மதுவிலக்கைக் கொணர்ந்தது. மாண்டேகு—கிளெம்ஸ்ஃபோர்டு திட்டப்படி 1937ல் ராஜாஜி சென்னை ராஜதானியின் பிரதம மந்திரியானபோது அவர் எடுத்த எடுப்பில் செய்த காரியங்களுள் ஒன்று சில ஜில்லாக்களுக்கு மதுவிலக்கைக் கொணர்ந்ததுதான். படிப்படியாக ராஜதானி முழுவதும் மதுவிலக்கை அமல்படுத்துவது அவர் நோக்கம். சத்தியாக்கிரக இயக்கத்தின்போது பல தொண்டர்கள் மதுக் கடைகள் முன் மறியல் செய்து சிறை சென்றனர். நமது அரசியல் சாசனத்தின் 47ம் பிரிவு மதுவிலக்கு பற்றியும், உடல் ஆரோக்கியத்தைப் பாதிக்கும் மயக்க மருந்துகளுக்குத் தடை விதிப்பது பற்றியும் கூறுகிறது. இவற்றை மருத்துவ ரீதியில் தவிர மற்ற விதங்களில் பயன்படுத்த முடியாதவாறு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறது.

துரதிர்ஷ்டவசமாக இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு சென்னையும் குஜராத்தும் மட்டுமே மதுவிலக்கை அமல்படுத்தின. மற்ற மாநில அரசுகள் குடிப் பழக்கத்துக்கு முடிவு கட்டத் தாம் விரும்புவதாக அவ்வப்போது அறிக்கைகள் விடுவதுடன் திருப்தியடைந்துவிட்டன. மது உற்பத்தித் தீர்வை மூலம் கிடைக்கும் வருவாய் மீது அந்த அரசுகளுக்குப் பற்றுதல் விழுந்து விட்டது. மக்களின் ஆரோக்கியத்தை விட இது முக்கியமானதாகப் போய்விட்டது.

மதுவிலக்கில் தீவிர நம்பிக்கைகொண்டுள்ள திரு மொரார்ஜி தேசாய் தலைமையில் அது தேசியக் கொள்கையாகும் என்றும், நாடு தழுவிய சட்டமாகும் என்றும் நம்புவோம்.

இதற்கிடையில் தமிழ்நாட்டின் புதிய ஆளுனர் மதுவிலக்கை அமல்படுத்துவதில் உள்ள குறைபாடுகளை நீக்குவதன் மூலம் சீக்கிரமே அமையப் போகும் மக்கள் அரசுக்கு ஒரு பெரும் சேவை புரிந்தவராவார்.

மதுவிலக்குச் சட்டத்தில் உள்ள மிகப் பெரிய பலவீனம் டாக்டர் சர்ட்டிபிகேட் விஷயம்தான். ஒருவரது தேக ஆரோக்கியத்துக்குப் போதை தரும் மது அருந்துவது அவசியம் என்று மருத்துவரின் அத்தாட்சி இருந்தால் அவருக்குப் பர்மிட் வழங்கப் படுகிறது. பொதுவாக இந்தப் பர்மிட் விஷயம் டாக்டருக்கு உழைப்பின்றிப் பணம் சம்பாதிக்க வசதி செய்து தருவதாகவே உள்ளது. கிட்டத்தட்ட நாற்பதாண்டுகளாக மதுவிலக்கு அமலில் இருந்து வரும் தமிழ் நாட்டில் மது அருந்த வேண்டிய அவசியம் தமக்கு இருப்பதாக யாருமே கூறிக் கொள்ள முடியாது. அப்படி ஒருவர் கூறுவாரேயானால் மது விலக்குச் சட்டத்தை அவர் மீறி வந்திருப்பதாகவே அர்த்தமாகும். எல்லா இந்தியர்களுக்கும் பர்மிட் வழங்குவதை நிறுத்தி அயல் நாட்டவருக்கு மட்டுமே சிறிதளவு பர்மிட் வழங்குவது நல்லது.

இரண்டாவது குறைபாடு எல்லைப் புறங்களில் நடக்கும் கள்ளக் கடத்தல். பக்கத்து மாநிலங்களான ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகியவற்றில் எல்லைப்புறங்களில் சில மைல் விஸ்தீரணத்துக்கு மது வியாபாரம் ஏதும் நடக்காமல் பாதுகாப்புச் செய்யக் கூடுமானால் கள்ளக் கடத்தல் பெருமளவு குறையும். குஜராத்தில் தமக்குள்ள அனுபவம் காரணமாக நமது புதிய

கல்கி மலர் 36 இதழ் 43

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள் தாயென்று கும்மியடி பாப்பா - பாரதியார்

ஆளுனர் பக்கத்து மாநில அரசுகளை இவ்விஷயத்தில் வற்புறுத்தி வெற்றி காணமுடியும்.

மதுவிலக்கு எவ்வளவு அவசியமோ அதே அளவுக்குப் போதை தரும் மருந்துகள் பரவுவதைத் தடுப்பதும் முக்கியமானதுதான். போதை தரும் மருந்துகளை விற்பது சந்தேகத்துக்கிடமின்றிச் சட்டத்துக்குப் புறம்பான காரியமே. ஆனால் இம் மருந்துகளைக் கள்ளத்தனமாகக் கடத்தி வருவதும் விற்பதும் மிக எளிது. இத்தகைய கள்ளக் கடத்தலையும் விற்பனையையும் தடுக்க வேண்டிய நிலையில் உள்ள அதிகாரிகள் சுலபமாக லஞ்ச ஊழலுக்கு அடிமைகளாகி விடுகின்றனர். எனவே இத்தகைய மருந்துகளின் விற்பனை பயங்கரமான அளவில் — முக்கியமாக மாணவர்களிடையே — அதிகரித்திருப்பதாகச் செய்திகள் வருகின்றன. இந்தக் கொடுமை, தடுப்பது சாத்தியமில்லாத அளவுக்கு விசுவரூபம் எடுப்பதற்கு முன் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆளுனர் இந்த விஷயத்திலும் தமது கவனத்தைச் செலுத்துவார் என நம்புவோம்.

தி.மு.க. அமைச்சரவை அபூர்வமாகச் சில சமயம் நேர்மை உணர்ச்சியுடன் நடந்து கொண்டதுண்டு. அத்தகைய தருணங்களில் அது குதிரைப் பந்தயம், லாட்டரி, சூதாட்டம் ஆகியவற்றை ஒழித்தது. இந்த நடவடிக்கைகள் முக்கியமாக மத்தியதர வகுப்பினருக்கு மிகுந்த நன்மை செய்தன. ஆனால் கடந்த மூன்று ஆண்டு ராஷ்டிரபதி ஆட்சியில் இவற்றுக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டு விட்டது. புதிய ஆளுனர் லாட்டரியை ஒழிக்க முயற்சி எடுப்பதுடன் குதிரைப் பந்தயம் நடத்துவதில் ஆதாயம் காணும் புள்ளிகள் மீது போர் தொடுக்கவும் செய்வாரேயானால் தமிழர்களின் நன்றிக்குப் பாத்திரமாவார்.

நீதிபதிகள் மாறுபட்டால்?

சுப்ரீம் கோர்ட் நீதிபதியின் சொல்லை மறுப்பேதுமின்றி ஏற்பதே முறை. ஆனால் இரு மதிப்பு மிக்க நீதிபதிகள் ஒரே சம்பவம் பற்றி இருவேறு விதமாகப் பேசும்போது நாம் என்ன செய்ய?

நீதிபதி கோஸ்வாமி நீதிமன்றத்திலேயே வெளிப்படையாக ஒரு திடுக்கிடச் செய்யும் தகவலை வெளியிட்டார். இடைக்கால ராஷ்டிரபதி திரு ஜெட்டி பிரதம நீதிபதியைப் பார்த்ததாகவும், ஒன்பது மாநில சட்ட சபைகளைக் கலைப்பது பற்றிய வழக்கில் தீர்ப்பு வழங்கப்படாத முன்னரே அது பற்றிப் பிரதம நீதிபதியிடம் அவர் பேசியதாகவும் கூறினார். உண்மையில் திரு ஜெட்டி பிரதம நீதிபதியைச் சந்தித்தது ரிட் மனுக்களை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்த பிறகுதான். ஆனால் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் தங்கள் தீர்ப்புகளை வாசித்தளிக்கு முன்னரே சந்திப்பு நிகழ்ந்து விட்டது. ஆகவே ஜெட்டி இந்தச் சந்திப்பின்போது சட்டசபை கலைப்பு விவகாரம் பற்றிப் பிரதம நீதிபதியிடம் பேசியிருந்தால் அது முறையல்ல.

இடைக்கால ராஷ்டிரபதி தம் வீட்டுக்குத் தனிப்பட்ட முறையிலேயே வந்ததாகவும் தமது மகனின் திருமணத்துக்குத் தம்மை அழைக்கவே வந்ததாகவும் பிரதம நீதிபதி கூறியிருக்கிறார். அரசியல் சாசனம் சம்பந்தப்பட்ட வழக்கு பற்றி திரு ஜெட்டி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

ஆனால் நீதிபதி கோஸ்வாமி ஆதாரம் ஏதுமில்லாமலேயே இடைக்கால ராஷ்டிரபதிக்கும் பிரதம நீதிபதிக்கும் இடையே நடந்த பேச்சு பற்றிக் குறிப்பிட்டிருப்பார் என்று நாம் நம்பவும் இடமில்லை. இரு நீதிபதிகளும் ஏதோ தப்பர்த்தம் செய்து கொண்டு அறிக்கைகள் விட்டிருப்பது தெளிவு. பிரதம நீதிபதி சக நீதிபதிகளிடம் தொடர்பு கொண்டபோது, இடைக்கால ராஷ்டிரபதி சட்டசபைகள் கலைப்பு சம்பந்தமாகத் தம்மிடம் குறிப்பிட்டது பற்றி ஏதேனும் சொல்லியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. ஒருவேளை திரு ஜெட்டி சட்ட சபைகள் கலைப்புப் பிரகடனத்தில் கையெழுத்திடத் தாம் தாற்காலிகமாகத் தயங்கியது ஏன் என்பதற்கு விளக்கம் கூறியிருக்கலாம். அதனால் பெரிய தீமை ஏதும் விளைந்துவிடவில்லை என்றாலும் அப்படி திரு ஜெட்டி பேசுவது முறையல்ல என்பதே முக்கியம்.

திரு ஜெட்டி தமக்கும் சுப்ரீம் கோர்ட்டுக்கும் ஒரு தர்ம சங்கடமான நிலை ஏற்படுவதைத் தவிர்த்திருக்கலாம். பிரதம நீதிபதியை நேரில் போய் அழைக்காமல் ஒரு கடிதம் மூலம் அழைத்து, அக்கடிதத்தில் சட்ட சபைக் கலைப்பு பற்றிய வழக்கில் இன்னும் தீர்ப்புக்கள் வாசிக்கப்படாததால் தாம் நேரில் வர முடியாது போயிற்று என்று விளக்கி எழுதியிருக்கலாம்.

கடந்த சில வாரங்களுக்குள் திரு ஜெட்டி கண்டனத்துக்குரிய முறையில் இரண்டு தடவைகளில் நடந்து கொண்டு விட்டது வருந்தத் தக்கது.


—க. சந்தானம்

படிக்காத பேதைகள்!

அமெரிக்காவிலெல்லாம் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளுக்கு ஆசிரியர்கள் பள்ளியில் சரியாகப் பாடம் கற்பிக்கவில்லை என்று நினைத்தால் அதற்காகப் பள்ளியின் மீது வழக்கு தொடரலாம். இப்படி நான்கு ஆண்டுகளுக்கு முன் கூட 'நியூ ஜெர்ஸி'யைச் சேர்ந்த சில பெற்றோர்கள், பள்ளி ஒன்றின் மீது வழக்குத் தொடுத்து, வெற்றி பெற்றனர்!

பிள்ளைகளின் படிப்பு விஷயத்தில் பெற்றோர்கள் அவ்வளவு அக்கறை காட்டுகின்றனர்! ஆதாரம்: டைம்க்ஸ் ஆப் இந்தியா - சம்பத் குமாரி




"என் காதுதான் மந்தமா, இல்லே, பாழும் பேட்டரிங்கதான் மறுபடி தீர்ந்து போச்சா?"
நீண்ட கால சேவைக்கு நிதிபோன்றது
ஸில்வர் எவரெடி
மற்ற ரகங்களை விட அதிக காலம் உழைப்பதற்கென்றே உருவானது. யூனியன் கார்பைடு தொழில்நுட்பத் தயாரிப்பு. கசிவுத் தடுப்புக் கவசம் தரித்தது. உயர் ரக பேட்டரி — ஸில்வர் எவரெடி
UNION CARBIDE
EVEREADY
LEAKPROOF
நீடித்துநிற்கும் சக்திக்கு ஒரு வெள்ளிக் கோபுரம்
LINTAS/SIL-1-2012 Tm

மணிப்பால் மந்திரவாதி!



இன்றைக்கு அரை நூற்றாண்டுக்கு முன்னால் ஓர் இளம் டாக்டர் மத்தியதர வகுப்பினருக்கும் ஏழைகளுக்கும் பணியாற்ற வேண்டும் என்ற இலட்சியத்துடன் வீடு வீடாகச் சென்றார். மருந்துச் சீட்டு எழுதித் தராமல் மருந்துகளைத் தாமே மலிவு விலையில் வாங்கிக் கொண்டு போய் லாப நோக்கின்றி விநியோகித்தார். ஒரு சமயம் பிரசவ வேதனைப் பட்டுக் கொண்டிருந்த ஒரு பெண்ணுக்கு உதவிவிட்டு நிமிர்ந்தபோது அந்தச் சூழல் அவரை உலுக்கி விட்டது. அந்தப் பெண் தாய்மைப் பேற்றுக்காகப் பட்ட சிரமத்தை விட ஏழைமை காரணமாக அதிகமாகச் சிரமப்படுகிறாள் என்பதை அவர் உணர்ந்தார். அந்தக் குடிசையை விட்டு நேரே தம் அண்ணனின் துணிக் கடைக்குப் போனவர், இரண்டு புடவைகளை வாங்கி அந்தப் பெண்ணுக்கு அனுப்பி வைத்தார்.

அன்றிரவு அவர் சிந்தித்தார்: 'இந்தப் பெண்ணைப் போல் எத்தனை ஆயிரம் பெண்கள் இருக்கிறார்கள்? எல்லாருக்கும் நம்மால் உதவ முடியுமா? அவர்கள் தங்களுக்குத் தாங்களே உதவிக்கொள்ளத்தான் நாம் உதவ வேண்டும். அவர்களிடம் உழைப்பார்வமும் புத்திசாலித்தனமும் உண்டு. அவற்றைப் பயன்படுத்த நல்ல நிறுவனங்களைத் தோற்றுவிக்க வேண்டும். தேசத்தின் இளம் தலைமுறையினருக்கு நம்மால் இயன்ற அளவுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெருக்க வேண்டும்.'

இவ்விதம் சிந்தித்த இளைஞர்தான் டாக்டர் டி. எம். ஏ. பய்.

வெகு சீக்கிரமே டாக்டர் பய் மருத்துவத் துறையை மூட்டை கட்டி வைத்துவிட்டு வங்கித் தொழிலில் புகுந்தார். அவரது மூத்த சகோதரர்கள் ஸ்ரீ பி. ஏ. பய், ஸ்ரீ உபேந்திர பய் ஆகியோர் ஏற்கெனவே வங்கித் தொழிலில் ஈடுபட்டு, உடுப்பியில் ''கானரா இண்டஸ்ட்ரியல் பாங்கிங் ஸிண்டிகேட்'' என்ற நிறுவனத்தைத் தொடங்கி நடத்தி வந்தனர். இன்று 'ஸிண்டிகேட் பாங்க்' எனப் பிரபலமாக விளங்கும் வங்கி அன்று சிறிய அளவில் ரூ. 80,000 மூலதனத்துடன் ஆரம்பமானதுதான். மாவட்டத்தில் உள்ள பல்வேறு குடிசைத் தொழில் கைவினைஞர்களுக்குக் கடனுதவி செய்வதை நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டது. இன்றைக்கும், எவ்வளவோ வளர்ச்சியடைந்து விட்ட நிலையிலும் சிறு தொழில்களுக்கு உதவுவதே ஸிண்டிகேட் பாங்கின் முக்கிய இலட்சியமாக இருந்து வருகிறது.

பாங்குத் தொழிலில் ஈடுபட்ட சிறிது காலத்துக்குள்ளேயே புதுமையான ஒரு திட்டத்தை வகுத்து அமுல்படுத்தினார் திரு டி. எம். ஏ. பய். சாமானியர்களிடம் சேமிப்புப் பழக்கத்தை வளர்க்க வேண்டுமானால் பாங்குக்கு அவர்கள் வரட்டும் என்று காத்திருக்கக் கூடாது; பாங்கு அவர்களிடம் போக வேண்டும் என்று தீர்மானித்தார். தினக் கூலி பெறுவோரிடமெல்லாம் பாங்கு ஊழியர் சென்றனர். நாள் கூலியில் இரண்டணா சேமிக்கச் செய்து ஏழு ஆண்டுகளில் 350 ரூபாயாகத் திருப்பித் தந்தனர். இன்றைக்கும் இந்தத் திட்டம் அமுலில் இருக்கிறது. இன்று தினம் 25 பைசா பெற்றுக் கொண்டு ஏழு ஆண்டுகளில் ரூ. 700 திருப்பித் தருகின்றனர்.

இன்று ஸிண்டிகேட் பாங்கு 80.15 கோடி ரூபாய் டெபாஸிட் உள்ள 100 கோடி ரூபாய் சொத்து மதிப்புள்ள வங்கியாகத் தென்னிந்தியாவின் மிகச் சிறந்த வங்கிகளுள் ஒன்று எனப் பெயர் பெற்றுள்ளது.

டாக்டர் பய் அவர்களின் போக்கில் யதார்த்தமான புத்திசாலித்தனம் மட்டுமின்றி வீர தீரமும் உண்டு. 1930ம் ஆண்டுகளில் தொழில் துறை ரொம்பவும் மந்தப்பட்டிருந்த தருணத்தில் மிகவும் தைரியமாக அவர் உடுப்பி சுற்று வட்டாரத்தில் ஓடுகள் தயாரிக்கும் தொழிலகம் ஒன்று தொடங்கினார். மங்களூர் போன்ற ஊர்களில் ஆற்றங்கரைகளில் ஓடு தயாரிப்புத் தொழிலகம் ஆரம்பிக்கலாம்; பாறைகளே பரவலாகக் கிடக்கும் மணிப்பாலிலா தொடங்குவார்கள்! எல்லோரும் திகைத்து நிற்க திரு பய் எடுத்த காரியத்தில் வெற்றி கண்டார். ''மணிப்பாலின் மந்திரவாதி'' என்று வர்ணிக்கப் பெற்றார்.

அவரது உழைப்பெனும் மந்திரக் கோலும் அறிவாற்றல் எனும் மந்திரப் பொடியும் சாதித்தவை இதனினும் ஏராளம்.

மணிப்பாலின் பாறைகளுக்கு இடையே விவசாயத்துக்கு ஏற்ற நிலத்தையும் கண்டு பிடித்தார் பய். ''கானரா நில முதலீடு நிறுவனம்'' எனத் தொடங்கி விவசாயத்தை ஒரு ஜீவனோபாயமாக அன்றி நிறுவனமாகவே நடத்தித் தொழில் — வர்த்தக ரீதியான வெற்றி பெற்றார்.

பய் அவர்களின் அபாரமான நெஞ்சுறுதியின் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்வது கஸ்தூரிபா மருத்துவக் கல்லூரி. மருத்துவக் கல்லூரிகளில் சேர ஆசைப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாகவும் அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய இடங்கள் மிகக் குறைவாகவும் இருப்பதை அவர் உணர்ந்தார். 'மாணவர்களின் பெற்றோர்களை கூட்டுறவு முறையில் ஏன் ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கக் கூடாது?' என்று அவருக்குத் தோன்றியது. புதிய மருத்துவக் கல்லூரிக்குத் தேவைப்படும் மூலதனத்தைச் சிறு கூறுகளாகப் பங்கு பிரித்தார். தன் மகன் டாக்டராக முடியும் என்றால் கல்லூரி தொடங்க உதவ முன்வராத செல்வந்தன் யார்? பெற்றோர்கள் மனமுவந்து நன்கொடைகளை வழங்கினார்கள்; ஒத்துழைத்தார்கள். கூட்டுறவு முறையின் சிறப்புக்கு உன்னதமான எடுத்துக்காட்டாக விளங்குகிறது மணிப்பால், கஸ்தூரிபா மருத்துவக் கல்லூரி. 1953லேயே ஏகப்பட்ட விண்ணப்பங்கள். அடுத்த பல ஆண்டுகளுக்கு இடம் 'ரிசர்வ்' செய்ய அன்றைக்கே நன்கொடை வழங்கியவர்கள் ஏராளம்.

இதே நேரத்தில் குறை கூறியவர்களும் இல்லாது போகவில்லை. ''மணிப்பாலிலாவது, மருத்துவக் கல்லூரியாவது? அனாடமி வகுப்புக்கு ஓர் அனாதைப் பிணம் கூடக் கிடைக்காது'' என்று கிண்டல் செய்தனர். நல்லவேளை அனாதைகளாக இறந்த பலர், உயிருடன் இருக்கும் இவர்களைப் போன்ற சந்தேகப் பிராணிகளுக்குப் பதில் கூறினர். அந்தக் கல்லூரி இன்று வெள்ளி விழாக் கொண்டாடி விட்டது. மங்களூர், மணிப்பால் ஆகிய இரு இடங்களிலுமாக இயங்குகிறது. இதோடு மணிப்பால் பொறி இயல் கல்லூரி, உடுபி சட்டக் கல்லூரி போன்றவையும் உருவாகியுள்ளன.

இவையெல்லாம் அந்த வட்டார இளைஞர்களுக்குக் கல்வி வசதி அளிக்க 1942ல் பய் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட ''பொதுக் கல்வி அகாடமி''யின் அங்கங்களாக அமைந்தவை. இன்று வரை கலை, விஞ்ஞான, வர்த்தகக் கல்லூரிகள் ஆறு; நாலு தொழில் கல்லூரிகளும் பள்ளிகளும்; ஏழு உயர்நிலைப் பள்ளிகள்; இரண்டு ஆரம்பப் பள்ளிகள்; ஒரு நர்சரி ஆகியன தோன்றியுள்ளன!

நேருஜி பெயரால் முதல்தரமான ஒரு நூலகமும், சங்கீதம், நுண்கலைகள் பள்ளியும் உண்டு.

'வந்தது வரட்டும்' என்று முன்னேறுகிற போக்கும் சில புதிய உத்திகளை திரு பய் துணிந்து கையாளுகிற விதமும் அவரை நன்கு அறியாதவர்களை ஆரம்பத்தில் பயமுறுத்தி விட்டுவிடும். குறை கூறச் செய்யும்.


''கடலில் விழுந்து முழுகத்தான் போகிறேன் என்று பிடிவாதம் செய்தால் அவரை யார்தான் தடுக்க முடியும்?'' என்று அங்கலாய்த்தார் திரு பய் அவர்களின் நெருங்கிய நண்பர் ஒருவர். பின்னால் அவரே வந்து பய் அடைந்த வெற்றிகளைப் பாராட்டினார். என்றுமே ஒத்துழைத்தவர்களின் வாழ்த்தைவிட எதிர்த்தவர்கள் பாராட்டும்போது ஏற்படும் மகிழ்ச்சியே அலாதிதான்! அத்தகைய மகிழ்ச்சி திரு பய்க்கு நிறையவே கிட்டியிருக்கிறது!

இன்று எண்பது ஆண்டுகள் நிரம்பப்பெறும் திரு பய், வங்கித் தொழிலும் கல்வித் துறையிலும் இமாலய சாதனைகள் புரிந்திருப்பதாகக் கருதலாம். இவ்வளவுக்கும் இவர் அடக்கமே உருவானவர். ''எனது பல வெற்றிகளுக்கும் சந்தர்ப்பச் சூழல்களும், மக்களின் ஒத்துழைப்பும்தான் காரணம்'' என்று அடக்கமாகக் கூறுகிறார்.

ஆனால் நமக்குத் தெரியும், வாய்ப்புக்களை நழுவ விடாமல் பயன்படுத்திக் கொள்வதாலும் சுற்றிலுமுள்ளோரது ஒத்துழைப்பைப் பெறும் ஆற்றலாலும்தான் ஒரு மனிதன் வாழ்க்கையில் உயர்கிறான் என்று.

மணிப்பாலின் மந்திரவாதி டாக்டர் டி. எம். ஏ. பய் அவர்களின் உருவப் படத்தை இவ்விதழ் மேலட்டையில் பெருமையுடன் பிரசுரித்து அவருக்குப் பல்லாண்டு கூறி வாழ்த்துகிறோம்.

— குட்டி கிருஷ்ணன்



மணிப்பால் கல்லூரிகள் வட்டாரத்தின் தோற்றம்

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்

மென்மையான மேனிக்கும் மேன்மையான நிறத்திற்கும் சிறந்தது



முகப் பவுடருடனே...
(பவுடருக்குச் சிறந்த ஆதாரம்)

அல்லது
தனியாகவோ
(உள்ளடங்கிய மேக் அப் கூட!)



பவுடருக்கு ஆதாரமாக உபயோகியுங்கள். மேனியெங்கும் பவுடர் மென்மையாகவும் சமமாகவும் படிந்து, உங்கள் மேக் அப் மணிக்கணக்கில் மாற்றமின்றி இருக்கும்.

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமைத் தனியாகவும் பயன்படுத்தலாம். இது சருமத்தின் ஈரப்பதத்தைப் பாதுகாத்து, உங்கள் மேனியை நாள் முழுவதும் மென்மையாகவும் பொலிவுடனும் வைத்திருக்கும்.

அது மட்டுமா! மேனியின் மாசு அகற்றி, மேலான நிறம் தந்து, முகம் புத்தொளி பெற்றுப் பிரகாசிக்கவும் செய்கிறது.


பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்
நீங்கள் நாள் முழுவதும் அழகாக விளங்க

Pond's

CP-1500

கப்ஸா விடுவது என்பது கைலாசத்துக்குக் கைவந்த கலை. நினைத்தால் ஒரு சரடு திரித்து விடுவார் மன்னன். பரீட்சை ஸீஸனில் பேப்பர் திருத்திக் கொண்டிருந்த என்னைப் பார்த்ததும், 'கடற்கரையிலே உட்கார்ந்து பேப்பர் திருத்தக் கூடாதுங்கற சட்டம் இன்னும் இருக்கோன்னோ?' என்றார். நான் கொஞ்சம் குழம்பிப் போனேன். கடற்கரையிலே உட்கார்ந்து பேப்பர் திருத்துவதாவது!

''1929-ம் வருஷம் ஒரு வெள்ளைக்காரப் பரீட்சாதிகாரி கடற்கரையில் உட்கார்ந்து பேப்பர் திருத்திண்டு இருந்தார். திடீர்னு சற்றும் எதிர்பாராத விதமாக ஒரு பயங்கரக் காற்று அடிச்சுது பாருங்கோ. அத்தனை பேப்பரும் கடலில் போய் விழுந்து விட்டது. சர்வகலாசாலையைச் சேர்ந்தவாளுக்கு என்ன செய்யறதுன்னு தெரியலே. இந்த விஷயத்தைப் பரம ரகசியமாக வைச்சுண்டு அந்த வருஷம் பரீட்சை கொடுத்த அத்தனை மாணவர்களுக்கும் பாஸ்



கப்ஸா கைலாசம்!

ஜி. எஸ். பாலகிருஷ்ணன்

தந்துட்டா! இல்லாட்டி ஒண்ணுமே எழுதாமல் 'பிளாங்க்' பேப்பர் தந்த நான் பி. ஏ. பாஸ் பண்ணியிருப்பேனா? கையோடே ஒரு சட்டம் கொண்டு வந்தா. கடற்கரையிலே உட்கார்ந்து யாரும் பேப்பர் திருத்தக் கூடாதுன்னு!''

கடற்கரையில் கடலைப் பொரி விற்பவர்களைக் காண்கிறோம். சங்கீதம் அப்பியாசம் பண்ணுகிறவர்களைக் காண்கிறோம். ஆனால் பேப்பர் திருத்துபவர்களைக் காண்பதில்லை. அதன் காரணம் கைலாசம் சொன்னபிறகு தான் தெரிந்தது.

சினிமா நடிகை நிரஞ்சன மாதவி நடுநிசியில் பத்திரிகைக்காரர்களுக்கு ஏன் பேட்டி தருவதில்லை தெரியுமா? அவளுடைய காதுகளில் ஒன்று ரப்பரினால் ஆனது! இரவில் அதைக் கழற்றி வைத்து விடுகிறார். பகலில் தலைமுடியினால் மறைத்துக் கொள்வார். இதைக் காதும் காதும்! வைத்தாற்போல் எனக்குச் சொன்னவர் கைலாசம்தான்.

''உமக்கு எப்படித் தெரியும்?'' என்று அதிகப் பிரசங்கித்தனமாக ஒரு கேள்வியை விட்டெறிந்தேன்.

''எனக்கு எப்படித் தெரியுமா? இந்த நிரஞ்சன மாதவி யாருன்னு நெனைக்கறேள்? எங்க ஊர் சமையற்கார சாமாவோட கனிஷ்ட குமாரி. ராஜிக்குட்டின்னு பெயர். எனக்குத் தான் அவளைக் குழந்தையிலிருந்து தெரியுமே. சினிமாவிலே சான்ஸ் கிடைத்ததும் இந்தக் காதுப் பிரச்னை விஷயமா என்னிடம்தான் வந்தாள். 'மாமா, என் முக லட்சணத்தைக் கண்டு சினிமாவிலே கதாநாயகியா எடுத்துட்டான். எனக்கு ஒரு காது மற்றதை விடச் சிறிசுன்னு அவாளுக்குத் தெரியாது. இப்ப என்ன பண்ணறது?' என்றாள். 'அடி அசடே, பயப்படாதே'ன்னு சொல்லி நான்தான் மர்லின் மன்ரோ மணிகிட்டே அவளை அனுப்பி வைத்தேன். அவனுக்கு ரப்பரிலே காது, மூக்கு முதலியன செய்யறதுதான் தொழில். சிறிசா இருக்கிற காது மேலே அவன் செய்த காதைப் பொருத்தினால் எந்தப் பிரம்ம தேவனாலும் கண்டுபிடிக்க முடியாது. மர்லின் மன்ரோவுக்குக்கூட அவன் மூக்கோ காதோ செய்து





''எனக்குக் கொடுக்கப்படும் சம்பளத்துக்கு ஏற்பப் போதிய அளவு வேலை கொடுக்கவில்லை'' என்று ஒரு பெண் காரியதரிசி, தன் முதலாளி மீது கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தாள்.

''பேசாமல் சும்மா இருந்து விட்டு, சம்பளத்தை வாங்கிக் கொண்டு போக வேண்டியது தானே, எதற்கு வழக்கும் வக்காலத்தும்?'' என்று சிலர் அவளிடம் வாதிட்டார்கள்.

''சும்மா உட்கார்ந்திருந்ததால் என் எடை கூடி விட்டது'' என்று புகார் செய்தாள் காரியதரிசி.

ஆனால் அவள் போட்ட வழக்கு தோற்று விட்டது. பலனாக அவளுக்கு வேலையும் போய் விட்டது. ''இனிமேல் இளைத்து விடுவாய்'' என்றார்கள் தோழிகள்.

இடம்: மேற்கு ஜெர்மனி. — சாகா - சாமி

கொடுத்ததாகக் கேள்வி....'' என்று பேசிக் கொண்டே போனார் கைலாசம்.

''பிரபல மில் அதிபர் மன்னார்சாமி வீட்டுக்குப் போயிருக்கேளோ? டிராயிங் ரூமில் அநேகம் கலைப் பொருள்களுக்கு மத்தியில் ஒரு தாம்புக்கயிறு தென்படும். அதன் இரகசியம் யாருக்குமே தெரியாது.... ஒரு காலத்திலே மதுரையிலே பீடி சுற்றி விற்றுண்டிருந்தான் மன்னார்சாமி. வியாபாரத்திலே ஏக நஷ்டம். தற்கொலை பண்ணிக்கிறதுக்காகத் திருப்பரங்குன்றத்துக்குப் போனான். தாம்புக் கயிற்றை மரத்திலே கட்டி, சுருக்குக்குள்ளே கழுத்தையும் விட்டாச்சு. அந்த வேளையிலே அந்தத் தாம்புக் கயிறு அறுந்து தொலைந்தது. தொபுகடீர்னு கீழே விழுந்த மன்னார்சாமி கண்ணிலே ஒரு தோல் பை தென்பட்டது. அது முழுக்க நூறு ரூபாய் நோட்டுக்கள். எந்த கள்ளக்கடத்தல்காரன் என்ன அவசரத்திலே விட்டெறிஞ்சிட்டு ஓடினானோ! ஆககூடி மன்னார்சாமி பெரிய பணக்காரனானான். கண்டெடுத்த பணத்தை வைத்து ஆதியிலே அவனுக்கு ஒரு மளிகைக்கடை வைத்துத் தந்தது நான்தான். மெள்ள மெள்ள முன்னேறி இன்றைக்குப் பெரிய 'இண்டஸ்டிரியலிஸ்ட்'டாக மாறியிருக்கிறான். ஆனால் சரியான சமயத்திலே அறுந்து தனக்குப் புது வாழ்வளித்த தாம்புக் கயிற்றை அவன் மறக்கலே. டிராயிங் ரூமில் பிரதான இடத்தில் தொங்க விட்டிருக்கிறான்.''

கைலாசம் திரித்த இந்தக் கயிற்றில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்காக மன்னார்சாமி வீட்டுக்கு ஒரு தடவை ஏதோ சாக்குச் சொல்லி விஜயம் செய்தேன். அவர் டிராயிங் ரூமில் என்னென்னமோ இருந்தது. ஆனால் தாம்புக் கயிறு மட்டும் இருக்கவில்லை!

கைலாசத்தின் கப்ஸா எந்தப் பிரபலஸ்தரையும் விட்டு வைக்காது.

''ஆர். எஸ். மாணிக்கம் தன் மனைவியை ஏன் விவாகரத்து செய்தான் தெரியுமா?''

''ரெண்டு பேருக்கும் ஒத்துப் போகலேன்னு கேள்வி.''

''ஏன் ஒத்துப் போகவில்லை?''

''எனக்கு என்ன தெரியும்?''

''மஞ்சள் பத்திரிகைக்காரனுக்குக் கூடத் தெரியாது. கல்யாணமென்னமோ காதல் கல்யாணம்தான். அவளுக்குத் துப்பறியும் நாவல்கள்னு கொள்ளை ஆசை. நூற்றுக்கணக்கில் வாங்குவாள். ஆம்படையான்காரன் என்ன செய்யத் தொடங்கினான் தெரியுமோ? அத்தனை புத்தகத்தையும் முன்கூட்டியே படித்துக் கதைகளின் முடிவைச் சொல்லத் தொடங்கினான். அவள் எவ்வளவோ தடவை 'கூடாது'ன்னு சொல்லிப் பார்த்தாள். அவன் கேட்டால்தானே? கடைசியில் வேறு வழியின்றி 'கோர்ட்'டுக்குப் போய் விவாகரத்து வாங்கி விட்டாள்.''

இந்தக் கதையை நான் ஒரு நண்பனிடம் சொன்னேன்.

''மிஸஸ் மாணிக்கமாவது, துப்பறியும் நாவல் படிப்பதாவது! அவளுக்கு எழுத்துக் கூட்டிப் படிக்கக் கூடத் தெரியாதே! அவளுடைய அழகு ஒன்றுக்காகத்தானே மாணிக்கம் மணந்தார்? பிறகு சலித்துப் போனதும் விவாகரத்து செய்தார்'' என்றார் அவர்.

நான் கைலாசத்தின் கற்பனா சக்திக்கு மானசீகமாக அஞ்சலி செலுத்தினேன். கப்ஸா என்றால் இப்படியல்லவா கலப்பற்றதாக இருக்க வேண்டும்?


மாஜி சமஸ்தான திவான் கோபால ஐயங்காரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

'எமகாதகன். யாருக்கும் அஞ்ச மாட்டான். துணிந்து காரியங்கள் செய்வான். சட்டைக்குள் பனியனுக்குப் பதிலாக எப்பொழுதும் இரும்புக் கவசம் அணிந்திருப்பான்' என்றார் கைலாசம்.

பிற்காலத்தில் திவான் கோபால ஐயங்கார் ஒரு சர்வகலாசாலையின் துணை வேந்தராகப் பணியாற்ற நேர்ந்தது. அவரிடம் கைலாசம் சொன்ன இரும்புக் கவசத்தைப் பற்றி விசாரித்தேன். அவர் கடகடவென்று சிரித்தார். பிறகு சட்டைப் பொத்தானைத் திறந்து காட்டினார். 'நீயே பார்த்துக் கொள்' என்றார். பார்த்தேன். உள்ளே பனியன்கூட அணிந்திருக்கவில்லை. வெள்ளைவெளேர் என்று பூணூல்தான் வெற்றுடம்பில் பளிச்சிட்டது!

கைலாசத்தின் கப்ஸா விடும் திறமையைப் பற்றி எழுதிக் கொண்டே போகலாம். அது ஒருநாளும் முடியாது. சமீபத்தில் என்னிடம் ஒரு சிதம்பர ரகசியம் சொல்லியிருக்கிறார். பிரபல கணித மேதை ராமானுஜத்தின் மூளையை அவர் இறந்த பிறகு அமெரிக்கர்கள் திருடிச் சென்றார்களாம். அதைக் கம்ப்யூட்டரின் உதவியைக் கொண்டு இயங்க வைத்துத்தான் விண்வெளிக்குச் செல்லும் கோள்கள் தயாரித்தார்களாம்! இல்லாவிட்டால் அமெரிக்காவது, சந்திரனுக்குப் போவதாவது!

மிகவும் நம்பகமான விசிறி உஷாவிடமிருந்து கிடைக்கிறது.



இதோ அதற்கு சான்று.

மிக நவீன வடிவமைப்பு, தகுந்த
வடிவிலான தடுப்புக் கம்பிகள்,
பாங்காக அமைந்த விசிறிகள்,
நாகரீகமான பியானோ ரக
ஸ்விட்ச்கள், விளிம்புகளில்
நன்கு சரிசெய்யப்பட்ட,
சமமான வர்ணப் பூச்சு—
இவற்றைக் கொண்டவை
உஷா டேபிள் ஃபேன்
உஷா டேபிள் ஃபேன்
அழகானவை; எவ்வித
அலங்காரத்துக்கும் உகந்தவை;
பல கண்கவர் வண்ணங்களி-
லானவை. உங்களை
வந்தடையுமுன், கடுமையான
தரக்கட்டுப்பாட்டுச் சோதனைக்கு
உட்படுகின்றன.
ஆம். மிக நேர்த்தியானவை—
உஷா டேபிள் ஃபேன்களே—
மாதிரியிலும், செயல்பாட்டிலும்
வண்ணத்திலும்.

உஷா மேசை விசிறிகள்

JEW- 346 B

பார்த்திபன் கனவு

அத்தியாயம் 20

பொன்னனும் சிவனடியாரும்

சிவனடியாரைப் பார்த்த பொன்னன் ஏன் அவ்வளவு ஆச்சரியம் அடைந்தான் என்று சொல்ல வேண்டியதில்லை. குதிரையிலிருந்து இறங்கி அந்தச் சிற்ப வீட்டுக்குள் நுழைந்தவர் ஒருவராயும், வெளியே வந்தவர் இன்னொருவராயும் இருந்தது தான் காரணம். இரண்டு பேரும் ஒருவர்தானா, வெவ்வேறு மனிதர்களா?

இந்த ஆச்சரியத்தையும் சந்தேகத்தையும் பொன்னன் முகத்தில் வெளிப்படுத்திய போதிலும், வார்த்தைகளால் வெளியிடவில்லை. வெளியிடுவதற்கு அவனுக்குச் சந்தர்ப்பமும் கிடைக்கவில்லை. ஏனென்றால், அவனைப் பார்த்த வுடனேயே, சிவனடியார், ''பொன்னா! எவ்வளவு சரியான சமயத்தில் வந்தாய் ? இப்போதுதான் உன்னை நினைத்துக் கொண்டிருந்தேன். உறையூருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். இன்னும் சற்று நேரம் கழித்து வந்திருந்தாயானால், என்னைப் பார்த்திருக்க மாட்டாய்....'' என்று பரபரப்புடன் பேசிக் கொண்டே போனார். திண்ணையில் அவர்கள் உட்கார்ந்து கொண்டதும், ''பொன்னா! சீக்கிரம் உன் சமாசாரத்தைச் சொல்லு. ரொம்ப முக்கியமான காரியம் ஏற்பட்டிருக்கிறது. அதைப் பற்றிப் பிறகு சொல்கிறேன். மகாராணியைப் பற்றி ஏதாவது தகவல் தெரிந்ததா?'' என்று கேட்டார்.

பொன்னன், ''தெரிந்தது, சுவாமி!'' என்றான். பிறகு தான் கொல்லி மலை அடிவாரத்துக்குப் போனது, அருவியைப் பிடித்துக் கொண்டு மேலேறியது, அங்கே ஒற்றைக் கை மனிதனும் குள்ளனும் வந்ததைக் கண்டு மறைந்திருந்தது, அவர்கள் திரும்பி வருவார்கள் என்று எதிர்பார்த்து மூன்று நாட்கள் காத்திருந்து விட்டுத் திரும்பியது ஆகிய விவரங்களைச் சொன்னான். காட்டாற்று வெள்ளத்திலிருந்து விக்கிரமனைக் காப்பாற்றியது முதலியவற்றைச் சொல்லவில்லை. சிவனடியாரைப் பற்றிய உண்மையைத் தெரிந்து கொண்டு பிறகு சொல்லலாம் என்று இருந்தான்.

ஒற்றைக் கை மனிதனுடைய தோற்றத்தைப் பற்றி விவரமாகச் சொல்லும்படி சிவனடியார் கேட்க, பொன்னன் அவ்விதமே அவனுடைய பயங்கரத் தோற்றத்தை வர்ணித்து விட்டு, ''சுவாமி! அந்த மனிதன் யார்? உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''பொன்னா! பார்த்திப மகாராஜாவின் பத்தினி அந்தக் கொல்லிமலையிலேதான் எங்கேயோ இருக்கிறாள். சந்தேகமில்லை. இதுவரையில் எனக்கு அர்த்தமாகாத விஷயங்கள் பல இப்போது அர்த்தமாகின்றன. அந்த மனிதன் யார் என்றா கேட்கிறாய்? — மகா புருஷர்களும் பக்த சிரோமணிகளும் தோன்றிய இந்தப் புண்ணிய நாட்டில் நரபலி என்னும் பயங்கர வழக்கத்தைப் பரப்பி வரும் மகா கால பைரவன்தான் அவன். நானும் எவ்வளவோ முயற்சி செய்து வருகிறேன், அவனை நேருக்கு நேர் காண வேண்டுமென்று. இன்று வரையில் முடியவில்லை. அவனைப் பற்றி இன்னொரு சந்தேகம் எனக்கு இருக்கிறது. பொன்னா! ஏன் என் கண்ணில் அகப்படாமல் அவன் தப்பித் திரிகிறான் என்பதை ஒருவாறு ஊகிக்கிறேன். எல்லா உண்மைகளையும் சீக்கிரத்தில் நாம் இரண்டு பேருமாகக் கண்டு பிடிக்கப் போகிறோம், பொன்னா! அதற்கு முன்னால் நமக்கு இன்னும் முக்கியமான காரியம் ஏற்பட்டிருக்கிறது. உனக்கு இப்போது ரொம்பவும் ஆச்சரியம் அளிக்கும் விஷயம் ஒன்றைச் சொல்லப் போகிறேன். சோழ நாட்டு இளவரசர் திரும்ப வந்திருக்கிறார்—'' என்று சொல்லிச் சிவனடியார் பொன்னனுடைய முகத்தை உற்றுப் பார்த்தார்.

அமரர் கல்கி

அவனுடைய முகத்தில் சிறிது வியப்புக் குறி காணப்பட்டதே தவிரக் குதூகலமும் மகிழ்ச்சியும்

தோன்றுவது கண்டு, சிவனடியார், ''என்ன பொன்னா! உனக்கு நான் சொல்வதில் நம்பிக்கை இல்லையா?'' என்று கேட்டார்.

பொன்னன் இன்னும் சிறிது ஜாக்கிரதையுடன், ''தங்களுடைய வார்த்தையில் எனக்கு அவநம்பிக்கை ஏற்படுமா, சுவாமி! ஆனால், இவ்வளவு அபாயத்துக்குத் துணிந்து இளவரசர் ஏன் வந்தார் என்றுதான் கவலையாயிருக்கிறது'' என்றான்.

''உண்மைதான் பொன்னா! இளவரசருக்கு ஏதோ அபாயம் நேர்ந்துவிட்டது. உறையூருக்குப் போகும் பாதையிலேதான் ஏதோ நேர்ந்திருக்கிறது. நாம் உடனே கிளம்பிப் போய்ப் பார்க்கவேண்டும். அருள்மொழித் தேவியைக் கண்டுபிடிப்பதற்கு முன்னால் இளவரசரைக் கண்டுபிடிக்க வேண்டும்'' என்றார்.

பொன்னன் இப்போது உண்மையாகவே பேராச்சரியம் அடைந்தவனாய், ''சுவாமி! இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது? இளவரசரை நீங்கள் பார்த்தீர்களா? எங்கே பார்த்தீர்கள்? அவருக்கு வழியில் ஆபத்து என்று என்ன முகாந்திரத்தைக் கொண்டு சொல்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''பொன்னா! இதென்ன உன்னிடம் இந்த மாறுதல்? நான் சொல்வதில் சந்தேகப்பட்டு முகாந்திரம் கேட்கக் கூட ஆரம்பித்து விட்டாயே?—நல்லது சொல்லுகிறேன், கேள்! இளவரசரை நானே பார்த்தேன்; பேசினேன். நான் தான் உறையூருக்கும் அனுப்பினேன்.''

''எதற்காக, சுவாமி!''

''எதற்காகவா? ஜன்ம தேசத்தைப் பார்த்து விட்டு வரட்டும் என்றுதான். பொன்னா! ஒருவனுக்குத் தன்னுடைய பிறந்த நாட்டில் அன்பு எப்போது பூரணமாகும் என்று உனக்குத் தெரியுமா? கொஞ்ச காலமாவது அயல் தேசத்திலிருந்து விட்டுத் திரும்பி வரும்போதுதான். இரண்டு மூன்று வருஷங்கள் அயல் நாட்டிலிருந்து விட்டு ஒருவன் திரும்பித் தன் தாய் நாட்டுக்கு வரும்போது, பாலைவனப் பிரதேசமாயிருந்தாலும், அது சொர்க்க பூமியாகத்தான் தோன்றும். வளங்கொழிக்கும் சோழ நாட்டைப் பற்றிக் கேட்க வேண்டுமா? உங்கள் இளவரசருக்குத் திரும்பவும் இந்நாட்டை விட்டுப் போகவே மனம் வராதபடி செய்ய வேணுமென்று விரும்பினேன்;—பார்த்திப மகாராஜாவுக்குப் போர்க்களத்தில் நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு. ஆனால் வழியில் இப்படிவிபத்து ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கவில்லை. ஐயோ! பகவானே! நாளை அருள்மொழி ராணி கேட்டால் நான் என்ன செய்வேன்...''

''சுவாமி! இளவரசருக்கு என்ன ஆபத்து நேரிட்டது? அது எப்படி உங்களுக்குத் தெரியும்?'' என்று பொன்னன் கேட்டான்.

''இன்றைக்கு ரொம்பக் கேள்விகள் கேட்கிறாய், பொன்னா! என்ன ஆபத்து நேர்ந்தது என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஏதோ நேர்ந்து மட்டும் இருக்கிறது. அதோ அந்தக் குதிரைக்குப் பகவான் பேசும் சக்தியை மட்டும் அளித்திருந்தால், அது சொல்லும்.... ஆமாம்! இந்தக் குதிரை மேல் ஏறிக் கொண்டுதான் உங்கள் இளவரசர் கிளம்பினார். இதே இடத்திலிருந்துதான் புறப்பட்டார். ஆனால், இரண்டு நாளைக்குப் பிறகு குதிரை மட்டும் தனியாகத் திரும்பி வந்திருக்கிறது. இளவரசருக்கு எங்கே, என்ன நேர்ந்தது என்பதை நாம் இப்பொழுது உடனே போய்க் கண்டுபிடிக்க வேண்டும். நீயும் என்னோடு வருகிறாயல்லவா, பொன்னா! உனக்குக் குதிரை ஏறத் தெரியுமா?'' என்று சிவனடியார் கேட்டார்.

''தெரியும் சுவாமி! ஆனால். நான் தங்களுடன் வருவதற்கு முன்னால் தங்களிடம் இன்னும் சில விஷயங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்றான் பொன்னன்.

''என்ன?'' என்று சிவனடியார் தம் காதுகளையே நம்பாதவர் போல் கேட்டார்.





''ஆமாம்! இன்னும் சில விவரங்கள் தெரிய வேண்டும். முக்கியமாகத் தாங்கள் யார் என்று சொல்ல வேண்டும்'' என்றான்.

சிவனடியாரின் முகத்தில் புன்னகை அரும்பியது.

''ஓஹோ! அப்படியா?'' என்றார்.

''சற்று முன்னால் சாலையில் தாங்கள் குதிரை மீது வந்ததை நான் பார்த்தேன். அப்போது வேறு உருவம் கொண்டிருந்தீர்கள்; இந்த வீட்டுக்குள்ளே போய் வெளியே வரும்போது வேறு ரூபத்தில் வந்தீர்கள். ஆனால், இந்த இரண்டு உருவமும் தங்களுடைய சொந்த உருவம் அல்ல என்று எனக்குத் தோன்றுகிறது. இந்தச் சந்தேகம், சுவாமி எனக்கு வெகு நாட்களாகவே உண்டு. ஆனால் இப்போது கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறது. உண்மையில் தாங்கள் யார் என்று சொன்னால்...''

''சொன்னால் என்ன?''

''சுவாமி! மிகவும் முக்கியமான ஒரு விஷயம் — தாங்கள் அறிந்துகொள்ள விரும்பக் கூடிய விஷயம் — எனக்குத் தெரியும்; அதைச் சொல்லுவேன், இல்லாவிட்டால் என் வழியே நான் போவேன்.''

சிவனடியார் சற்று யோசித்தார். பொன்னனுடைய முகத்தில் உள்ள உறுதிக் குறியைக் கவனித்தார்.

''பொன்னா! அவசியம் நீ தெரிந்து கொண்டுதான் தீர வேண்டுமா?''

''ஆமாம், சுவாமி!''

''அப்படியானால், சொல்லுகிறேன். ஆனால் நீ எனக்கு ஒரு வாக்குறுதி கொடுக்க வேண்டும். வேறு யாரிடமும் சொல்லக் கூடாது. பரம இரகசியமாய் வைத்திருக்க வேண்டும்'' என்றார்.

''அப்படியே செய்கிறேன், சுவாமி!''

''போர்க்களத்தில் வீர மரணமடைந்த பார்த்திப மகாராஜாவின் ஆணையாகச் சொல்வாயா?''

''பார்த்திப மகாராஜாவின் ஆணையாகச் சொல்கிறேன், சுவாமி!''

''அப்படியானால் இதோ பார்!'' என்று சிவனடியார் அன்று போர்க்களத்தில் பார்த்திபன் முன்னால் செய்ததுபோல் தம்முடைய ஜடாமகுடத்தையும் மீசை தாடிகளையும் நீக்கினார்.

பொன்னன், ''பிரபோ! தாங்கள் தானா?'' என்று சொல்லி அவர் முன்னால் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான்.

''இதற்கு முன்னால் வள்ளி உனக்குச் சொல்லவில்லையா, பொன்னா?'' என்று சிவனடியார், மீண்டும் ஜடா மகுடம் முதலியவற்றைத் தரித்துக் கொண்டு கேட்க, ''வள்ளி பெரிய கள்ளியாயிற்றே? நிஜத்துக்கு மாறான விஷயத்தைச் சொன்னாள். தங்களைத் தான் அவள் சொல்கிறாள் என்று நான் சந்தேகித்துக் கேட்டேன். இல்லை, தாங்கள் பார்த்திப மகாராஜா என்று ஒரு பெரிய பொய் புளுகினாள். அவளை லேசில் விடுகிறேனா பாருங்கள்! எனக்கும் இப்போது ஒரு பெரிய இரகசியம் தெரியும். அதை அவளுக்குச் சொல்வேனா?'' என்றான்.

பிறகு, பொன்னன் காட்டாற்று வெள்ளத்தில் தான் இறங்கி இளவரசரைக் காப்பாற்றியதுமுதல் அவரைக் குந்தவி தேவி தன் பல்லக்கில் ஏற்றி அழைத்துச் சென்றது வரையில் எல்லா விவரங்களையும் சவிஸ்தாரமாய்ச் சொன்னான்.

இதற்கு முன்னெல்லாம் எதற்கும் ஆச்சரியம் அடையாதவராயிருந்த சிவனடியார் இப்போது அளவிட முடியாத வியப்புடன் பொன்னன் கூறிய விவரங்களைக் கேட்டுக்கொண்டிருந்து விட்டு, ''பொன்னா! உங்கள் இளவரசரைப் பற்றிய கவலை தீர்ந்தது. விக்கிரமன் பத்திரமாயிருப்பான். நாம் அருள்மொழி தேவியைத்தான் தேடி விடுதலை செய்ய வேண்டும்'' என்றார்.

(தொடரும்)

ஸ்ரீ சங்கர ஜயந்தி யஜுர் வேத ஜடா பாராயணம் காஞ்சீபுரம் ஸ்ரீ சங்கர பக்த ஜன சபா சார்பில் ஸ்ரீ சங்கர ஜயந்தியை முன்னிட்டு 22-4-77 முதல் 5-5-77 வரை ஸ்ரீ ஆதிசங்கரர் சன்னிதியில் நடைபெற்றது. இந்தப் பாராயணத்தில் சம்மானம் பெற்ற வித்வான்கள் எல்லோரும் ஸ்ரீ மடம் ஆஸ்தான வித்வான் ஸ்ரீ ராமஸ்வாமி சர்மா அவர்களிடம் வேதம் பயின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



உ

தருமையாதீனம் வைத்தீஸ்வரன் கோயில்

ஸ்ரீ வைத்யநாதசுவாமி, ஸ்ரீ தையல்நாயகி,
ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி சந்நிதிகளில்,
திருவிளக்கு அறக்கட்டளை நிறுவி அருள்பெற
ரூ. 1000 - காணிக்கை செலுத்துங்கள்.



தீராத நோயெல்லாம் தீர்த்தருளும் ஈசன் ஸ்ரீ வைத்யநாதப் பெருமான், மங்கையர்க்கு மங்கலநாண் காத்தளிக்கும் தெய்வம் ஸ்ரீ தையல்நாயகி அம்மை. அவ்வுலகிற்கு ஆாருளும், இவ்வுலகுக்கு இரும்பொருளும் ஈந்தளிக்கும் முருகன் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி எழுந்தருளியுள்ள பிரார்த்தனை ஸ்தலம் வைத்தீஸ்வரன் கோயில். ஷை சந்நிதிகளில் திருவிளக்கிடுவதற்கு நாள் 1க்கு ரூ. 100 - ஆகிறது. பக்தர்கள் இவ்விளக்கீட்டுப்பணியில் பங்கேற்க ஒரு வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

விளக்கிடுவதால் நம் அறிவு விளக்கம் பெறும். வீடும் நாடும் விளக்கமுறும். நாமும் நம் சந்ததியும் நல்லறிவு பெறுவோம். இது பற்றியே ''விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்நெறி ஞானமாகும்'' என்றார் அப்பர் பெருமான். ''அறிவுடையார் எல்லாம் உடையார்'' என்றார் திருவள்ளுவரும். ''வினைதீர்த்தான் கோயில் விளக்கழகு'' என்பது இக்கோயிலைப் பற்றிய பழமொழி ஆதலால் இத்திருக் கோயிலில் திருவிளக்கு அறக்கட்டளை தொடங்கப்பட்டிருக்கிறது. இந்நல்லறப்பணிக்கு இந்தியன் பாங்க் மூலம் நிலையான முதலீட்டுத் தொகையாக ஸ்ரீ வைத்தியநாதசுவாமி ஆலயத்துக்கு ரூ. 1000 - அனுப்பிவையுங்கள். உங்கள் காணிக்கை மாயூரம் இந்தியன் பாங்க் கிளையில் உள்ள ஷை ஆலய திருவிளக்கு அறக்கட்டளை நிதியில் நிலையான முதலீடாக சேர்க்கப்படும். நீங்கள் குறிப்பிடும் ஏதேனும் ஒருநாளில் (பிறந்தநாள், திருமண நாள், முன்னோர் நினைவு நாள் போன்றவை) ஷை முதலீடு வட்டித் தொகையிலிருந்து உங்கள் குடும்ப நலங்கருதி ஷை சந்நிதிகளில் திருவிளக்கிட்டு அர்ச்சனை செய்யப்படும். நீங்கள் பிரசாதத்தை நேரிலோ, தபால் மூலமோ நிரந்தரமாகப் பெறலாம். ஆகவே உடனடியாக உங்கள் காணிக்கையை செலுத்தி ஸ்ரீ வைத்யநாதப்பெருமான் திருவருளைப் பெறுவீர்களாக.

உங்கள் காணிக்கைகளை எந்தக் கிளையிலும் செலுத்தலாம்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் உத்திரவுப்படி
வித்வான் இராமலிங்கத் தம்பிரான் கட்டளை விசாரணை

IB/2625

தேய்ந்துபோன, பழைய ரப்பர் ரோலர்களைத் தூக்கிஎறிவது, நீங்கள் மிச்சப்படுத்தக் கூடிய பணத்தைத்தூக்கி எறிவது போலாகும். இரண்டே வாரங்களில் 27 சென்டிமீட்டரிலிருந்து 300 சென்டிமீட்டர் அளவு வரையிலுள்ள உங்கள் பழைய ரோலர்களைப் புதுப்பித்துத் தருகிறோம் — தனிப்பட்ட ஒரு சிறப்பு ரப்பர் கலவையைக் கொண்டு, உங்கள் ரோலர்களை மீண்டும் சிறப்பாக இயங்குமாறு வார்க்கிறோம்— அச்சு, நெசவு, மிட்டாய் தயாரித்தல், தோல் பதனிடுதல்—எந்தத் தொழிலுக்குரிய ரோலர்களாயினும் சரி.

உங்கள் ரோலர்கள் மறு வாழ்வு பெறுகின்றன

எங்கள் உறுதியான ரப்பர் கலவை உதிர்ந்துவிடாமல் நீடித்து நிலைக்கிறது. எவ்வித சீதோஷ்ண நிலையிலும் சீக்கிரமாகத் தேய்வதில்லை.

பழைய ரப்பர் முழுமையாகக் களையப்படுகிறது


எங்கள் ரப்பர் வார்ப்பு முறை தனிச் சிறப்புடையது. மேல் பூச்சாக ரப்பரைப் பொருத்தாமல் ரோலரின் உலோகத் தாலாகிய பாகத்தின்மேல் புதிதாக வார்த்துக் கொடுக்கிறோம். இவ்வாறு உங்கள் ரோலர்களைப் பலமுறை புதுப்பித்து உபயோகிக்கலாம்.

உங்கள் ரோலர்கள் எப்போதாவது தேய்வடைந்தால் எங்களிடம் அனுப்புங்கள். அவைகளுக்குப் புது வாழ்வு அளிக்கிறோம். உங்கள் செலவை மிச்சப்படுத்துகிறோம்.

SIRUBBER

மீண்டும் உருண்டோடும் உங்கள் ரோலர்கள் — மீண்டும் வருவீர்கள் எங்களை நாடி.


சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
உசிலம்பட்டி ரோடு, கோச்சடை, மதுரை 625 016



உங்கள் பழைய ரோலர்களின்மேல் நாங்கள் புதிதாக வார்க்கும் ரப்பர் உங்கள் செலவை மிச்சப்படுத்துகிறது.

இதனைத் தென்னகத்தில் நாங்கள் செய்கிறோம்.

SAA/SI/2541



தாரய ஸம்ஸார ஸாகரத:

என்று முதல் ச்லோகத்தை ஆசார்யாள் முடிக்கிறார். "ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கரையேற்று!" என்று அர்த்தம்.

தாரகம் என்றால் கடத்துவிப்பது; படகிலே வைத்து ஓட்டிக் கொண்டு போவது என்று அர்த்தம். பிரணவத்தையும், ராம நாமாவையும் தாரக மந்திரம் என்று சொல்வது வழக்கம். "தாரக நாமா" என்று தியாகராஜர்கூட ராமசந்திர மூர்த்தியைப் பாடியிருக்கிறார். ஸம்ஸாரக் கடலில் விழுந்து, அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிற நம்மைப் படகிலே தூக்கிப் போட்டுக் கொண்டு பரம பதமான அக்கரையில் கொண்டு போய்ச் சேர்ப்பதுதான் தாரக மந்திரம்.

இந்த ச்லோகத்தில் என்னென்னவோ வேண்டிக் கொண்டாரே, அவிநயம் போக வேண்டும், மனஸ் அடங்க வேண்டும், இந்திரியங்களின் கானல் நீர் வேட்டை முடிய வேண்டும், ஸமஸ்த ஜீவராசிகளிடமும் தயை பெருக வேண்டும் என்றெல்லாம் வேண்டிக் கொண்டாரே, அத்தனைக்கும் முடிந்த முடிவு என்ன என்றால், ஸம்ஸாரம் என்ற இந்த ஜனன — மரண சக்கரத்திலிருந்து தப்பி, மோக்ஷஸ்தானம் என்ற நித்ய சுகமான விடுதலை நிலையில் சேர வேண்டும் என்பது தான்.

இப்போது நாம் இந்த ஸம்ஸாரத்தில் சிக்கிக்கொண்டு அவதிப்படுவது நன்றாகத் தெரிகிறது. இதிலிருந்து மீளவேண்டும். மீட்கிறவன் பகவான்தான். அவனிடம்,

தாரய ஸம்ஸார ஸாகரத:

என்று பிரார்த்தனை பண்ணலாம். அவன் இந்த ஸம்ஸாரக் கடலிலிருந்து நம்மை மீட்டானானால் இப்போது நாம் இந்த லோகத்தில் படுகிற துக்கம், கஷ்டம் இராது. அந்த மட்டில் இப்போதைக்குப் போதும். உங்களுக்கு நான் அத்வைத முக்தி, த்வைத முக்தி, விசிஷ்டாத்வைத முக்தி என்ற பேதங்களையெல்லாம் இங்கே சொல்லப் போவதில்லை. எந்த ஸித்தாந்தத்தைச் சேர்ந்தவர்களானாலும் பகவத்பாதாள் இந்த ச்லோகத்தில் சொல்லியிருக்கிற மாதிரி பகவானிடம் பிரார்த்தனை பண்ணுவோம். பிரார்த்தனைக்குப் பலனைத் தரவேண்டிய பலதாதாவாக இருக்கப்பட்ட பகவான் எந்தத் தினுசில் நமக்கு இந்த ஸம்ஸாரத்திலிருந்து மீட்சி தர நினைக்கிறானோ, அப்படித் தருவான்.

இங்கே "தாரய ஸம்ஸார ஸாகரத:" என்று சொன்ன மாதிரியே, இதைவிடக்கூட மனஸை உருக்கும்படியாக, 'பஜகோவிந்த'த்திலும் ஆசார்யாள்

இஹ ஸம்ஸாரே பஹு துஸ்தாரே
க்ருபயா பாரே பாஹி முராரே

என்று முறையிடுகிறார்.

தாரம் — கடப்பது; துஸ்தாரம் — கடக்க முடியாதது. பஹு துஸ்தாரம் — இந்த ஸம்ஸாரம் அடியோடு கடக்க முடியாதது தான். அதாவது நாமாக எத்தனை முயற்சி பண்ணினாலும் முடியாது. ஆனால் பகவானின் கிருபை பொங்கி வந்து விட்டால் இந்த ஸம்ஸாரம் என்ன பண்ணும்? அவனுடைய அருளால் எதைத்தான் செய்ய முடியாது? "அப்படிப்பட்ட உன் கிருபையால் என்னை அக்கரை சேரப்பா, முராரி" என்று பிரார்த்திக்கிறார். பாரம் என்றால் கரை. (இங்கே ஸம்ஸாரக் கடலின் அக்கரையில் சேர்க்கச் சொல்வதாக அர்த்தம்.) அபாரம் என்றால் கரையில்லாதது. அபார அழகு, அபார குணம், அபார சக்தி என்றெல்லாம் நாம் சொல்வதற்கு இவை கங்கு கரையின்றி, அதாவது எல்லையில்லாமல் இருப்பதாகப் பொருள்.

புத்தியிலும், ஞானத்திலும், வாக் சக்தியிலும் மேரு மாதிரியான நம் ஆசார்யாள், பரம பவ்யமாக அடங்கி நின்று, 'நம்மால் ஆவது எதுவுமில்லை; ஈச்வர கிருபைதான், தயைதான் எதையும் செய்யும்' என்கிற விநயத்தோடு கூட 'க்ருபயா', 'தயயா' என்று சொல்கிற இடங்கள் 'ஸௌந்தர்ய லஹரி'யிலும் உண்டு. "தகுதி பார்க்காமல் என்னையும் உன் கடாக்ஷ தாரையால் கிருபையோடு கூட ஸ்நானம் பண்ணுவிப்பாய் அம்மா" என்கிற இடத்தில் "ஸ்நபய க்ருபயா மாம் அபி சிவே" என்கிறார். மறுபடியும், "அம்மா, என் தலையிலும் கூட உன் பாதங்களைத் தயையோடு வைப்பாய்" என்கிறபோது, "சிரஸி தயயா தேஹி சரணௌ" என்கிறார்.

ஷட்பதீ ஸ்தோத்திரத்தில் 'க்ருபயா' என்று போடா விட்டாலும் இந்தத் துதி பூராவும் பகவானின் கிருபையையும் அனந்த கல்யாண குணங்களையும் பரம மங்கள ஸ்வரூபத்தையும் நினைத்துக் கொண்டேதான் செய்திருக்கிறார்.

அடுத்த ச்லோகத்தில் பகவானின் பாதத்தை வர்ணிக்கிறார் நம் பகவத்பாதாள்.

(தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

ஓடோமாஸ் மட்டுமே உங்களுக்குக் கொசுக் கடியிலிருந்து 2-விதங்களில் பாதுகாப்பை அளிக்கிறது.

நீங்கள் இரவில் நிம்மதியாக உறங்க உதவுகிறது.


இதர கொசு விரட்டியைப் போலல்லாது ஓடோமாஸ் உங்களைப் பாதுகாக்கிறது.

1



அதன வாசனை கொசுக்களை விரட்டி அடிக்கிறது.

2



அதன் ஒப்பற்ற கலவைப்பொருள் உங்கள் சருமத்தை இரவு முழுவதும் கொசுக்களிலிருந்து கவசம்போல் காக்கிறது.

இன்று இந்தியாவில அதிகமாக விற்பனையாகும கொசு விரட்டி ஓடோமாஸ என்பதில் விந்தை எதுவுமில்லை.

உடனே
ஓடோமாஸ்
உபயோகியுங்கள்.

இல்லையேல்
கொசுக்கள் உங்களுக்கு சொல்ல முடியாத தொல்லையைத் தரும்.




சிறு குழந்தைகளின் மென்மையான மேனிக்கு முற்றிலும் பத்திரமானது

மச்சர்
கா
துஷ்மன்

பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு
நவீனமான வசதிகள்
BALSARA

CHAITRA.BLS.66.TAM



பனி நிலவு

மாயாவி

அத்தியாயம் 1

பனி நிலவில் ஒரு கனவு

டிர்ர்ர்ர்கிங் !

'அலாரம் கடிகாரம் அலறி, ஆழ்ந்த துயில் கொண்டிருந்த மோகனை எழுப்பும் தன் கடமையை நிறைவேற்றியது !

அதேபோல் கடமையில் கண்ணுனை மோகனின் தந்தை ஜகதீசன் கூடத்துக் கட்டிலிலிருந்து குரல் கொடுத்தார் — ''மோகன் ! மணி நாலாயிடிச்சு. ம்... ம்... எழுந்திரி !''

அவரை அடுத்து, மோகனின் அறை வாயிலிலேயே ஒலித்தது அவன் அம்மா கனகத்தின் அன்பொழுகும் கடமைக் குரல் —

''மோகனு ! எழுந்திரிச்சி பல் தேய்ச்சு, முகம் கழுவிக்கிட்டு, காப்பி சாப்பிட வா, கண்ணு !''

இந்தக் கடமை ஒலிகளை யெல்லாம் இன்பத்துடன் வரவேற்பவன்தான் மோகன். குறிப்பாகத் தன் தாயின் ''மோகனு!'' என்ற அன்பழைப்பை ஒவ்வொரு தடவை கேட்கும்போதும் அவன் உடலே புல்லரித்துப் போகும். ''மோகன்'' என்ற அவனுடைய ஆண்பால் பெயரை, ''மோகனு'' என்ற பெண்பால் பெயராக்கி அவள் அழைக்கும்போது 'பாவம்!


தனக்கு ஒரு பெண் குழந்தை இல்லாக் குறையை அம்மா எவ்வளவு சாதுரியமாக ஈடுசெய்து கொள்கிறாள்!' என்று அவன் புன்முறுவலுடன் நினைத்துக் கொள்வான்.

அது எப்பொழுதுமே அப்படித்தான் —ஒரே குழந்தை — ஒரே சந்ததியாக இருக்கும் எவருமே பெற்றோரின் அன்பெனும் ஆற்றுப் பெருக்கில் ஒரேயடியாக மூழ்கடிக்கப்பட்டு விடுவார்கள்!

மோகன் படுக்கையில் புரண்டு நெளிந்தான். அலாரத்தின் கடமை ஒலியையும், தந்தையின் பாசக் குரலையும், தாயின் அன்பு அழைப்பையும் புளகத்துடன் ஏற்றுத் துயில் நீங்கும் அவனுக்கு, இன்று அந்த ஒலிகள் ஒருவிதச் சலிப்பையே ஏற்படுத்தின.

''ப்ச்சு!'' என்று அதன் உதடுகள் அலுப்புடன் முணுமுணுத்தன. ''போச்சு! எல்லாம் போச்சு!''

உண்மையில் உருப்படியான எதுவும் எங்கும் போய் விடவில்லை. மோகன் என்ற அந்த இருபத்தாறு வயது அழ



கிய இளைஞன் தன் சொந்த ஊரான திண்டிவனத்தை அடுத்த வேலவனூரில், தங்கள் புராதன வீட்டின் படுக்கை அறையில்தான் இருந்தான். அவன் தந்தை ஜகதீசன் — வேலவனூரின் மிராசதார்களில் ஒருவர் — அந்த வீட்டுக் கூடத்து ஊஞ்சலில் படுக்கையில் அமர்ந்தவாறு வெற்றிலைச் செல்லத்தை இழுத்து வெற்றிலை போட்டுக்கொண்டுதான் இருந்தார் — அது அவருடைய பழக்கம்; தூங்கி எழுவதென்றால் வெற்றிலைச் செல்லத்தின் முகத்தில்தான் அவர் விழிப்பார். அவன் அம்மா கனகம்— அந்த நாற்பத்து நான்கு வயதிலும் இளமை

குன்றாத எழில் மங்கை — மகனுக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடிவிட்டு, அவனுக்குக் காப்பி போட்டுக் கொடுப்பதற்கென்று முந்தின நாள் இரவே எடுத்து வைத்திருந்த பாலைச் சூடு பண்ணுவதற்காகச் சமையல் அறையை நோக்கி நடந்து கொண்டுதான் இருந்தாள். ஏன்? மோகனின் உள்ளத்தில் இப்பொழுது சில காலமாக நீங்கா இடம் பெற்றிருந்த ஜெயா கூடத் தன் கொள்ளை எழிலுடன், தேனினிய குரலுடன், மோகனைச் சொக்க வைக்கும் மோகனப் பார்வையுடன், சென்னையில் தன் மந்தைவெளிப்பாக்கம் வீட்டில் தான் இருந்தாள்.

ஆயினும் எல்லாவற்றையுமே பறி கொடுத்து விட்டது போன்ற ஒருவிதச் சலிப்பு அச்சமயம் மோகனுக்கு ஏற்படத்தான் ஏற்பட்டது. ஏன்? காரணம் என்ன?

கற்பனையில் மட்டுமே இருந்து வந்த மோகனின் நினைவுகளுக்கு ஒரு கனவு வடிவம் கொடுத்திருந்தது அவனுடைய அன்றைய உறக்கம். ஆனந்தமான அந்தக் கனவைக் கலைத்து அவனை எழுப்பி விட்டது இந்த அலாரம் கடிகாரம்; கலைத்து விட்டனர் இந்த அப்பாவும், அம்மாவும்!

மூன்று இடங்களிலிருந்து எழுந்து வந்த மூன்று விதமான உசுப்பல்கள் மோகனைத் தூக்கத்திலிருந்து விழித்தெழச் செய்துவிட்டன; எனினும், அவன் அந்தக் கனவுலகிலிருந்து இன்னும் நினைவுலகுக்கு வந்துவிடவில்லை. போதை தெளிந்த பின் உடலில் பரவி நிற்கும் புத்துணர்ச்சியைப் போல், அந்தக் கனவு லாகிரி இப்பொழுது அவனிடம் ஒருவிதக் கிளுகிளுப்பைத் தோற்றுவித்திருந்தது.

ஆஹா! எப்பேர்ப்பட்ட கனவு அது!

மோகன் அந்த இனிய கனவை நினைவுக்குக் கொண்டு வர முயன்றான்.

அதன் நிலைக்களன் இந்தியாவின் வட எல்லையான காஷ்மீர். அவனும் அவனுடைய ஜெயாவும் அங்கே வந்திருந்தனர். ஆம்; ஜெயா மட்டும்தான்; தாயற்ற ஒரே மகனை நிழலாகப் பின்தொடர்ந்து, கண்ணை இமை காப்பது போல் காத்து வரும் தந்தை கல்யாணசுந்தரம் கூட அப்பொழுது அவனுடன் வரவில்லை. பின் என்ன? தேனிலவை உல்லாசமாக அனுபவிக்க வரும் புது மணத் தம்பதியருடன் அவர்களுடைய பெற்றோர்களும் வருவார்களா என்ன?

மோகனும் ஜெயாவும் தங்கியிருந்தது ஒரு படகு வீடு. ஒரு 'போஷ்' பங்களாவின் வசதிகள் அனைத்தும் கொண்டிருந்த அந்தப் படகு வீட்டின் பெயர் தாஜ் மஹல்! காதலின் சின்னம்! அப்பொழுது ஏப்ரல் மாதம். பனிக் காலத்தின் பிற்பகுதி. ஆயினும் காஷ்மீரின் சீதோஷ்ண நிலை இன்னும் ஆறு டிகிரியிலேயே இருந்தது. இரவு நேரம்; முழு நிலவை நெருங்கும் காலம். மேகமற்ற வானில் சந்திரன் பவனி வந்து கொண்டிருந்தான். நம் ஊராக இருந்தால் அத்தகைய நிர்மலமான வானத்தில் சந்திரன் பால் நிலவைப் பொழிந்து கொண்டிருப்பான். ஆனால் இங்கே அவனால் பனி நிலவைத்தான் பொழிய முடிந்தது. அவனுடைய ஒளி மயமான குளிர்க் கிரணங்களைப் , பனியின் பொழிப்பு மங்கலாக்கி யிருந்தது. மேக மூட்டம் சூழ்ந்த மங்கிய பகல் பொழுதைப் போல், எங்கும் ஒருவித மந்தமான நிலவே பரவியிருந்தது.

அந்தப் பனி நிலவுப் பொழுதில் மோகனும் ஜெயாவும் இரவுச் சாப்பாட்டை முடித்துக்







கொண்டு, தாஜ் மஹாலின் 'டெர்ரஸ் கார்டன்'னில் ஆளுக்கு ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தனர். இருவர் உடலையும் கனத்த கம்பளி ஆடைகள் மூடியிருந்தன. ஜெயா, தன் மேக வர்ண சாரியின் மேலே, பச்சை நிறக் கம்பிளிக் கோட்டு ஒன்றைத் தரித்திருந்தாள். கோட்டு என்று பெயரே தவிர, அது அவளுடைய பூவுடலை ஒரு காதலனை விட இறுக்கமாகத் தழுவியிருந்தது. பனி நிலவின் மிதமான வெளிச்சத்தில் ஜெயாவின் எடுப்பான உடற்தோற்றத்தை வைத்த விழி வாங்காமல் மாந்திக் கொண்டிருந்தான் மோகன்.

ஜெயா 'களுக்'கென்று சிரித்தாள். பெண்களின் சிரிப்பே ஒரு போதைப் பொருள்தான். அதிலும் தேனையும் விடத் தித்திக்கும் குரல் ஜெயாவுக்கு. எனவே, அந்தச் சிரிப்பு, மோகனுக்கு ஸ்வர நயத்துடன் கூடிய ஒரு வீணையின் மீட்டலைப் போல் இன்பமாக ஒலித்தது.

அகமும் முகமும் மலர, "என்ன சிரிக்கிறே?" என்று அவன் கேட்டான்.

"உண்ட பொருள் ஜீரணமாகிவிடும்; தெரியுமா உங்களுக்கு?" என்று அவள் மிழற்றினாள்.

"உணவுப் பொருள் என்றாலே அது சாப்பிடத்தானே இருக்கிறது, ஜெயா? நல்ல பொருளாக இருந்தால் சாப்பிட்ட உடன் ஜீரணமாகிவிடுவதும் அதன் இயற்கைதான்!" என்றான் அவன்.

"ஜீரணமாயிடுச்சன்னா அதிலே ஒண்ணும் மிச்சம் இருக்காதே!"

"ஆனா, நீ ஓர் அட்சய பாத்திரம் ஜெயா! எடுக்க, எடுக்க, மாந்த மாந்தக் குறையாத எழில் பெட்டகம் நீ!" — பரவசம் கலந்திருந்தது அவனுடைய இந்தப் பதிலில்.

"அமிர்தமேயானாலும் அளவுக்கு மீறினாத் திகட்டிப் போயிடும்!"

"ஒரு திருத்தம்..."

"என்ன?"

"இந்த 'அளவுக்கு மீறி' என்கிறது ஒரே தடவையில் விடாமல் மாந்துவதைத்தான் குறிக்கும். விட்டு விட்டு மாந்தும்போது நாட்டந்தான் அதிகமாகுமே தவிர, திகட்டாது."

"அம்மாடியோ! இந்த ஆண் பிள்ளைகளைப் பேச்சிலே ஜெயிக்கவே முடியாது."— ஜெயா சிரித்தாள்; மீண்டும் அதே வீணை மீட்டல் சிரிப்பு.

"அப்பாடியோ! இந்தப் பெண் பிள்ளைகளைச் சாகசத்திலே மிஞ்சிக்கவே முடியாது!" அவனும் சிரித்தான்.

"ஸாப்!" — கீழ்த் தளத்திலிருந்து தாஜ் மஹால் படகு வீட்டு மானேஜரின் அழைப்பு வந்தது.

"எஸ், மானேஜர்!"

"யுவர் ஷிக்காரா இஸ் ரெடி."

"வீ ஆர் கமிங்" என்று அவருக்குப் பதிலளித்துவிட்டு, "கிளம்பு, ஜெயா!" என்றான் மோகன். அவர்கள் கீழே இறங்கி, படகு வீட்டு வாயிலருகே மிதந்து கொண்டிருந்த அழகிய சிறிய படகுக்கு வந்தனர். அந்தப் படகின் பின் கோடியில் யானை மீது அம்பாரி போன்று முழுதும் வண்ண வண்ணத் துணிகளினால் சித்திர வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டிருந்த ஒரு 'ஷாமியானா'—அதாவது வசந்த மண்டபம். கீழே மென்மையான வெல்வெட் மெத்தை விரிக்கப்பட்டிருந்தது. இருவர் வசதியாகச் சாய்ந்து கொள்ளத் தக்க வகையில், அதே வெல்வெட் துணியில் தைக்கப்பட்ட வட நாட்டுக்கே உரிய உருண்டையான நீண்ட திண்டுகள் போடப்பட்டிருந்தன. அதில் ஒரு திண்டில் ஜெயா சாய்ந்து அமர்ந்து கால்களை நீட்டிக்கொண்டாள். அவள் மடியில் தலை வைத்துப் படுத்தபடி, தனக்குத் தெரிந்த அரைகுறை ஹிந்தியில் "சலோ ஜாவ்" என்றான் மோகன். படகு டால் ஏரியில் மெதுவாக நகர்ந்து முன்னேறியது. படகின் முன் கோடியில் ஷிக்காரி ஏதோ ஒரு காஷ்மீரி நாடோடிப் பாட்டைப் பெருங் குரலில் பாடியபடியே துடுப்பை வலித்தான்.

"ஜெயா!"

"ம்..."

"நீயும் ஒரு பாட்டுப் பாடேன்."

"என்ன பாட்டுப் பாடணும்?"

"இந்தச் சூழ்நிலைக்கு, இப்போ நாம் இருக்கிற நிலைமைக்கு ஏற்றதாக ஏதாவது பாடேன்."

ஜெயா, தன் மடியில் படுத்திருந்த மோகனின் தலையை வருடியவாறு மகா கவி பாரதியாரின் 'பாரத தேசமென்று பெயர் சொல்லுவார்' என்ற பாடலைப் புன்னாகவராளி ராகத்தில் மென் குரலில் பாடத் தொடங்கினாள். அவள் பாடப் பாட, அவளுடைய இசையில், அந்தப் பாடலின் கருத்தாழத்தில் ஒன்றிப் போனான் மோகன்.

"சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன் நாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டி விளையாடி வருவோம்"

என்ற அடியை அவள் பாடி முடித்ததும், "ஆஹா! ஆஹா!" என்று அவன் தன்னையும் மறந்து ஆர்ப்பரித்தான். பாட்டை நிறுத்திவிட்டு, "ம்க்கும்" என்று நொடித்தாள், ஜெயா.

"என்ன ம்க்கும் என்கிறே?"

"ரொம்பத்தான் பாட்டைக் கேட்டு ரசிச்சவர் மாதிரி 'ஆஹா' ஊஹூ' என்கிறேளே? அந்தப் படகுக்காரனோடு காட்டுக் கத்தல்லே என் பாட்டு எங்கே ஒங்களுக்குக் கேட்டிருக்கப் போகுது!"

"ஜெயா! ஒனக்கு ஒண்ணு தெரியுமா?" என்று எழுந்து உட்கார்ந்து கொண்டு கேட்டான் மோகன்.

பள்ளிக்குச் செல்லத்துவங்கும் முன்பே ......

சேமிக்கக் கற்றான்

இந்த சுட்டிபயல்!

KRIPAMA LVB 1006 77



எவ்வளவு சேமிக்கிறான்
என்பது முக்கியமில்லை
ஆனால், சேமிக்கப்
பழகிக் கொண்டதே
பாராட்டத்தக்கது

இன்றே உங்களுக்கு
அருகிலுள்ள
நட்புமிகு LVB கிளையில்
சேமிப்புக் கணக்கைத்
துவங்குங்கள்

உங்கள் குழந்தை சேமிக்கப் பழக இன்றே கற்பியுங்கள்!

எளிதாக சேமிக்க-
லக்ஷ்மி விலாஸ் பேங்க்

லக்ஷ்மி விலாஸ் பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்	நிர்வாக அலுவலகம்
கரூர் 639 001	சென்னை 600 086

ப மணி ஆலை	D. வர்த்தமானன்
ஜெனரல் மேனேஜர்	சேர்மன்



டாக்டர் C. S. V. ராஜப்பா
காஞ்சிபுரம்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களிடம் மிகுந்த பக்தி உடையவரும் ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கோவிலில் சுமார் 20 ஆண்டு காலம் டிரஸ்டியாக இருந்தவரும், காஞ்சி நகர சபையில் பல வருடங்கள் உறுப்பினராக இருந்தவரும், காஞ்சி ஸ்ரீ சங்கர பக்த ஜன சபாவின் கூட்டுக் காரியதரிசியாக இருந்தவருமான டாக்டர் ராஜப்பா தமது 70வது வயதில், சென்ற 25-4-77 அன்று அசோக் நகர் தமது புதல்வர் இல்லத்தில் காலமானார். அன்னாருக்கு மனைவியும் இரண்டு புதல்வர்கள், புதல்விகள் உள்ளனர்.

"என்ன?"

"ஆயிரம் குழந்தைகளின் கூக்குரலுக்கு இடையிலேயும், தன் குழந்தையின் குரலைத் தனித்துக் கேட்டிடுவாளாம் தாய். இந்த விஷயத்திலே காதலனும் ஒரு தாய்க்கு ஒப்பானவன்தான்."

"ஏதேது? நீங்க இன்னும் அந்தக் காலத்திலேயே இருக்கிறீங்க போலிருக்கே" என்றாள் ஜெயா.

"எந்தக் காலத்திலே?"

"நாம் வெறும் காதலர்களாக இருந்த காலத்திலே. இப்போ நாம்ப கணவனும் மனைவியும் ஆயிட்டோம்; அதை மறந்திடாதீங்க."

"மறப்பேனா? எப்படி மறக்க முடியும்?" என்ற அவன், தாபம் தொனிக்க, "ஜெயா!" என்று குழைந்தான்.

"ம்...." அவள் குரலிலும் அந்தத் தாபம் இழைந்தது.

மோகன் மேலே பேசவில்லை. இரு கைகளாலும் அவள் முகத்தைத் தாங்கி, தன் முகத்தருகே இழுத்தான். கண்களும் கண்களும் சந்தித்தன. முகமும் முகமும் நெருங்கின; உதடும் உதடும் உறவாட விரைந்தன!

இப்படிப்பட்ட அயனான நேரத்தில் ஓர் இளைஞனின் கனவை, அலாரம் கடிகாரம் என்ன? பெற்றோர்தாம் என்ன? அந்த ஆண்டவனே கலைத்தாலும் அவனுக்கு அலுப்பும் சலிப்பும் ஏற்படாமல் என்ன செய்யும்?

மோகன் சென்னையில் கட்டிட காண்ட்ராக்ட் தொழில் செய்து வந்தான். அவன் ஒரு பி. ஈ. ஆர்க்கிடெக்ட். மகன் பி. ஈ. படிக்க விரும்பியபோது ஜகதீசன் ஒரு நிபந்தனை போட்டார். "டேய்! இதப்பாரு. நீ எங்கே போய், என்ன வேணும்னாலும் படி. ஆனா, படிச்சப்புட்டு, கண்டவங்க கிட்டே போய்க் கைகட்டிச் சேவகம் பண்ற எண்ணத்தை மட்டும் வைச்சுக்கிடாதே. நீ வேலை பார்த்துச் சம்பாதிக்கணும் என்கிற தேவை ஒண்ணும் நமக்கு இல்லை. ஒருவேளை, படிச்சப்புட்டுச் சும்மா இருக்கிறதான்னு ஒனக்குத் தோணினா, தேவையான பணம் தரேன்; ஒன் படிப்புக்கு ஏத்த தொழில் எதையாவது சுயமாகச் செய்; நான் வேண்டாம்னு சொல்லலை" என்று கண்டிப்பாகக் கூறியிருந்தார்.

அதன்படி அவன் பி. ஈ. ஆர்க்கிடெக்ட் பட்டம் பெற்றதும், சொந்தமாகக் கட்டிட காண்ட்ராக்ட் தொழில் செய்ய விரும்பினான். அதற்குத் தேவையான பணத்தை ஜகதீசன் அட்டி சொல்லாமல் கொடுத்தார். சென்னையில் மாம்பலம் போக் ரோட்டில் ஒரு பங்களாவை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, அதையே ஆபீஸாகவும் வீடாகவும் பயன்படுத்தித் தொழிலைத் தொடங்கினான்.

நாகரிகம் முதிர்ந்து வரும் காலம் இது. இப்போதெல்லாம் பண வசதி படைத்தவர்கள் பழைய பாணியில் பங்களாக்களைக் கட்டிக்கொள்ள விரும்புவதில்லை. நவ—நவமான அமைப்புக்களைக் கொண்ட பங்களாக்களில்தான் அவர்கள் நாட்டம் செல்கிறது. எனவே, கட்டிட நிர்மாணத் துறையில் பி.ஈ. சிவில் பட்டம் பெற்ற இன்ஜினீயர்களை விட பி. ஈ. ஆர்க்கிடெக்ட் பட்டம் பெற்றவர்களுக்குத்தான் இன்று மதிப்பும், டிமாண்டும் அதிகமாக உள்ளன. மோகனைத் தொழிலில் கைதூக்கி விட இது பெரிதும் உதவியாக இருந்தது. ஐந்து ஆண்டுகளுக்கு முன் தந்தையிடமிருந்து பெற்ற ஒரு லட்சம் ரூபாயுடன் தொழிலைத் தொடங்கிய அவன், இந்தச் சாதகமான சூழ்நிலை காரணமாக, மூன்றே ஆண்டுகளில் தந்தை கொடுத்த லட்சம் ரூபாயையும் திருப்பிக் கொடுத்து விட்டான். அது மட்டுமா? புத்தம் புது அம்பாசடர் கார் ஒன்று அவன் வாங்கியிருக்கிறான். ஐம்பதாயிரம் ரூபாய் வரையில் பாங்கியிலும் போட்டிருக்கிறான்.

மகன் சென்னையில் தொழில் தொடங்கியதுமே அவனுக்குக் கல்யாணத்தை முடித்துவிடத் துடித்தாள் கனகம். அவள் அப்பொழுது மோகனுடன் சென்னையில் தங்கியிருந்தாள். மகனிடம் தன் ஆவலை ஒருநாள் அவள் வெளியிட்டபோது அவன் சொன்னான்: "என்னம்மா இது? நான் இப்பத்தான் தொழில்லயே கால் எடுத்து வைச்சிருக்கேன். நீ அதுக்குள்ளே எனக்கு ஒரு கால் கட்டுப் போட்டிடறேன்னு சொல்றியே?"

"ஏண்டா மோகனு! ஒன் தொழிலுக்கும் கல்யாணத்துக்கும் முடிச்சுப் போடறே? நீ என்ன அந்தத் தொழில்லே கிடைக்கிற வரும்படியை வைச்சுத்தான் குடும்பம் நடத்தணுங்கிற நிலையிலே இருக்கிறவனா? தவிரவும் நான் எத்தனை நாளைக்குடா இங்கே தங்கி ஒனக்குச் சமையல் செய்து போட்டுக்கிட்டிருக்க முடியும்?" என்று மகனை மடக்க முயன்றாள் அந்தத் தாய்.

"யம்மா! சமையல் செய்து போடறதுக்காக என் கழுத்திலே ஒருத்தியைக் கட்டணும்னு நீ நெனைச்சா, அதுக்கு ஒருத்தி இந்த ஜென்மத்திலே எனக்குத் தேவைப்படவே மாட்டாள். ஏன்னா, ஏழெட்டு வருஷங்களா நான் ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டுப் பழக்கப்பட்டவன். அந்த ஹோட்டல் சாப்பாட்டிலேயே என் வருங்காலத்தையும் ஓட்ட முடியும்."


"மோகனு! பெத்தவங்களோடு மனசைப் புரிஞ்சுக்காம இப்படிக் குதர்க்கம் பேசறியே; இது ஒனக்கே நல்லா இருக்கா? கல்யாணம் மாதிரியான நல்ல காரியங்கள் காலாகாலத்திலே நடந்தாத்தாண்டா பெத்தவங்க கவலை தீரும்."

"ஒங்க கவலையை நான் தீர்க்க மாட்டேன்னு சொல்லலியே! கொஞ்சம் டயம் குடுங்க; தொழில்லே நான் ஒரு மாதிரி நிலைப்பட்டுக்கட்டும்; அப்புறம் கல்யாணம் செய்துக்கறேன்னுதான் சொல்றேன்."

"சரி, சரி; நீங்கள்ளாம் படிச்ச புள்ளைங்க; பெரியவங்க சொன்னதை ஒடனே கேட்டு நடப்பீங்களா? ஒன் பிரியம் போலே எப்போ தோணுதோ அப்போ கல்யாணம் செய்துக்கோப்பா" என்று அப்பொழுது ஓய்ந்துவிட்டாள் அந்தத் தாய். (தொடரும்)

"இதோ பாருங்கள்.." மேடையில் தம்மை மிகவும் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்த பேச்சாளரிடம் தலைவர் சொன்னார்: "என்னை இமயமலை, அது இது என்று புகழாதீர்கள். எனக்குக் குளிர் தாங்காது; ஜலதோஷம் பிடிக்கும்"

-ஆகரான் சாமி-



மேக் அப் உங்கள் முகத்தின் குறைகளை மறைக்கலாம்.





உங்கள் மேனியை தூய்மையாக்கி இயற்கை எழிலுடன் துலங்கச் செய்வது லாக்டோ-காலமைன் ஒன்றுதான்.

உங்கள் மேனியைப் பராமரிக்க லாக்டோ-காலமைன். உங்கள் மேனியைத் தூய்மையாகவும் புதுமையாகவும் வைத்திருக்கக் கூடிய சேர்க்கைப் பொருட்கள் விசேஷ முறையில் இதில் கலக்கப் பட்டுள்ளன. எல்லாம் ஒன்றில் இணைந்த அழகுப் பராமரிப்பு-லாக்டோ காலமைன் அஸ்ட்ரின்ஜெண்ட், மாயிஸ்சரைஸர், ஃபவுண்டேஷன் க்ரீம். மூன்றும் இணைந்த தன்னிகரற்ற அழகு சாதனம்.

அதனை முறையாக உபயோகித்து வரவும். உங்கள் மேனி இயற்கை யாக மெருகேறுவதைக் கண் கூடாகக் காண்பீர்கள்.



3 வசதியான சைஸ்களில் கிடைக்கிறது:
110 மி.லி.
60 மி.லி. 28 மி.லி.

க்ருக்ஸ் லாக்டோ-காலமைன், ஒரு ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க். இதனைத் தவறாகப் பயன்படுத்துபவர்கள் சட்டப்படி தண்டிக்கப் படுவார்கள்.

உண்மையான லாக்டோ-காலமைன் தானா என்று உறுதி செய்து கொள்வதற்கு, எப்போதும் இந்த க்ருக்ஸ் சின்னத்தைப் பார்த்து வாங்குவீர், அதோடு, க்ருக்ஸ் முத்திரையும் உடையாமல் இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ளுங்கள்.

டுஃப்பார்-இன்டர்ஃப்ரான் லிமிடெட்
த.பெ. எண் 6582, பம்பாய்-400 018

க்ருக்ஸ்

லாக்டோ-காலமைன் அதுவே எழில் பராமரிப்பு ரகசியம்.

Sista's-DIL-219-P/76/Tam

ராஜாஜி வாழ்க்கை வரலாறு



காந்தியைப்பற்றிய தமது கருத்துக்களை ''எம். கே. காந்தி — அவர் இந்தியாவுக்கு வழங்கும் செய்தி'' என்று தலைப்பிட்டு, கட்டுரையாக வடித்து அதனைச் சேலம் இலக்கியச் சங்கத்தில் ஸி. ஆர். படித்தது 1916-ம் ஆண்டில். பின்னால் அதே ஆண்டில் காந்தியை முதன் முதலாகப் பார்த்தார், உத்தரப்பிரதேசத்தில் காஷ்மீரப் பெற்றோருக்குப் பிறந்த ஜவாஹர்லால் நேரு. அவருக்குக் காந்தி எங்கோ தொலைவில் இருப்பவராகவும் ரொம்ப வித்தியாசமானவராகவும் அரசியலை அறியாதவராகவும் தோற்றமளித்தார்.[1] இதற்கு ஓராண்டு முன்னதாக வல்லபாய் பட்டேல் காந்தியை முதன் முதலாகப் பார்த்தார். குஜராத்தி குடியானவக் குடும்பத்தில் பிறந்திருந்த அவர், அப்போது சீட்டாடிக் கொண்டிருந்தார். காந்தியைப் பார்த்துவிட்டு அவர் தம் மனத்தில் எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்தாததால் ஆட்டத்தைத் தொடரத் திரும்பி விட்டார்.[2]

1917-ல் பீகாரி வழக்கறிஞர் ராஜேந்திர பிரசாத் தமது ராஜதானியைச் சேர்ந்த சம்பரானில் அவுரித் தோட்டத் தொழிலாளரிடையே காந்தி செயலாற்றுவதைப் பார்த்தார். புலமை மிக்கவரும் எழுத்தாளருமான முஸ்லிம், அபுல்கலாம் ஆஸாத் வங்கத்தில் வாழ்ந்தார். அவர் இந்தியா பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஐந்தாண்டு காலம் சிறையிலிருந்த பிறகு 1920-ல் காந்தியைச் சந்தித்தார்.

இந்த ஐவரும் — ஸி. ஆர்., ஜவாஹர்லால், பட்டேல், பிரஸாத், ஆஸாத் ஆகியோர் — காந்தியுடன் சேர்ந்தது மட்டுமல்ல, முப்பதாண்டுகளுக்கு காந்தியின் அரசியல் தோழர்களின் மையப் புள்ளிகளாகவும் திகழ்ந்தனர். சுதந்திரம் பெற்று இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஜவாஹர்லால் கூறியதுபோல், மக்கள் பொதுவாக இவர்கள் ஐவரையும் காங்கிரஸின் பழம் பெரும் காவலர்கள் எனக் கருதினார்கள்.[3] ஆஸாத் ஒருவரைத் தவிர மற்ற நால்வரும் வழக்கறிஞர்கள். காந்தியும் அப்படியே.


ஐவரில் காந்தியைச் சந்தித்த வரிசையில் நான்காவது இடம் பெறுபவர் ஸி. ஆர். ஆஸாத் தான் கடைசி. ஆனால் காந்தியின் சக்தியை முதன் முதலாக உணர்ந்தவர் ஸி. ஆர்தான் எனக் கருத இடமுண்டு. ஸி. ஆருக்குள்ளே அவர் மனம் அறிவுக்கும் முன்பாக எதிரொலிகளை எழுப்பியது. இதனை 1913-லேயே காண்கிறோம். 1916-ம் ஆண்டு அவர் எழுதிப் படித்த கட்டுரையின் ஆரம்ப வரிகள் இதனை உறுதிப் படுத்துகின்றன. ஸி. ஆர். கூறினார்: ''அவர் தலைமையில் நமது தென்னாப்பிரிக்க சகோதர சகோதரிகள் நடந்து கொண்ட விதமானது, இந்தியர்கள், தங்கள் மதிப்பின்மையைச் சிறிது காலம் மறந்து உலகில் பெருமித நடைபோட வசதி செய்கிறது.''[4]

எங்கிருந்தோ ஸி. ஆர்., காந்தியும் கஸ்தூரிபாவும் சேர்ந்திருப்பது போன்ற ஒரு படத்தைப் பெற்றிருந்தார். அதனைச் சேலம் இலக்கியச் சங்கத்துக்குப் பரிசளிக்கும்போதுதான் அவர் தம் கட்டுரையை எழுதிப் படித்தார்.

அதற்கு முன்பு சிறிது காலம் அப்படம் அவர் வீட்டில் தொங்கியது. ''காந்தியைப் பற்றிப் பேசும்போது 'அவன்' என்று சொல்லாதே'' என்று பத்து வயதான பாப்பாவுக்கு அவர் கற்றுக் கொடுத்தார். ''ஏன் கூடாது? அவர் பிராமணரா என்ன?'' என்று கேட்டாள் பாப்பா. ''அவர் பிராமணர் அல்ல'' என்று ஸி. ஆர். பதிலிறுத்தார். ''ஆனால்

பட்டேல்





பிரஸாத்

1. Quoted in Breacher, Nehru, Oxford, London,1959 P. 60.
2. Ashe, Gandhi, Asia, Bombay, 1968, P.146.
3. In letter to Rajendra Prasad, 8.12.49, published in Sardar Patel's Correspondence Navajivan, Ahmedabad, 1973, Vol.8. P.220 - 222.
4. Indian Review - May, 1916.



ஜவாஹர்லால் நேரு — அபுல்கலாம் ஆசாத்

கண்டுபிடிக்க முடியவில்லை. ஓராண்டுக்குப் பிறகு அச் சங்கம், சென்னையில் இயங்கிய பெரியதான 'தமிழர் கல்விச் சங்கத்'துடன் இணைந்து விட்டது. சஞ்சிகையின் பணியைச் சென்னைச் சங்கத்தின் 'தமிழர் நண்பன்' என்ற சஞ்சிகை தொடர்ந்தது.

நாம் ஆர்வத்துடன் ஆற்றிய இப்பணிக்கு அடுத்து வந்த ஆண்டுகளில் ஸி. ஆர். திரும்பியபோது, சாமானியருக்காதத் தமிழில் சிறு சிறு நூல்களை எழுதினர். 'தமிழில் முடியுமா?', 'திண்ணை ரசாயனம்', 'தாவரங்களின் இல்வாழ்க்கை' ஆகியவை அவற்றில் சில.

அவரும் அவர் மனைவியும் ராமரும் சீதையும் போல.''[5]

தமிழில் விஞ்ஞானக் கலைச் சொற்கள்

1916-ல் ஸி. ஆர். தமது சகாக்களுடன் ''விஞ்ஞானத் தமிழ்ப் பதங்கள் சங்கம்'' தோற்றுவித்தார். இச்சங்கம் அக்டோபரில் ஒரு சஞ்சிகையை வெளியிட்டது. அதற்கு ஸி. ஆரும் வேங்கட சுப்பையரும் ஆசிரியர்கள்.

''நாட்டின் மொழியில் புத்தகங்கள் பிரசுரிக்க விரும்புகிறவர்களை எதிர்நோக்கும் மிகப் பெரிய சிரமம் விஞ்ஞானக் கருத்துக்களைக்கூற போதிய அளவில் சரியான கலைச் சொற்கள் இல்லாததுதான்'' என்று அந்தச் சஞ்சிகையின் முதல் இதழ் கூறியது.[6] இத்துறையில் உள்ள குழப்ப நிலையைக் குறைப்பதே இச்சங்கத்தின் நோக்கம்.

அச் சஞ்சிகையின் நான்கு இதழ்கள் மட்டுமே பிரசுரமாயின. தாவர இயல், ரசாயனம், பௌதிகம், உடற்கூறு சாஸ்திரம், வான் சாஸ்திரம், கணிதம் ஆகிய பிரிவுகளில் கலைச் சொற்களுக்குச் சமதையான இன்னின்ன தமிழ்ப் பதங்களைப் பிரயோகிக்கலாம் என்று யோசனைகள் கூறின. பல பதங்களுக்கு சமஸ்கிருதமே மூலமாக விளங்கியது. இவ்விதம் வழி வந்த பதங்கள் தமிழ் உள்பட இந்திய மொழிகள் அனைத்துக்கும் பொதுவாக விளங்கலாம் என்று ஸி. ஆர். கருதினர்.

அந்தச் சஞ்சிகையில் விவரிக்கப்பட்ட பதங்கள் பழக்கத்துக்கு வந்தனவா என்பதைக்

இதற்கிடையில் 1916-ல் ஸி. ஆர். சுயாட்சி சங்கத்தில் சேர்ந்திருந்தார். அவரது தூண்டுதலினால் சங்கத்தின் ஒரு கிளை சேலத்தில் உருவாயிற்று. சென்னையிலும் அவர் சுயாட்சி கோரிப் பேசினர். அவையினர், அவர் வாயிலாக இயக்கத்துக்கு ஒரு புதிய சக்தி பிறந்திருப்பதை உடனடியாக உணர்ந்து கொண்டார்கள். பிரிட்டிஷாரை அவர் குறிப்பிட்டுப் பேசுகையில் மறுக்க முடியாத வாதங்களேயன்றிக் கசப்புணர்ச்சி சிறிதும் இல்லை.[7]

காங்கிரஸின் லக்னோ மகாநாடு

1916 டிசம்பரில் காங்கிரஸ் லக்னோவில் கூடியது. 1907-ல் நடந்த சூரத் மகாநாட்டில் காங்கிரஸ் பிளவுபட்ட பிறகு முதன் முதலாக இந்தக் காங்கிரஸ் மகாநாட்டில்தான் திலகர் கலந்துகொண்டார். ஸி. ஆரின் பார்வையில் இன்னமும் அவர் மகாவீரராகவே திகழ்ந்தார். சுயாட்சி சங்கத்தின் சேலம் கிளை, சுயாட்சிக்குக் காங்கிரஸ் உரிமைக்குரல் எழுப்ப வேண்டும் என்று திலகருக்குத் தந்தி அனுப்பியது. அத்தந்தி ஸி. ஆர். அளித்த உற்சாகத்தின் பேரில்தான் அனுப்பப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

வெகு சீக்கிரம் இந்தியாவுக்குச் சுயாட்சி வழங்கப்படும் என்று பிரிட்டன் பிரகடனம் பண்ண வேண்டும் என்று லக்னோ மகாநாடு கோரியது.[8] இதே நேரத்தில் லக்னோவில் முஸ்லிம் லீகும் கூடியது. ராஜதானிகளிலும் மத்தியிலும் குறிப்பிட்ட சதவிகிதம் முஸ்லிம் உறுப்பினர்களை உடைய சட்டசபைகளுடன் கூடிய ஒரு சுயாட்சி திட்டத்துக்குக் காங்கிரஸும், லீகும் ஒப்புதல் தந்தன. முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதிகள் வேண்டும் என்ற லீகின் பிடிவாதத்துக்கு விட்டுக்கொடுக்கப்பட்டது.

திலகர், ஸ்ரீமதி பெஸண்ட், முஸ்லிம் லீக் தலைவர் முகமதலி ஜின்னா ஆகியோர் தாம் இந்த ஒப்பந்தத்தின் சிற்பிகள். ''முஸ்லிம் லீக் தனது எதிர்பார்ப்புக்களில் இந்திய தேசிய

---

5. நாமகிரி அம்மாள் நூலாசிரியரிடம் கூறியது.
6. Quotations in this Paragraph from extracts from the journal of the Tamil Scientific Terms Society published in Irschick, Politics and Social conflict in South India, University of California Press, 1969, P. 8.
7. B. Shiva Rao, Rajaji 93, P.72.
8. Tendulkar, Mahatma, Bombay, 1951, Vol. I P. 233.

காங்கிரஸுக்குச் சமதையாக நிற்கிறது''— என்று ஜின்னு பெருமிதத்துடன் கூறினர்.[9]

ஹிந்துக்கள் அளவுக்கு அதிகமாகவே விட்டுக் கொடுத்து விட்டார்கள் என்ற குற்றச் சாட்டை மறுதளித்தார் திலகர். ''அப்படி யொன்றும் ரொம்ப அதிகமாக நாங்கள் விட்டுக் கொடுத்து விடவில்லை'' என்ருர்.[10]

காந்தியைப் பற்றிய தமது கட்டுரையில் ஸி. ஆர். இதே மனப்பான்மையை வெளியிட்டிருந்தார் என்பது சுவாரசியமான விஷயம்: ''பெரும்பான்மையாக உள்ள ஹிந்துக்கள், தாங்கள் அதிகம் படித்திருப்பதாகப் பாசாங்கு செய்பவர்கள், விசேஷ சலுகைகளுக்கான முஸ்லிம்களின் கோரிக்கைகளை எதிர்க்காமல் இருப்பதின் மூலமே ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையைக் காண முடியும்.''[11]

கலக்கமடைந்த அரசு

ஹிந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இரு சாராராலும் எழுப்பப்பட்ட சுயாட்சி கோஷம், கடுமையான பத்திரிகைச் சட்டம் அமலிலிருந்த போதிலும் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவியது.[12] கலக்கமடைந்த ஆட்சியின் சார்பில் இரண்டு கவர்னர்கள் நடவடிக்கை எடுத்தனர். பஞ்சாபில் ஸர் மைக்கேல் ஓ'டுவையர் சுயாட்சி ஆதரவாளர்களைப் புரட்சியாளர்கள் என்றும் ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணமுடையவர்கள் என்றும் குற்றம் சாட்டினர். கோடையை முன்னிட்டுத் தமது சகாக்களுடன் உதகமண்டலத்தில் தங்கியிருந்த சென்னை கவர்னர் பெண்ட்லாண்ட் பிரபுவும் அதே அளவுக்கு அப்பட்டமாகப் பேசினர்.

''பொறுப்புள்ள சுயாட்சியைச் சீக்கிரமே வழங்குவது என்ற எண்ணங்களையெல்லாம் மனத்திலிருந்து முழுமையாக அகற்றி விட வேண்டும்'' என்ருர் அவர். பெரும்பாலும் நியமன அங்கத்தினர்களையே கொண்டிருந்த சட்டசபையில் பேசிய அவர் மேலும் கூறினர்: ''அரசாங்கத்தின் மீது உண்மையாகவே செல்வாக்குடைய மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய சபைகள்தாம் சுயாட்சி தத்துவம் என்ருல் அது யதார்த்த அரசியலுக்கு அப்பாற்பட்டது.'' பிறகு அவர், அடக்குமுறைகளைக் கையாள நேரலாம் என்பதையும் சுட்டிக் காட்டினர்.[13]

பெண்ட்லாண்டும், கல்லூரியில் ஸி. ஆருக்குப் பேராசிரியராக விளங்கிய ஜான் டெய்ட்டும் நண்பர்கள். இருவரும் சேர்ந்தாற்போல் எடின்பரோ அகாடெமியில் பள்ளிப் பாடங்களைப் படித்தவர்கள். அவ்வாறிருக்க ஸி. ஆரின் பகிரங்கச் சொற்கணைத் தாக்குதலுக்கு ஆளாகிய முதல் பிரிட்டிஷ் அதிகாரி பெண்ட்லாண்ட்தான் என்பது விதியின் விசித்திர விளையாட்டுக்களில் ஒன்று.

ஹிந்துவில் பிரசுரமான ஒரு கடிதத்தில் ஸி. ஆர்., ''சென்னை ராஜதானி தன் கருத்தைத் தெளிவாக வெளியிட வேண்டும்'' என்ருர். ''மேன்மை தங்கிய கவர்னரின் கூற்று பற்றி மக்கள் என்ன நினைக்கிருர்கள் என்பதில் தப்பபிப்பிராயத்துக்கு இடம் வைக்கக் கூடாது.'' சுயாட்சி இயக்கத்தில் இதுவரை ஒருமுறைகூடப் பலாத்காரம் கையாளப்படவில்லை, சட்டத்தை மீறி ஒரு காரியமும் நடத்ததில்லை என்பதை கவர்னருக்கு ஞாபகப்படுத்திவிட்டு, அடக்குமுறையைக் கையாள நேரலாம் என்ற கவர்னரின் அச்சுறுத்தலுக்கு வந்தார் ஸி. ஆர்.:

''எங்கள் மனச்சாட்சி தெளிவாக இருக்கிறது. இதுகாறும் அமைதியாகச் சட்டத்தை மதித்து வாழ்ந்து வந்துள்ள மக்கள் மீது அடக்குமுறைகள் அவிழ்த்து விடப்பட்டால் அதன் விளைவுகளை எதிர்நோக்கி அமைதியாகக் காத்திருப்பது தவிர நாங்கள் வேறொன்றும் செய்வதற்கில்லை.'' தொடர்ந்து ஸி. ஆர். எச்சரித்தார்: ''அடக்குமுறைகள் ஆரம்பமாளுல் கவர்னரும் அவரது ஆலோசகர்களுமே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். அவர்கள் பிரிட்டிஷ் தேசத்தின் நீதிமன்றத்தின் முன் பதில் கூற நேரும்.''[14]


இதைத் தொடர்ந்து சேலத்தில் ஓர் ஆட்சேபணைப் பொதுக்கூட்டம் நடந்தது. முஸ்லிம்கள் மட்டுமின்றிப் பல வகுப்பினரும் பிரதிநிதித்துவம் கொண்டிருந்த அப்பெருங் கூட்டம், ஸி. ஆரால் பிரேரேபிக்கப்பட்ட ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது. கவர்னரின், அரசியல் சாசனத்துக்கு முரணை அதிசயிக்கத்தக்க போக்கை அத்தீர்மானம் கண்டித்து விமர்சனம் செய்தது. ஸி. ஆருடையபேச்சில் ஒரு முக்கியமான காந்தியச் சொற்றொடர் இடம் பெற்றது. ''சுயாட்சி என்னும் லட்சியத்தை முறியடிக்க மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளையும் நாம் நமது **ஆன்ம சக்தியை** முழுமையாகப் பிரயோகித்து எதிர்க்க வேண்டும்'' என்ருர் அவர்.[15]

ஸ்ரீமதி பெஸண்ட் கைது

டெய்ட்டின் நண்பர் நடவடிக்கை எடுத்தார். ஸ்ரீமதி பெஸண்டும் அவரது சகாக்களான வாடியாவும் அருண்டேலும் ஜூன் 16ல் இந்தியா பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர். ஸி. ஆரும் அவர் நண்பர்களும் மறுநாள் காலை முன்னேற்பாடின்றிச் சந்தித்து அன்று மாலை ஒரு பொதுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார்கள்.

பலத்த மழை பெய்தும்கூட சிவன் கோயில் மண்டபத்தில் பெருங் கூட்டம் சேர்ந்தது. அக்கூட்டம் பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜுக்குத் தனது ஆட்சேபணையைத் தெரிவித்துத் தந்தியடித்தது. மறுநாள் சேலம் சுயாட்சி சங்கம் பெண்ட்லாண்ட் பிரபுவை பிரிட்டன் திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும்

9. மேற்படி பக்கம் 235.
10. மேற்படி பக்கம் 234.
11. C.R., M.K. Gandhi: His message to India, Indian Review, Madras, May 1916.
12. Sitaramayya History of the Indian National Congress, Allahabad, 1935, P. 220.
13. ஹிந்து 25-5-17.
14. ஹிந்து 28-5-17.
15. ஹிந்து 1-6-17.



குறைவாகச் சொல்லி நிறைவாகச் செய்வதே உன்னத மனிதர்களின் இயல்பு.
- கன்பூஷியஸ்



வாரீர் புதுமை தவழ்ந்திட.
Liril
THE FRESHNESS SOAP
Liril
பார்த்தறியாப் புதுமை. பரவசக் கிளுகிளுப்பு.
லிரில். அலையெறியும் தளதள பச்சை. அதன்
நயமோ குளுகுளு எலுமிச்சை...புதுக்
குமரியாய் உங்களைப் பூரித்தெழ வைக்கும்.
லிரில்
புத்துணர்வு சோப்
மனம்குளிரும் எலுமிச்சைப் புத்துணர்ச்சி வெள்ளம்.
லின்டாஸ்-LR.27-203 TM
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

என்று உரிமைக் குரல் எழுப்பியது. இதன் பிறகு சென்னை கோகலே மண்டபத்தில் குழுமிய அசாதாரணமான மாபெரும் கூட்டத்தில் வி.ஆரும் நரசிம்ம அய்யரும் வேறு இருவரும் சேலத்தின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர்.[16]

ஸ்ரீமதி பெஸண்ட் காவலில் வைக்கப்பட்டிருந்த நீலகிரி மலைகளுக்கு ஒரு சாத்வீக பாத யாத்திரை மேற்கொள்ள வேண்டும் என்று காந்தி யோசனை கூறினார். ஆனால் திலகர் அதனை அங்கீகரிக்காததால் அந்த யோசனை கைவிடப்பட்டது. இந்தியா மந்திரியாக ஆஸ்டின் சேம்பர்லினுக்குப் பதில் முப்பத்தாறு வயதான எட்வின் மாண்டேகு நியமிக்கப்பட்டபோது சாத்வீக எதிர்ப்பின் பலாபலன்கள் இங்கு ஆராயப்பட்டு வந்தன.

ஆகஸ்டு 20-ந் தேதி மாண்டேகு லண்டனில் யாரும் எதிர்பாராத விதமாக ஓர் அறிக்கை விடுத்தார். அவர் கூறினார்: ''பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஒரு பிரிக்க முடியாத அங்கமாக விளங்குகையிலேயே இந்தியாவில் (ஏகாதிபத்தியம் அல்லாத) பொறுப்புள்ள ஆட்சி அமைவது படிப்படியாகச் சாத்தியமாகும் திசையில் பெருமளவு நடவடிக்கை எடுக்கப்படும்.''[17]

நல்லெண்ணத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாக, ராணுவத்தில் அரசரின் நேரடி நியமனங்களுக்கு இந்தியர்களை ஒதுக்கிவிடும் நிறபேதம் நீக்கப்பட்டது. அதோடு மாண்டேகு தாம் இந்தியர்களின் பிரதிநிதிகளையும் வைஸ்ராயையும் சந்தித்து அரசியல் நிர்ணயச் சட்ட சீர்திருத்தங்களைப் பற்றிக் கலந்தாலோசிக்க விரைவில் இந்தியாவுக்கு வரப்போவதாகவும் அறிவித்தார். ஆகஸ்டு அறிக்கை உருவாக்கிய நம்பிக்கைகள் செப்டம்பர் 16-ல் ஸ்ரீமதி பெஸண்டும் அவர் சகாக்களும் விடுவிக்கப்பட்டபோது மேலும் அதிகரித்தன.

(தொடரும்)

தமிழாக்கம்: வி. ராஜேந்திரன்

16. ஹிந்து ஜூன் 1917 இதழ்களிலிருந்து.
17. Tendulkar, Mahatma, Vol. I P. 264.

இரு வீடுகள்

'ஞாபக மறதி' எத்தனையோ விஷயத்தில் நகைப்பைத் தரும், சங்கடங்களைத் தரும். சாரங்கன் விஷயத்தில் அது தினசரி காட்சிகள். அவன் மனைவி உமா அதனை எடுத்துக் காட்டி இல்லறத்தை நல்லபடியாக நடத்தி வந்தாள். 'உமா'வின் மாஜி காதலன் தேவநாதன் அவர்கள் இருந்த வீட்டின் மாடிக்குக் குடி வந்து விஷ வித்தாக முளைத்தான்.

குடும்பத்தில் பூசல். கொலை என்று அந்த வீடே இரண்டு படுகிறது! தேவநாதன் தனது மற்றொரு காதலியான மஞ்சுளவைத் தீர்த்துக் கட்டிச் சிக்கலுக்குமேல் சிக்கலை ஏற்படுத்தி விட்டுப் போகிறான்!

அதன் பலனுகக் கோர்ட்டில் தன் கணவனைக் காக்கத் தன் நடத்தையிலேயே களங்கம் கற்பித்துக் கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உமாவுக்கு ஏற்படுகிறது.

ஸ்ரீ ஜயந்தி உமாவாக வருகிறார்; நடிப்பிலே நன்கு சோபிக்கிறார்! 'ஞாபக மறதி' சாரங்கன் பாத்திரம் ஏற்றவர் பிரபாகர்.

உமாவின் மாமனுராகவும் வக்கீலாகவும் வந்து வி. எஸ். ராகவன் 'உமா'வைக் கேள்விக் கணைகளால் திணற அடிக்கும் காட்சி மெய் சிலிர்க்க வைக்கிறது. நாடகத்தின் திரும்பு முனைக்கட்டம், உச்சமான கட்டம்!



ஒரு நாடகம் நெற்றி நரம்பைப் புடைக்கச் செய்து கொண்டேயிருந்தால் ரஸிகர்கள் களைத்துப் போய் விட மாட்டார்களா? லலிதா மாமியாக வரும் வி. கே. சரஸ்வதியும் ராமு மாமாவாக வரும் மாலியும் ஓரளவு நகைச்சுவைப் பகுதியை அந்த வீட்டில் 'இட்டு' நிரப்பி 'டென்ஷனை'க் குறைக்கிறார்கள்.

ஐ.என்.ஏ. தியேட்டர்ஸ் அளித்துள்ள 'இரு வீடுகள்' நாடகத்தின் கதை வசனம் ஜோசப் ஆனந்தனின் கைவண்ணத்தில் 'திரில்'லோடு அமைந்திருக்கிறது என்றால் நாடகத்தின் டைரக்ஷனை வி. எஸ். ராகவன் டிரில் வாங்கித் திறம்படச் செய்திருக்கிறார். —பீ. எஸ். எம்.



SERVICE · SECURITY · STABILITY
ESTD 1901
பாங்க் ஆப் தஞ்சாவூர்
வழங்கும்
டெபாசிட்
சேகரிப்பு விழா
சேவிங்ஸ் கணக்கு,
ரெக்கரிங் டெபாசிட்.
பொற்குவியல் டெபாசிட்
மற்றும் பிக்சட் டெபாசிட்
கணக்குகளை ஆரம்பிக்க
உற்ற காலம்.
20-4-77 முதல் 31-5-77 வரை
வழக்கமாக
வழங்கப்படும்
உயர்ந்த வட்டி
விகிதங்களுடன்,
இவ்விழாக் காலத்தில்
ஆரம்பிக்கப்படும்
ஒவ்வொரு டெபாசிட்
கணக்குக்கும்,
உபயோகமானதும்
கவர்ச்சிகரமானதுமான
பரிசுப் பொருள் ஒன்றும்
வழங்கப்படும்.
இன்றே ஆரம்பியுங்கள் ஒரு டெபாசிட் கணக்கை-
மாரிகால தேவைக்கு கோடையிலே சேமியுங்கள்
பாங்க் ஆப் தஞ்சாவூர் லிட்;
பதிவு அலுவலகம்: தஞ்சாவூர்: 613001
R. சொக்கப்பா
செக்ரட்டரி
B. K. மாதவன்
சேர்மன்

ஒரு சோழ மன்னனுக்குச் சோம சுந்தரரைத் தரிசிக்க ஆசை பிறந்தது. பாண்டியன் கடும் எதிரி. எப்படிப் போவான்? சுந்தரேசுவரர் அவனுடைய கனவில் தோன்றி, வழி சொல்லி, அத்துடன் நிற்காமல், சித்தர் உருவில் வந்து சோழ மன்னனை மேற்கு வாயில் வழியாக அழைத்து வந்து நள்ளிரவில் தரிசனம் கொடுத்தார்.

கொடுத்தவர், மன்னன் போன பிறகு, (ஞாபக மறதியில்) மேற்கு வாயிலைப் பூட்டினார். பாண்டியனுடைய மீன முத்திரைக்குப் பதிலாக, சோம சுந்தரரின் விடை இலச்சினை பொறிக்கப் பட்டிருக்கவே, பாண்டியன் குழம்பிப் போனான்.

சோம சுந்தரர் பாண்டியனுடைய கனவில் தோன்றி, நடந்ததை யெல்லாம் சொல்லி அவனுடைய குழப்பத்தைத் தீர்த்து வைத்தார். —புராண வரலாறு

21

லாவண்யா கடிகாரத்தைப் பார்த்தாள். எட்டரை. ரமணி அம்மாவுடன் பேசிவிட்டு, அவளைப் பார்க்காமலேயே திரும்பிப் போய் விட்டான். அவளுடைய மனத்தை அவன் நினைவுகள் என்ற கயிற்றால் கட்டிப் போட்டிருக்கவில்லை யாயினும், இப்போது ரமணி வெளியேறியபோது, ஏதோ ஒரு விடுதலை கிடைத்து விட்டதான உணர்ச்சி லாவண்யாவின் மனத்தில் உண்டாயிற்று. ரமணியை அவள் ஒரு நல்ல மனிதனாகத்தான் மதித்திருந்தாள். இந்த நல்ல மனிதன் மஞ்சள் கயிற்றுடன் வந்திருந்தால், கண்டிப்பாக அவள் கழுத்தை நீட்டி யிருப்பாள். அவளுக்குத் தேவையான, இன்றியமையாத ஒரு தாம்பத்தியத்தை ஒரு நல்ல மனிதன் அதுவும் 'பணக்காரன் தங்கத் தட்டில் வைத்து நீட்டினாலும் அதைத் தட்டி எறிய அவள் பைத்தியம் இல்லை. காதல், சீதல் என்று பிதற்றும் வர்க்கத்தைச் சேர்ந்தவள் இல்லை அவள். யதார்த்த வாழ்க்கையில் முழு நம்பிக்கை கொண்டவள். ஒருசில நேரங்களில் ரமணியைப் பற்றிய எண்ணங்கள் பிறக்கும்போது அவன் கணவனாக வாய்த்தால் எதிர்கால வாழ்க்கை எப்படி அமையும் என்று நினைத்துப் பார்த்திருக்கிறாள். ஒரு சுகமான, சௌகரியமான, ஏன் திருப்தியான வாழ்க்கையாகத் தோன்றி யிருக்கிறது. எல்லோரும் அடைய விரும்புவதும் இம்மாதிரியான ஒரு வாழ்க்கையைத்தானே?

இனி அதைப் பற்றி அவள் நினைத்துப் பார்க்க வேண்டாம். பூர்ணத்தைத் தூசாக மதித்த அவள் ரமணியைக் கிடைக்கக் கூடிய உயர்ந்த பொருளாக மதித்திருந்தாள். பல யதார்த்த காரணங்களால் கிடைக்காமல் போய்விட்டது. ரமணியின் மனத்திலாவது ஒரு தாபமும் வருத்தமும் எஞ்சி நின்றன. லாவண்யா மனத்தில் அவை கூட இல்லை. ரயில் ஒரு ஸ்டேஷனில் சில நிமிடங்கள் நின்று விட்டுப் புறப்படுவது போல் அவளுடைய மனம் ஒரு சில விநாடிகள் பாதிக்கப்பட்டு, இப்போது மீண்டும் அதன் இயல்பில் ஓடுகிறது. அவ்வளவுதான்.

''அக்கா!''

திடீரென்று எழுந்த குரலில் லாவண்யா திடுக்கிட்டுப் போனாள்.

''என்னடி நீலா, இப்படிக் கத்திப் பயமுறுத்திட்டே...!''

''சாதாரணமாகத்தானே கூப்பிட்டேன்? நீ உன்னை மறந்து யோசிச்சிண்டிருக்கே.. எதைப் பத்தி? பாங்கிலே இருக்கிற பணத்தைப் பத்தித்தானே?''

''ஆமாம்னு சொன்னாத் திருப்திதானே?''

''திருப்திதான்...அது சரி, உனக்கு விஷயம் தெரியுமா? எனக்கு வேலை கிடைச்சுடுத்து. வக்கீல் குமாஸ்தா வேலை. ரமணியோட ஆபீஸ்லே...ரமணிதான் வாங்கித் தந்தார்.''

''ரொம்ப சந்தோஷம் நீலா.''

''கன்க்ராஜு¬லேட் பண்ணினு கொறைஞ்சு போயிடுவியா?''

''கன்க்ராஜு¬லேஷன்ஸ், நீலா.''

''தாங்க்யூ... மொட்டைக்கு ரொம்பச் சந்தோஷம். அதை விட அவள் அம்மாவுக்கு.''

''நீலா?''

''என்ன அக்கா?''

மதுர நாயகி

பி.வி.ஆர்





''நான் கேள்விப்பட்டது உண்மையா?''
''என்ன கேள்விப்பட்டே?''
''நீயும்....'' லாவண்யாவுக்கு நா கூசியது.
'' நானும் மொட்டையுமான்னுதானே கேட்க நினைச்சே?''
''தப்பாப் பேசியிருந்தால், என்னை மன்னிச்சிடு நீலா.''
''மன்னிச்சேன், அக்கா?''
''கேட்டப்போ நான் நம்பவே யில்லே. இருந்தாலும் உங்கிட்டயே நேரடியாக் கேட்டுடலாம்னு கேட்டேன்.''
''மொட்டை நல்லவன், அக்கா... ஓர் உபகாரி....பிரியமா இருக்கான்....ஆனா இது வரையிலே மீனாட்சி மேலே ஆணையா சொல்றேன், நான் ஒரு தப்புத் தண்டாவுக்குப் போகலே, போகவும் மாட்டேன்...''
''தெரியும்....நம்ம மாதிரி ஏழைப் பெண்களுக்கு அழியாத சொத்தே கற்புத்தானே!''
''சரிசரி, மொட்டையைப்பத்திக் கேட்டே, சொல்லியாச்சு. இப்ப நீ எனக்கு ஒரு உதவி பண்ணனும்.''
''சொல்லு.''
''என்கிட்டே ஏழு ரூபாய் இருக்கு. இதை வெச்சுண்டு பாங்கிலே ஒரு அக்கௌண்ட் ஆரம்பிக்க முடியுமா?''
''ஆரம்பிக்கப் போறியா?''
''ஆமாம். நீ உன் பணத்தைப் பாங்கியிலே போட்டுப் போட்டுப் பாஸ் புக்கை முழுங்கற மாதிரி நீ பார்க்கறப்பவெல்லாம் எனக்கு எரிச்சல் வரும் அக்கா. ஆனா, பாங்கிலே இப்போ இருந்தே பணம் போட ஆரம்பிச்சாத்தான் நமக்குக் கதி மோட்சம் உண்டுன்னு புரியறது.''
''எத்தனை போடப் போறே...?''
''மாசம் நூறு ரூபா...''
''நான் நாலு ரூபா தரேன். பதினொரு ரூபாயிலே ஆரம்பி.''
''தாங்க்ஸ் அக்கா... நாலு ரூபாயைச் சம்பளம் கிடைச்சதும் திருப்பித் தந்துடறேன்... ஓகே?''
''ஓகே...நாளைக்கு வேலை இருக்கு. ஆனால் என் பாங்க் எட்டு மணிக்கே ஆரம்பம். தயாராக இரு.''
''சரி...''
''நீலா....''
''நானும் ஒரு வேலையிலே சேரப் போறேன்.
''அப்படியா? குட்! எவ்வளவு சம்பளம்?''
''எழுநூறு ரூபா!''
''அடேயப்பா!.... என்னை விட ரெண்டு பங்கு அதிகம். என்ன வேலை?''
''தெரியாது. 'நாளன்னிக்குத்தான் தெரியும். எல்லாம் மொட்டையின் சிபாரிசு.''
''மொட்டைக்கே ஒரு வேலைன்னு இல்லையே!''
''இது லேமன் ஸ்பெஷலாம்.''

• • •

மறுநாள் காலை எட்டு மணிக்கு அக்காவும் தங்கையும் பாங்குக்குப் போனார்கள். நீலாவின் பெயரில் பதினொரு ரூபாயுடன் புதுக் கணக்கு ஆரம்பமாகியது. அதன் பின் நீலா ராமையாவின் வீட்டுக்குச் செல்ல,

லாவண்யா பாண்டியன் ஹோட்டலுக்கு விரைந்தாள்.

அன்று ஜெர்மனியிலிருந்து வரும் ஒரு மாணவக் கூட்டத்தை அழைத்துச் செல்ல வேண்டும். பாண்டியன்ஹோட்டலை அடைந்த பிறகுதான், மாணவர்களின் திட்டத்தில் மாற்றம் இருப்பதும், இன்னும் இரண்டு நாட்கள் கழித்துத்தான் அவர்கள் வரப் போகிறார்கள் என்ற விஷயமும் தெரிய வந்தது.

மனம் அலுத்துக் கொண்டே என்ன செய்வது என்று தெரியாமல் லாவண்யா ஒருசில நிமிடங்கள் ஹோட்டலின் ரிஸப்ஷன் கவுண்டர் அருகே நின்றாள். திடீரென்று கான்வேயின் ஞாபகம் வந்தது. அவனுடைய பிதற்றலைக் கொஞ்ச நேரம் கேட்டு விட்டு, அவன் நிச்சயமாய்த் தரப் போகிற காப்பியையும் குடித்து விட்டுப் போனால் என்ன?

ராபர்ட் ஃபிட்ஜெரால்ட் கான்வே விவேகானந்தரின் பொன்மொழிகளில் மூழ்கிக் கிடந்தான். திடீரென்று லாவண்யா பிரவேசிப்பதைக் கண்டதும் அவனுக்கு எரிச்சலும் அதே சமயத்தில் மகிழ்ச்சியும் உண்டாயிற்று. பொன்மொழிகள் போய்விட்டனவே என்ற எரிச்சல்; லாவண்யா வந்திருக்கிறாளே என்ற மகிழ்ச்சி.

''குட் மார்னிங், குட் மார்னிங்!'' என்றான் அவன்.

''ரொம்ப சுவாரசியமாப் படிக்கிறீர்களோ?''

''சுவாமி விவேகானந்தரின் பேச்சுக்கள்! உட்கார், மிஸ் லாவண்யா! நானே உன்னைப் பார்க்க வரலாம்னு இருந்தேன்.''

''ஏன், ஏதாவது விசேஷமா?''

''இன்னிக்கு ராத்திரி மெட்ராஸ் போறேன்... நாளைக்கு ப்ளேன் ஏறரேன்.''

''யூ மீன் ஸ்டேட்ஸ்?''

''யெஸ்... மை மதர் இஸ் டெட்!''

'ஒரு பாத்திரம் கீழே விழுந்து விட்டது' என்று சொல்வது போல் கான்வே தன் தாயின் மரணத்தை அறிவித்தான்.

''என்ன, உங்க அம்மா செத்துப் போயிட்டாளா... யூ மீன் யுவர் மதர்?''

''யெஸ். மை ஓன் மதர். நாட் மை ஸ்டெப் மதர்.... ஐ டோண்ட் ஹாவ் ஒன்...''

''பின் ஏன் இப்படி இருக்கிறீர்கள்?''

''எப்படி இருக்கணும்னு சொல்றே லாவண்யா!''

''செத்துப் போனது உங்க அம்மா...உங்களைப் பெற்றவர்!''

''ஸோ வாட்... ராத்திரி பன்னிரண்டு மணிக்குக் கேபிள் வந்தது. கார்த்தாலேயே புறப்படலாம்னு நெனைச்சேன். ஆனா என்ன பிரயோசனம்? நாளைக்கு மத்தியானம்தான் மெட்ராஸ்லேயிருந்து ப்ளேன்... ராத்திரி மெட்ராஸிலே இருக்கிறதுக்குப் பதிலா ரயில்லேயே இருக்கலாம்னு முடிவு செய்தேன்....இங்கேயும் கொஞ்சம் வேலை பாக்கி இருக்கு.''

லாவண்யா அயர்ந்து போய் உட்கார்ந்து விட்டாள். பெற்ற தாய் இறந்து போயிருக்கிறாள், பின்னை ஒன்றுமே நடக்காதது போல் ப்ளேன், ரயில், வேலை என்று யோசித்துக்



கொண்டிருக்கிறான். கண்ணிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வரவில்லை.

''கான்வே, ஆர் யூ எ மேன்?''

''ஏன் கேட்கறே?''

''அழுகை கூட வரலையே?''

கான்வே இலேசாகச் சிரித்தான்.

''நேத்து ராத்திரி கேபிள் வந்தப்போ ஷாக் அடிச்ச மாதிரி இருந்தது. போன வாரம்தான் கடிதாக எழுதியிருக்கா. அதிலே உன்னைப் பத்திக் கூட விசாரிச்சிருக்கா. இப்படி ஸடனாப் போயிட்டாளேன்னு ஒரு ஷாக்.... பாவம், ஷி வாஸ் எ குட் மதர்... ஓய்? ஷி வாஸ் எ குட் வுமன்...''

''அம்மா செத்துப் போனதில் உங்களுக்குத் துக்கமே இல்லே போலிருக்கு. அப்படியானால் ஏன் அமெரிக்காவுக்குப் போகிறீர்கள்?''

''துக்கத்தை எப்படிக் காட்டணும்னு சொல்றே? லாவண்யா! மண்டையிலே அடிச்சுக்கணுமா? மதர்ஸ் டெத் இஸ் ஆஃப்கோர்ஸ் எ லாஸ்... டெரிபிள் லாஸ். பட் தென் ஷி இஸ் ஓல்ட்.ஏஜ்ட்... யுத்தத்திலே எத்தனை மில்லியன் யங் பெர்ஸன்ஸ் செத்துப் போயிருக்கா தெரியுமா? எங்க நேஷனோட லாஸ் எவ்வளவு தெரியுமா?''

''இதுதான் உங்க வேதாந்த வியாக்கியானமா?''

''யூ டோண்ட் வொரி, லாவண்யா... ஐ லவ்ட் மை மதர். அண்ட் ஷி லவ்ட் மீ. என்னோட ரெண்டு பிரதர்ஸ் வியட்நாம் யுத்தத்தில் செத்துப் போனா... அப்ப என் மதர் என்ன சொன்னாள், தெரியுமா, லாவண்யா? 'மை ஸன்ஸ் ஹாவ் பிகம் 'ஹீரோஸ் ஆஃப் மைகண்ட்ரி'ன்னு சொன்னா. அவ கண்ணிலேந்து கண்ணீர் வரலே!''

லாவண்யாவால் பதில் பேச முடியவில்லை.

''உங்க ஹிந்து மதத்திலே ஸாரி, ஹிந்து தர்மத்திலே என்ன சொல்லியிருக்கு? மனுஷன் சாகிறப்போ விடுதலையடைகிறான்... கூட்டிலே அடைஞ்சு கிடக்கிற தெய்வத்தின் உயிரணுவுக்குச் சுதந்திரம் கிடைச்சிருக்கு. அது நேரே தெய்வத்தின் காலடிக்குப் போயிடறது... டெத் இஸ் இன் எ லிபரேஷன்.''

''நீங்க இப்ப என்ன செய்யப் போகிறீர்கள்?''

''ராத்திரி பன்னண்டிலிருந்து ஐந்து மணி வரையில் நான் என் மதருக்காக ப்ரே பண்ணினேன். அவளோட சடலம் ஐஸ் பெட்டியிலே இருக்கு. நான் போனப்புறம்தான் ஃப்யூனரல்.''

''இன்னிக்கு மதுரையிலே என்ன பண்ணப் போகிறீர்கள்?''

''உன்னைப் பார்க்கலாம்னு இருந்தேன்... நீயே வந்துட்டே... பத்து மணிக்கு ஸம்ஸ்கிருத வாத்தியாரைப் பார்த்துச் சொல்லிக்கணும்... அப்புறம் லஞ்ச்... ஒய் நாட் யு ஹாவ் லஞ்ச் வித் மீ?''

''போய்த் திரும்பி வருவீர்கள் இல்லையா?''

''ஐ இங் ஸோ... ஆனா அப்பா என்ன சொல்றாரோ? எனவே என்னாலே இந்தியாவை மறக்க முடியாது. ஹிந்து தர்மத்தைக் கைவிட முடியாது!''

''எனக்கு என்ன சொல்றதுன்னே புரியலே!''

''ஃபார்கெட் தி ஹோல் திங்... பைதிவே ஹௌ இஸ் யுவர் ஃபாதர்?''

''ஸோ ஸோ....''

''யு வாண்ட் எனி ஹெல்ப் ஃப்ரம் மீ? ஐ மீன் இன் மை கண்ட்ரி?''

''நோ தாங்க்ஸ்... அவர் இன்னும் நாலஞ்சு நாளிலே மெட்ராஸ் போறார்... அங்கே ஆபரேஷன் நடக்கப் போறது.''

''குட்... மே காட் ஸேவ் ஹிம்...''

கான்வேயின் வாழ்த்தே அசம்பாவிதமாகப் பட்டது. தன்னுடைய தாயாரின் உடல் அவனுடைய வீட்டில் கிடக்கிறது. இன்னொருத்தியின் தகப்பனாருடைய உயிருக்காக அவன் பிரார்த்திக்கிறான்.

''லாவண்யா?''

''யெஸ்!''

''கேன் யு நாட் கம் டு மை கண்ட்ரி?''

''எதுக்கு?''

''உனக்குத் தெரியும்.''

''மிஸ்டர் கான்வே, நீங்க எப்படிப்பட்டவர்னு எனக்குத் தெரியும்.... என்கிட்டே எவ்வளவு பண்போடே, அன்போடே பழகறீங்கன்னும் தெரியும்... ஆனா நம்ம நட்பு வெறும் நட்பாகத்தான் இருக்க முடியும், மிஸ்டர் கான்வே!''

''எனக்குப் புரிகிறது. ஆனா யோசிச்சுப் பார்க்கலாம் இல்லியா?... இப்ப நான் ஒரு ஹிந்து.''

''ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்டியன் என்கிற பேதமே எனக்குக் கிடையாது. கான்வே... ஆஃப்டர் ஆல் வீ ஆர் ஆல் தி சில்ட்ரன் ஆஃப் தி காட்... எனக்கு உங்களோடு வரத் தென்பு இல்லே. பிறந்த மண்ணை உதறிட்டு வர மனசில்லே....''

''ஐ நோ யு டோண்ட் லவ் மீ... யு ஒன்லி லைக் மீ.''

''நான் யாரையுமே லவ் பண்ணினதில்லே. பண்ணவும் மாட்டேன்னு நினைக்கிறேன்... ஐ எய்தர் லைக் ஆர் டிஸ்லைக். தட் இஸ் ஆல்!''

''எனிவே, இட் இஸ் எ லாஸ் ஃபார் மீ!''

''ஸ்டேஷனுக்கு வரேன் கான்வே...''

''சந்தோஷம்.''

''இப்ப ஸம்ஸ்கிருத வாத்தியார் வீட்டுக்கு வறீங்களா?''

''இல்லே லாவண்யா... இன்னும் கொஞ்சம் படிச்சுட்டு, பத்து மணிக்கு மேலேதான் புறப்படறேன். உனக்கு அவசரமானால் நீ புறப்படு. காட் வில் ஸேவ் யுவர் ஃபாதர்.''

''கான்வே.''

''லாவண்யா?''

''உங்க அறைக்கு நான் எப்ப வந்தாலும் எனக்குக் காப்பி கொடுப்பீங்க... இன்னிக்கு இன்னிக்கு... மறந்துட்டீங்க... ப்ளீஸ் கெட் மீ தி லாஸ்ட் கப் ஆஃப் காஃபி!''

லாவண்யாவின் கண்கள் கனத்து, தொண்டை கம்மியது. வார்த்தைகளின் நெகிழ்ச்சியில் அவனே கரைந்து போனான்.

''ஓ வாட் எ ஃபூல் ஐ ஆம்!'' என்ற கான்வே, காப்பிக்கு ஆர்டர் கொடுக்க போனை எடுத்தான்.

''ஒரு நல்ல, பண்பு நிறைந்த நண்பனை நான் இன்று இழக்கிறேன்'' என்று லாவண்யா தன்னுள் முணுமுணுத்துக் கொண்டாள்.

(தொடரும்

நூற்றுக்கு நூறு!

ஜான்

அன்று மங்களகரமான நாள் என்று புகழ் பெற்றதும், கலக நாள் என்று பெயர் வாங்கியதுமான வெள்ளிக் கிழமை.

இளம் தம்பதிகளின் இன்பங்களுக்கு மிக எடுத்ததான கிழமை ஆகையால் என்ணெய் தேய்த்துக் குளித்த லாவண்யமான சோபையுடன் வாசற்படியில் நின்றுகொண்டு "சுருக்க வந்துடுவேளோ இல்லியோ?" என்று காரியாலயத்துக்குக் கிளம்பும் ஹரிசனைப் பார்த்துக் கேட்டாள்.

"பார்க்கலாம். ஆபீஸ் என்றால் ஆயிரம் இருக்கும்!" என்று சொல்லி நகர்ந்தபோது இந்த ஹரிதாவை இன்னும் ஒன்பது மணி நேரம் பிரிந்திருக்க வேண்டுமே என்று ஹரிசனின் மனம் படாத பாடு பட்டது.

மாலைப் பொன் முலாம் பூமியிலிருந்து தேய்ந்து நழுவியது. சாம்பலைப் பூசிய சந்திக் காலம் வந்தது. இவர் சுருக்க வருவார் என்று இத்தனை அவசரமாக மாலை அலங்காரங்கள் செய்து கொண்டிருக்க வேண்டாமே என்று நொந்து கொள்ளும் அளவுக்கு மணி ஏழு, ஏழரை என்று ஆயிற்று. இந்த மூன்று மாதமாக அவன் இவ்வளவு தாமதித்து வந்ததில்லை.

வாசலுக்கு வந்து உள்ளே போனவள், பின்னே காலடி கேட்டுத் திரும்பினாள். கையும் பூப் பொட்டணமுமாக வரும் கணவனைப் பார்த்து, "எத்தனை நாழி வாசலையே பார்த்துக் கண் பூத்துப் போவது?" என்றாள் கொஞ்சலாக. "ஏன் இத்தனை நேரம்?"

"இனிமேல் வர நேரமாகும் தெரியுமோ இல்லியோ?"

"ஏனும்?"

"என் பழைய செகரட்டரி ஆண்டியப்பனை வேறு ஆபீஸுக்குப் பி. ஏ. ஆகப் போட்டுட்டார்கள்."

"இப்ப செகரட்டரியே இல்லையா?"

"என்ன அப்படிக் கேட்டுட்டே? ஸீனியர் எக்ஸிக்யூடிவுக்குப் பெண்பால் செகரட்டரிகள் இருந்தால்தான் கௌரவமாம்."

"என் பாராட்டுக்கள். செகரட்டரி வேலைக்கு ஆண்களை விடப் பெண்கள்தாம் மேல்."

"என்ன இனப் பற்று?"

"மனைவிகள் வீடுகளில் வேண்டியதைக் காலாகாலத்தில் செய்து தருவது போல் அலுவலகத்தில் அவர்கள் செய்து தருவார்கள்."

"அவளை நீ பார்க்கணுமே!"

"அழைச்சுண்டு வாங்கோ, பார்க்கிறேன்!"

"என்ன அழகு தெரியுமா?"

"கம்பெனி பர்ஸனல் பெண் ஸெகரட்டரிகளுக்கு அழகும் தளுக்கும் அவசியம். வந்த விஸிட்டர் பார்த்தால் பயந்து ஓடக் கூடிய அசோக வனக் காவலாளிகள் ரகத்துக்கா தேர்ந்தெடுப்பார்கள்?"

"என்ன நளினமாப் பேசறு, தெரியுமா?"

"மட்டையாலே அடிக்கிறாப்பலே கட்டைத் தொண்டைக்காரியையா எடுப்பா கம்பெனியிலே?"

● ● ●

"ஹரிதா, இன்று சில்பாவுக்கு, அதாவது என் பெண் பர்ஸனல் செகரடரிக்குப் பயிற்சி அளித்து என் வேலையைப் பற்றி விளக்கி முக்கியமான சில வெளிநாட்டு ஆர்டர்களுக்குப் பதில்கள் தரணும். என்ஜினீரிங் கம்பெனி கன்ஸல்டேஷன் சர்விஸ் இந்த மாதிரி ஆபீஸ்களில் அதிக அனுபவம் இல்லாதவள்" — காலையில் எழுந்ததும் நினைவு படுத்தினான் ஹரிசன்.

"சீக்கிரம் போகணும். அப்படித்தானே?"

"ஆமாம்."

"நொடியிலே எல்லாம் ஆயிடும்."



வழக்கத்துக்கு முக்கால் மணி நேரம் முன்னாலேயே மேஜையில் பிளேட்டுக்களை வைத்துப் பரிமாறத் தயாராகி அவனை உட்காரச் சொன்னாள். அவனுக்கே திகைப்பாக இருந்தது.

"எப்படி வேலை செய்வாளோ, என் சில்பா?" என்றான் சாப்பிட்டபடி.

"பெண்கள் எதையுமே விரைவில் பிடித்துக்கொள்வார்கள். ஆண்களை விட அதிக உண்மையுடன் சின்ஸியராக வேலை செய்வார்கள்" என்றாள் ஹரிதா மதிய உணவுக்குக் காப்பி ஃப்ளாஸ்கில் வார்த்தபடி.

அவன் அவளை உண்டபடி ஓரக்கண்ணால் பார்த்தான். உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யக் கூடாது என்றிருக்க உண்டுகொண்டிருக்கையிலேயே கொண்டவனுக்கு இரண்டகம் செய்கிறோமே என்று பார்த்தான்? அவள் முகத்தில் துளிக்கூட சஞ்சலமில்லை.

அவன் ஆடைகள் வழக்கம் போல் தயாராக இருந்தன. அவன் கை கழுவி வந்ததும், அவள் ஒவ்வொன்றாக எடுத்துக் கொடுத்தாள். அவன் கண்ணாடி முன் நின்று அணிவதை ஆசையுடன் ரசித்தாள். அவ்வப்போது சரி செய்தாள். கப்லிங்கைப் போட்டு விட்டாள். கழுத்துப் பட்டையை நேராக்கி விட்டு அவன் முன் நின்று வெள்ளைப் பாண்டும் கட்டக் கோட்டுமாக மோகனக் காட்சி அளித்த அவன் தரிசனத்தை ரசித்தாள்.

அவளுடைய மாங்கதுப்புக் கன்னம் பாழ் போவது போல் இருந்தது. அவன் விடை



பெற்றபோது. ஆனால் வழக்கம்போல் அவள் அதைக் கலைக்கவில்லை. இவள் 'அவசரம் ஆபீஸ்வேலை என்றிருந்து' விட்டாள்போலும்.

இரவு பத்தாகி விட்டது அவன் திரும்பிய போது.

"சில்பா நன்றாக வேலை செய்கிறாளா?" என்று கேட்டாள் ஹரிதா.

"ஒரு பிழை கூடக் கிடையாது. அவள் டைப் அடிச்ச பக்கத்தை நீ பார்த்தால் அவள் விரலைக் கண்ணில் ஒத்திப்பே" என்றான், ஹரீசன். "சில்பாவை நாளைக்கும் வரச் சொல்லி யிருக்கிறேன்!"

"நாளைக்கு லீவு இல்லையோ? ஆபீஸுக்குப் போகணுமா?"

"வேலை சுமந்து போய்க் கிடக்கிறது!"

"வாங்கும் சம்பளத்துக்கு வேலையை முடிப்பது முக்கியம். நம் சினிமாப் புரோகிராமை இன்னொரு நாள் நடத்திக் கொண்டால்போகிறது!" – சர்வ சகஜமாக எடுத்துக்கொண்டு பேசினாள் ஹரிதா.

ஹரீசன் குளித்து முடித்துவிட்டு வந்த பொழுது, வெங்காய நெய் மணத்துடன் உப்புமா வேகும் மணம் வீசி வந்தது. முந்திரியும், கறிவேப்பிலையும் மணந்தது. அழகுறுத்த அவன் இளம்பு முன் தட்டில் உப்புமாவும் பக்கத்து நாச்சியாராகக் காப்பியும் இருந்தன.

வேண்டா விருப்பாக அவன் உப்புமாவைத் தின்றான். காப்பியைக் குடித்தான்.

"ராத்திரி வர நேரமாகும்" என்றான் அவளைப் பார்க்காமல்.

"வேலை சரியாக முடிந்துதானே வர முடியும்? எங்கப்பாவும் அப்படித்தான். ஆபீஸ்னு இது முடியணுமே. இது இன்னும் முடியலியே என்று பார்த்துப் பார்த்துப் பண்ணினால் மணி ராத்திரி பத்தாயிடறது என்பார்" என்றாள்.

"பாவம், அந்தப் பொண்ணும் இருக்கணும்."

"ஓவர் டைம்னு இருக்க வலிக்கிறதா? மேல் வரும்படின்னு ராத்திரி முழுக்க நான் கூடத்தான் இருப்பேன்" என்றாள்.

"ராத்திரி எனக்காக நீ சாப்பிடக் காத்திருக்க வேண்டாம். நானும் அவளும் லான்டர்ஸ்லே சாப்பிடுகிறோம்."

இரவு பன்னிரண்டு மணிக்குத் திரும்பினான் ஹரீசன்.

"சாப்பிட்டாளா?" என்றாள் அவள் உடைகளைக் கழற்ற உதவிய பின்.

"சாப்பிட்டு விட்டோம்."

"படுக்கை போட்டாகி விட்டது. களைப்பாக இருக்கும். படுங்கள். நான் நொடியில் சாப்பிட்டு விட்டு வருகிறேன்" என்றாள், காதல் கனியும் பரிவுடன்.

அவன் படுக்காமல் அவள் வரக் காத்திருந்தான்.

அவள் ஒய்யாரமாகப் படுக்கைக்கு வந்து பக்கத்தில் அமர்ந்தாள்.

"சில்பா சில்பாதான். மின்னலா மத்தாப்பூவான்னு அவளின் டைப் அடிக்கும் விரல்கள்..." என்றான்.

"ஆர்வத்துடனும் உண்மையுடனும் பழகியவளாக இருப்பாள். அப்படி இந்தக் காலத்தில் ஆள் கிடைப்பதே கஷ்டம்தானே? உங்கள் அதிர்ஷ்டமும் என் அதிர்ஷ்டமும் அப்படி ஒருத்தி உங்களுக்கு வாய்த்திருக்கிறாள்" என்றாள்

"ஹரிதா, உனக்கு என் மேல் ஆசையே இல்லை என்று எண்ணுகிறேன்." என்றான் அவளைப் பார்த்துத் திடீரென்று.

"சாதாரணமாகச் சில கணவர்கள் அப்படி நினைப்பதுண்டாம், பத்திரிகைகள்

பேசுகின்றன, விவாக மனத்தத்துவக் கட்டுரைகளில். எனக்கு உங்கள் மேல் ஆசை இல்லாவிட்டால் யாருக்கு இருக்கும்?''

''அப்படின்னு என்ன அர்த்தம்?''

''மனைவி வாயால் 'உங்கள் மேல் எனக்கு ஆசை' என்று வரவேண்டும் என்று கணவர்கள் ஆசைப்படுவார்கள்'' என்று பத்திரிகைக் கட்டுரை சொல்கிறது.''

''உன் வாயால் வரவில்லையே? எனக்கு உன்மேல் எத்தனை ஆசை என்று இதோ பார்'' என்று வாரப் பத்திரிகையிலிருந்து கிழித்தெடுத்த ஒரு பக்கத்தை அவள்முன் விட்டெறிந்தான் அவன்.

அந்தப் பகுதியின் தலைப்பு ''உங்கள் மனைவி உங்கள் மேல் ஆசையாக இருக்கிறாளா என்பதை நீங்களே கணித்துக் கொண்டு பாருங்கள்'' என்றிருந்தது. ஆண்களுக்கான பத்திரிகைகளில் ஒரு விவாக மனத்தத்துவ நிபுணர் புனைந்திருந்த பத்துக் கேள்விகள் கீழே காணப்பட்டன. அவன் கேள்விகளுக்குச் 'சரி' குறியிட்டுத் தனக்கு நூற்றுக்கு நூறு கொடுத்துக் கொண்டிருந்தான்.

அந்தக் கேள்விகளில் ஒன்று 'உங்கள் மனைவி வேறு ஒருவனிடம் பழகுவதால் ஆத்திரப்படுகிறீர்களா?' என்பது. ஆம் என்றால் அதற்குப் பத்து மார்க். ஆம் என்றுதான் அவன் குறித்திருந்தான். அதனால் பத்து மார்க் போட்டுக் கொண்டிருந்தான்.

தனக்கு நூற்றுக்கு நூறு காதல் மார்க் கிடைத்திருக்கிறதே. தன் மனைவி தன் மேல் முழு ஆசையாக இருக்கிறாளா என்று பார்க்க வேண்டாமா என்று அவனுக்குத் தோன்ற சில்பா நாடகம் ஆடியதில் ஹரிதா கொஞ்சமும் கோபப்படவில்லை. ஆகையால் தன் மீது அவளுக்கு நூற்றுக்குத் தொண்ணூறுதான் ஆசையோ என்று கோபம் வந்தது.

அவள் எழுந்து உள்ளே சென்றாள். அவள் பெண்கள் பத்திரிகையிலிருந்து ஒரு க்ளோஸ் காகிதப் பக்கத்தைக் கொண்டு வந்து கணவன் முன் இடத்தினாள். ''நீங்கள் உங்கள் கணவன் மீது உண்மையில் ஆசையாக இருக்கிறீர்களா என்று கணித்துக்கொள்ள'' என்ற தலைப்பில் பல கேள்விகள் போடப்பட்டிருந்தன. அதில் ஒரு கேள்வி: ''காரியாலயத்தில் கணவனுக்கு அழகிய பெண் காரியதரிசியானால் ஆற்றாமையால் கோபப்படுவீர்களா அவரிடம்?'' என்பது. பதில் 'மாட்டேன்' என்றால் பத்து மார்க் போட்டுக் கொள்ளச் சொல்லியிருந்தார் மனத்தத்துவ நிபுணர். இவள் 'மாட்டேன்' போட்டுப் பத்து மார்க்குப் போட்டுக் கொண்டிருந்தாள்!

காளிதாசரின் காவியம் நடன நாடகமாகி யுள்ளது. ஜெயப்ரியா மாளவிகாவாக வருகிறார். நடனக் கலைக்கேற்ற கவர்ச்சியான தோற்றமும், அக் கலையில் நல்ல தேர்ச்சியும் அவரிடம் இருக்கின்றன. ஆனந்த பரவசத்தில் அகம் மகிழ்ந்திருந்த வேளையைவிட, சோகம் கப்பிய முகத்தோடு கண்ணீரும் கம்பலையுமாக அவதியுற்ற வேளையில்தான் அவர் முக பாவங்கள் சோபித்தன. அதுவும், அரசன் அக்கினி மித்திரனின் காதலைப் பெற்று அதன் காரணமாக அரசியின் கோபத்துக்கு ஆளாகிச் சிறைப்பட்டிருந்த வேளையில் செல்வி ஜெயப்ரியா நெஞ்சை உருக்கிவிட்டார்.

மன்னன் அக்கினி மித்திரன் பாத்திரப் படைப்பில் விசேஷமாக எதுவும் இல்லை தான். மன்னன் மாளவிகாவைக் கண்டு மனத்தைப் பறி கொடுத்து, அரசியின் தலையீட்டினால் அந்தக் காதல் நிறைவேறாமல் போனபோது தவித்ததைத் தவிர விசேஷமாகக் கூற எதுவும் இல்லை. ஆனாலும் தாம்பரம் லலிதா அதிகமான வாய்ப்புத் தராத இந்தப் பாத்திரத்தைக் கையாள்வதிலேயே வெற்றி பெற்று விட்டார். ரசிகர்கள் மகிழ்ச்சியைக் கைஒலிகள் மூலம் அவ்வப்போது வெளிப்படுத்தினர்.

அரசி தாரணி தேவியாக மேடையில் தோன்றிச் சிறப்பாக நடித்தார் செல்வி பாக்யஸ்ரீ.

திரு பனசை மணி கதையமைப்பையும், பாடல்களையும் பொறுப்பாகச் செய்திருக்கிறார். இசைக் குழுவினர் தங்கள் பணியைச் செவ்வனே நிறைவேற்றினர்.

— காந்தன்





12. குடை வந்த மர்மம்

'சரயு இடையிடையே நேபாளத்துக்குப் போய் வரணும். நேபாளத்திலே கஞ்சா அபினி போன்ற போதைப் பொருள்கள் கொள்ளை மலிவு. அவற்றை சூட்கேஸிலே வைத்து அங்கிருந்து இந்தியாவுக்குக் கொண்டு வர வேண்டும். சுங்கச் சாவடிகளிலே எங்கேயாவது பிடித்துக் கொண்டு விட்டால், போலீஸ்காரர்களின் வாயை அடைக்கிறதற்கு, அவர்கள் கையிலே ஆயிரம் ஐந்நூறு என்று அழுத்த வேண்டும். எத்தனை செலவானாலும் இதிலே நல்ல லாபம் இருக்கிறது. இந்தத் தொழிலில் போலீசார் பெரும்பாலும் சந்தேகப்படுவது ஆண்களைத்தான். அதனாலே இந்த வேலையைச் சரயு போன்ற பெண்தான் செய்ய வேண்டும்.'

நிசிகாந்தனுக்கு இந்த யோசனை பிடிக்கவில்லை. எனவே, சம்மதிக்கவில்லை. ஆனால் சுதர்சன் ஒரே குறியாக ஒரே விஷயத்தைத் திரும்பத் திரும்பக் கூறினான். 'இந்த விஷயத்திலே போலீசாரின் பார்வை பெண்கள் மீது அதிகமாகப் படுவதில்லை!' என்பதுதான் அது.

'இத்தனை கஞ்சாவை இந்தியாவுக்குக் கடத்திக் கொண்டு வருவதனால் என்ன லாபம்?'' என்று கேட்டான் நிசிகாந்தன்.

''என்ன, அப்படிக் கேட்டு விட்டீர்கள்? லாபம் இல்லாமல் ஒரு தொழிலா? எந்தப் பொருள் ஆனாலும் வியாபாரம் செய்யத் தானே வரவழைக்கிறோம்? கல்கத்தாவுக்கு அக்கம்பக்கத்திலே எத்தனை எத்தனையோ புதிய ஆசிரமங்களைப் பார்க்கிறீர்களே, அவையெல்லாம் என்னவென்று எண்ணுகிறீர்கள்? கஞ்சா, அபினி ஆகியவற்றின் விற்பனை நிலையங்கள். பெயருக்குத்தான் ஆசிரமங்கள். இப்படித் தொழில் நடத்துவதனால் இன்னொரு லாபம் என்ன, தெரியுமா? அரசாங்கத்தினிடமிருந்து அனுமதியோ லைசென்ஸோ பெற வேண்டிய அவசியமோ அநியாய வரி அழ வேண்டிய தேவையோ இல்லை. தொல்லைகள் ஏதும் இல்லாத நல்ல லாபகரமான தொழில். நீங்கள் கவலையே படாதீர்கள். சரயு ஹௌரா ஸ்டேஷனில் இறங்கியதும் எங்கள் ஆள் தயாராகக் காத்திருப்பான். அவன் பொருள்களோடு அவளை ஜாக்கிரதையாக வீடு கொண்டு வந்து சேர்ப்பான்!'' என்று சுதர்சன் விளக்கினான்.

அதைக் கேட்ட நிசிகாந்தன் பீதி அடைந்து, ''எங்களுக்கு இந்த வீண் வம்பு வேண்டாம், சார். இது ஆபத்தான காரியம். நாங்கள் எப்பொழுதும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு இருக்கணும். என்றைக்காவது கையும் மெய்யுமாகப் பிடிபட்டால், அப்பாவி சரயுவும் சிறைக் கம்பி எண்ண வேண்டி வரலாம்!'' என்றான்.

சுதர்சன் வேட்டுச் சிரிப்பு ஒன்று சிரித்து, ''உங்கள் பேச்சைக் கேட்டுச் சிரிப்புத்தான் ஐயா வருகிறது. உங்களை நான் ஒன்று கேட்கிறேன், இன்று வரைக்கும் கடத்தல்காரன் எவனாவது பிடிபட்டிருக்கிறானா, சிறைக்குப் போவதற்கு? நீங்கள் சொல்வது போல் எல்லோரும் சிறைக்குப் போவது என்று வந்து விட்டால், சிறைச்சாலையில் இடம் இருக்குமா என்று கேட்கிறேன். அந்தப் பிரச்னை ஒருபுறம் இருக்கட்டும், போலீஸ்காரர்களுக்குக் கைச் செலவுக்குக் காசு எங்கிருந்து கிடைக்கும் என்று கேட்கிறேன். போலீஸ்காரர்களும் மனிதர்கள். அவர்களுக்கும் மனைவிமார்கள், குழந்தைகள் குட்டி - என்று உண்டு. அரிசி — பருப்பு, உப்பு—புளி, காய் - கறி, துணி - மணி எல்லாம் அவர்களுக்கும் வேண்டியது தானே? இந்தத் தொலையாத சம்பளத்தை மட்டும் வைத்துக் கொண்டு அவர்கள் எப்படி சார், வாழ முடியும்? சொல்லுங்கள்!'' என்றான்.

நிசிகாந்தனுக்குச் சுதர்சனின் பேச்சில் பொருள் இருப்பதாகவே பட்டது. 'இந்தக் காலனிக்கு அவர்கள் புதிதாக வந்தபொழுது, எத்தனை பேர் எப்படியெல்லாம் பயமுறுத்தவில்லை? ஆனால் இன்று வரை யாரை யாரால் வெளியேற்ற முடிந்தது? அதைப் போல நமக்கு ஏன் இந்த வம்பு தும்பு என்று 'ரிஸ்க்' எடுக்கப்

பயந்து ஒதுங்கிப் போனால் லாபம் எப்படிக் கிடைக்கும்? ஒரு காரியம் என்று இறங்கினால் பயந்து கட்டுமா?' என்று எண்ணிப் பார்த்தவன், ''ஒவ்வொரு முறையும் சரயுவுக்கு என்ன கிடைக்கும்?'' என்று கேட்டான்.

''ஐந்நூறு ரூபாய். மற்றபடி ரெயில்சார்ஜ், சாப்பாட்டுச் செலவு, போலீஸாருக்குக் கொடுக்க வேண்டிய லஞ்சம் எல்லாம் எங்கள் செலவு'' என்றான் சுதர்சன்.

''ஐந்நூறு ரூபாயா?'' நிசிகாந்தனுக்கு நிறைவு ஏற்பட்டாற் போலிருந்தது. ''ஆமாம், மாதத்துக்கு எத்தனை நடை சரயு நேபாளத்துக்குப் போய் வரவேண்டியிருக்கும்?'' என்று கேட்டான்.

''மூன்று நடை போக முடிந்தால் மூன்று நடை போகட்டும். பத்து நடை போக முடிந்தால் பத்து நடை போகட்டும். எத்தனை நடை போய் அவள் பொருள் கொண்டு வருகிறாளோ, அத்தனை நடைக்கும் அவளுக்கு ஐந்நூறு ஐந்நூறு ரூபாய் வீதம் கிடைக்கும்!'' என்றான் சுதர்சன்.

''நேபாளத்திலே சரயு எங்கே போய்க் கஞ்சா வாங்க வேண்டியிருக்கும்? அவள் இது வரை தன் வாழ்க்கையில் ஒரு நடை கூட நேபாளத்துக்குப் போனதில்லையே! அங்கே யாரையும் அவளுக்குத் தெரியவும் தெரியாதே!'' என்றான் நிசிகாந்தன்.


''நீங்கள் துளிக்கூட இந்த விஷயத்தைப் பற்றியெல்லாம் கவலைப்பட வேண்டாம். அங்கேயும் எங்கள் ஆட்கள் இருக்கிறார்கள். எல்லா ஏற்பாடுகளையும் அவர்கள் கவனித்துக் கொள்ளுவார்கள். நேபாளத்துக்குப் போய்ப் பொருளைப் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்ப்பதுதான் உங்கள் மனைவியின் வேலை. மற்ற தொல்லைகளை யெல்-



லாம் நாங்கள் கவனித்துக் கொள்ளுகிறோம்!'' என்றான் சுதர்சன்.

அப்புறம் நிசிகாந்தனுக்குத் தடை சொல்லக் காரணம் ஏதும் இருப்பதாகத் தோன்றவில்லை.

சரயு மறுநாளே வேலையில் ஈடுபட்டு விட்டாள். சுதர்சன் முன் பணமாகக் கொஞ்சம் ரூபாய்கள் கொடுத்துப் போனான். அதைக் கொண்டு சரயு புதுப் புடவை, ரவிக்கை உட்பாவாடை எல்லாம் வாங்கிக் கொண்டாள். அதற்குப் பின் ஒரு நல்ல நாள் பார்த்து, ஆண்டவன் மேல் பாரத்தைப் போட்டு நேபாளத்துக்குப் பயணமானாள். ஐந்து நாட்களுக்குப்பின் சௌக்கியமாகத் திரும்பியும் வந்தாள். வழியிலே தொல்லை- இல்லை ஏதுவும் ஏற்படவில்லை. சூட் கேஸுக்குள் சரயு என்ன அடைத்துக்கொண்டு வந்தாள் என்பது யாருக்குமே தெரியவில்லை. அன்றைக்கே சுதர்சன் ரொக்கமாக ஐந்நூறு ரூபாயை வீட்டுக்கே கொண்டு வந்து கொடுத்துச் சென்றான். இம்மாதிரி பலமுறை சரயு நேபாளத்துக்குப் போய் வந்த பின் நிசிகாந்தன் டாலீகஞ்சில் இருநூற்றைம்பது ரூபாய் வாடகைக்கு ஒரு



ஃபிளாட்டை எடுத்துக் கொண்டான். அதிலிருந்து அவன் கைக்குப் பணமும் வந்து குவியலாயிற்று. கட்டுக் கட்டாகப் பணம் புரளவே, அவனுக்கே பிரமிப்பாயிருந்தது. நிசிகாந்தன் நிம்மதியாக ஆனந்த வாழ்க்கை நடத்தலானான். வேலை செய்து மாய்கிற வேலையெல்லாம் சரயுவின் தலையிலே. நிசிகாந்தனோ கால் மேல் கால் போட்டுக் கொண்டு களிப்பில் மிதந்தான்.

டாலீகஞ்சில் ஆதிகங்கைக் கரையிலே புதியதோர் ஆசிரமம் உருவானது அந்த நாளில் தான். அதற்கு ஒரு புதிய துறவியை எங்கிருந்தோ பிடித்துக் கொண்டு வந்து போட்டார்கள். நாளடைவில் பக்தர் கூட்டம் வண்டென மொய்க்கலாயிற்று. சரயு அக்கம்பக்கத்துப் பெண்களையெல்லாம் ஒன்றுகூட்டிக் கொண்டு வருவாள். பஜனையும் பூஜையும் பிரமாதப்படும். பிரசாதமெல்லாம் வழங்கப்படும். இப்படியாக ஒருநாள் ஆசிரமம் அங்கே ஆழ வேர் ஊன்றி விட்டது.

இடையிடையே சரயு சியாம் பஜாரில் உள்ள தங்கையின் வீட்டுக்குப் போய் வருவதாகக் கூறிக் கொண்டு நேபாளத்துக்குப் போய் வரலானாள். அவள் சம்பாத்தியம் பெருகலாயிற்று. ஆனால் பத்தும் செய்யும் பணம் தன் குணத்தைக் காட்டி விட்டது. கையில் நாலு காசு துள்ளவே, நிசிகாந்தன் தலைவிரித்து ஆடினான். பண போதை அவனைக் குடிபோதைக்கு ஆளாக்கியது. அதில் அவன் கண்ட விறுவிறுப்பு, உடலுறுதி பெறுவது போன்ற பிரமையை அவனுக்கு உண்டு பண்ணியது. ஆனால் அவன் வாழ்க்கை மட்டும் பாழாகவில்லை; சரயுவின் வாழ்க்கையும் பாழாகியது. அவள் ஆட்டிப் படைக்கிறபடியெல்லாம் அவன் ஆடும்படி ஆகிவிட்டது.

கையில் காலணா இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தவன் இரவுக்கிரவே பணக்காரன் ஆவதென்றால்...? அற்பனுக்குப் பவிஷு வந்தால் அர்த்தராத்திரியிலே குடை பிடிக்கிற கதைதானே?

ஆனால் திடீரென்று ஒருநாள் போலீஸ் அவன் வீட்டைத் தேட்டை போட்டது. இங்கு கஞ்சாக் கடத்தல் நடைபெறுகிறது என்று யாராவது போலீசுக்குத் தகவல் கொடுத்தார்களோ, அல்லது லஞ்சம் வாங்கும் போலீஸ்காரர்கள்தான் மாற்றிப் போய் விட்டார்களோ, தெரியாது! அந்த வீடு பெருத்த சோதனைக்குள்ளாகியது. ஆனாலும் சரயுவும் நிசிகாந்தனும் பின்கட்டு வழியாக ஓடிப்போய் எப்படியோ தப்பிப் பிழைத்து விட்டார்கள். போலீசார் வீட்டுக்குச் சொந்தக்காரனைப் பிடித்துக் கொண்டு கழற்றி எடுத்து விட்டார்கள். அவன் தனக்குத் தெரிந்த தெல்லாவற்றையும் கக்கி விட்டான். அன்றிரவே நிசிகாந்தன் டாலீகஞ்சு வீட்டை விட்டு மல்லிக் சாஹப்பின் வீட்டுக்குக் குடியேறினான்.

நிசிகாந்தன் தன் கதையைத் தொடர்ந்தான்: ''அதற்கப்புறம் சார், மீண்டும் அதே நிலை. அதாவது பழைய குருடி கதவைத் திறடி என்கிற கதை. சேர்த்து வைத்திருந்த பணம் கரையலாயிற்று. சரயு எவ்வளவோ கட்டும் செட்டுமாகத்தான் குடும்பம் நடத்தினாள். ஆனால் எத்தனை நாட்களுக்கு அந்தப் பணம் வரும்? பணம் தீர்ந்து விடவே, இருந்த பொன் நகைகள் மீது விடிந்தது. அவற்றையும் விற்றுச் சாப்பிட்டோம்!''

''ஆமாம்; அந்தச் சுதர்சன் என்ன ஆனான்?'' என்று குறுக்கிட்டுக் கேட்டேன் நான்.

''வேடிக்கையான ஆள் சார் அவன். எங்களை இந்தத் தொழிலில் மாட்ட வைத்து விட்டு அவன் எங்கேயோ கண் மறைவாகி விட்டான். இன்று வரை ஆள் இருக்கிற இடமே தெரியவில்லை!'' என்றான் நிசிகாந்தன்.

''சுதர்சன் போத்தார் வெறும் இடைத் தரகனாயிருக்கலாம். அவனுக்கு முதலாளி ஒருவன் இருந்திருப்பானே, அவனை நீ ஏன் தேடிக் கண்டு பிடிக்கவில்லை?''

''என்னால் இயன்ற வரை முயன்று பார்த்தேன். ஆனால் அவன் ஊர்–பெயர் எனக்குத்

"உன்னிடம் நான் வாங்கின ஐம்பது பைசாவை நானே திருப்பித் தர்றேன். பைசா கொண்டையைக் கலைத்து விடு."



தெரியாதது மட்டும் இல்லை; அவனை ஒருமுறை கூட நான் பார்த்ததே இல்லை. அப்படியிருக்கும் பொழுது எப்படிக் கண்டு பிடிக்க முடியும்? ஆனால் ஊர்சுத்தி வரும் பொழுது ஒரு நாள் பார்த்தேன். மாணிக்தலாவில் கங்கைக் கரையிலே புதிதாக ஒரு சாமியார் முளைத்து ஆசிரமமும் நிறுவியிருந்தார். சரயுவை விட்டு விட்டுச் சுதர்சன் வேறு ஒருத்தியைப் பிடித்துக் கொண்டிருப்பான் என்று எண்ணினேன். ஆனால் இந்த மாதிரி வேலையில் இனி மாட்டிக் கொள்ளக் கூடாது என்று உறுதி பூண்டு விட்டேன். அதன் மூலம் கைநிறையப் பணம் கிடைக்கிறது என்பது என்னவோ மெய்தான். ஆனால் துளிக்கூட நிம்மதி கிடைப்பதில்லையே! சரயு நேபாளத்துக்குப் புறப்பட்டுப் போய் விட்டாளானால், எனக்கு இரவு முழுவதும் தூக்கமே பிடிப்பதில்லை. பசி—தாகம் கூடத் தெரிவதில்லை. குருட்டுக் குருட்டு என்று ஏதாவது யோசித்துக் கொண்டே யிருப்பேன். சரயுவைப் போலீஸ் பிடித்து விட்டால் என்ன ஆகும்? அவள் திரும்பி வரும் வரையில் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பேன். அப்பொழுதிலிருந்துதான் நான் சாராயமே குடிக்கத் தொடங்கினேன். அதற்கு முன்பெல்லாம் நான் சாராயத்தை ஏறெடுத்தும் பார்த்ததில்லை. நீங்கள் நம்பினால் நம்புங்கள்; நம்பா விட்டால் போங்கள்!" என்று கூறிய நிசிகாந்தன் எழுந்து நின்றான். "பாவம், இத்தனை நேரமும் என் துயரக் கதையைப் பொறுமையாகக் கேட்டீர்களே, அதற்கு மெத்த நன்றி!" என்றவன், "இப்பொழுதாவது எனக்குப் பணம் கொடுங்களேன்!" என்றான்.

"ஆமாம். உன் மனைவி சரயு உன்னை ஏன் விட்டு விட்டுப் போய் விட்டாள்? நீ இப்படிக் கஷ்டப்படுகிற காலத்திலே அவள் உன்னை உதறிவிட்டு ஏன் விலகி யிருக்க வேண்டும்? நீ மீண்டும் அவளைக் கொண்டு பணம் சம்பாதிக்க நினைக்கிறாய். அந்தப் பணத்தைக் கொண்டு சாராயம் குடிக்க நினைக்கிறாய். அதனால்தான் அவள் உன்னை விட்டு விலகி யிருக்கிறாள் என்று நினைக்கிறேன்" என்றேன்.

நிசிகாந்தனுக்குக் கோபம் வந்து விட்டது. "உங்களுக்கு இதெல்லாம் சரயுதானே சொன்னாள்? சுத்த மோசக்காரப் பெண் அவள். அவளுக்காக நான் என்னவெல்லாம் செய்யவில்லை? என் உயிரைப் பணயம்வைத்து அவளைக் காப்பாற்றினேன். அவளை மணந்து கொண்டு அவள் மானம் காத்தேன். எத்தனை நன்றிகெட்ட ஜன்மமாக இருந்தால் இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டு திரிவாள்?" என்று அவளை ஒரே சாடலாகச் சாடினான். பிறகு, "சரி, அதைப் பற்றி இப்பொழுது பேசி என்ன பயன்? நீங்கள் பணம் கொடுத்தாலும் சரி, கொடுக்கா விட்டாலும் சரி; ஒன்றே ஒன்று மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். மேலே கடவுள் என்று ஒருவன் இருந்தால், சரயு சொல்வது சரியா, நான் சொல்வது சரியா என்பதை அவனே தீர்த்து வைப்பான். சார்! இந்த உலகத்திலே பணம் மட்டும்தானா பெரிது? பணத்தைக் காட்டிலும் பெரிய பொருள் இல்லையா? பார்க்கப் போனால் பணம் இன்றைக்கு வரும், நாளைக்குப் போகும். பணத்தைக் காட்டிலும் பெரியதாக ஒன்று இருக்கிறது. அதுதான், நேர்மை, நாணயம் என்பது. நான் நேர்மையானவனாகவும் நாணயமானவனாகவும் இருந்து விட்டால், எனக்குக் கிடைக்க வேண்டியது எப்பொழுதும் தானாகவே கிடைத்து விடும். அதை நான் தேடித் திரியவேண்டி யிராது. இதை மட்டும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள்!" என்றான்.

இப்படிக் கூறியவாறே நிசிகாந்தன் வாசற்படி வரை போய் விட்டான். எதேச்சையாகச் சுவரில் மாட்டியிருந்த மல்லிக் சாஹப்பின் குடைமீது அவன் பார்வை விழுந்தது. அதைக் கண்டு அவன் திகைத்து நின்றான். ஒளிந்து கொள்ளுகிற அவசரத்தில் மல்லிக் சாஹப் குடையை எடுத்துக் கொள்ள மறந்து விட்டிருந்தார். நிசிகாந்தன் மல்லிக் சாஹப்பின் குடையை அடையாளம் கண்டு கொண்டு விட்டான். "இதென்ன? இது மல்லிக் சாஹப்பின் குடை போலிருக்கிறதே! இது இங்கே எப்படி வந்தது? மல்லிக் சாஹப் இங்கே வந்திருந்தாரா, என்ன?" என்று கேட்டான்.

நான் பதில் சொல்ல வாயெடுப்பதற்கு முன்பாகவே, "மல்லிக் சாஹப் இங்குதான் எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்க வேண்டும்!" என்றான்.


"நீ வீட்டுக்குப் புறப்பட்டு விட்டாய் அல்லவா? போய்வா! யார் குடையாக இருந்தால் உனக்கு என்ன? தம்பிடி பெறாத விஷயத்துக்கு உன் மூளையைப் போட்டு எதற்காகக் குழப்பிக் கொள்ளுகிறாய்? எனக்கு எழுத வேண்டும். என் நேரத்தை வீணாக்காதே!" என்றேன்.

"விட்டுத் தள்ளுங்கள்! சார்! பெரிதாக என்ன எழுதிக் கிழிக்கப் போகிறீர்கள்? தீபாவளி மலர் — தீபாவளி மலர் என்று சொல்லி ஏதாவது கேட்டால் எழுதப் போகிறீர்கள்! அது என்ன எழுத்தோ? தலையெழுத்து! எதற்கு சார் அநாவசியத் தொல்லை? சொல்லப்போனால் பணம் சம்பாதிக்கிறதற்கு இந்த எழுத்தும் ஒரு வழி; வியாஜம். வேறு என்ன? மல்லிக் சாஹப்பின் குடை இங்கே எப்படி வந்தது. அதைச் சொல்லுங்கள்! நான் போய் விடுகிறேன்!" என்றான் நிசிகாந்தன்.



daCunha/CS/20 N TAM

கேர்ஃப்ரீ* பாதுகாப்பு



அதாவது இது முழுமையான பாதுகாப்பு அளிக்கிறது. இதற்காக நீங்கள் கொடுக்கும் பணத்தைவிட மிக அதிக மதிப்பு வாய்ந்தது.

மாதத்தில் அந்த ஐந்து நாட்கள், பெண்களின் உடலுக்கு முழுவதும் நம்பகமான, தனிப்பட்ட பாதுகாப்பு தேவைப்படுகிறது: அதாவது கேர்ஃப்ரீ பாதுகாப்பு. சானிடரி பாதுகாப்பு சாதனங்களை உருவாக்கும் உலகின் தலையாய நிறுவனமான ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் இதைத் தயாரிக்கிறார்கள். ஒரு பெண்மணி பாதுகாப்பையும் காப்புறுதியையும் உணருவதற்குத் தேவையான சிறந்த அம்சங்களைக் கொண்டுள்ளது கேர்ஃப்ரீ.

விசேஷ ஒண்டர்ராப் மேலுறை
கேர்ஃப்ரீ தன் வடிவத்தை சீராகவைக்க உதவுகிறது...சாதாரண நேப்கின்களைப் போல இது வளையவோ, நீளவோ செய்யாது. இது உட்புற அடுக்குகளில் ஈரத்தை உறிஞ்சிக் கொள்கிறது. எனவே உங்கள் சருமம் உலர்ந்து இருக்கும். உங்களுக்கு சௌகரியமாக இருக்கும்.

நீலநிற பிளாஸ்டி-ஷீல்ட் தடுப்பு
கேர்ஃப்ரீயின் அடிப்பாகம் மற்றும் பக்கங்களைப் பராமரிக்கிறது பாதுகாப்பான பாலித்தீன். ஆகையால், அது இடம் விட்டு கசியும் வாய்ப்பில்லை; கறை படியும் பயம் இல்லை.

அதிக உறிஞ்சும் தன்மையுள்ள விசேஷ பொருள்
மிக நன்றாக உறிஞ்சுகிறது: உறுதியுடன் பாதுகாப்பளிக்கிறது.

கச்சிதமாகப் பொருந்த முனைப்பாகம்
கேர்ஃப்ரீ மட்டுமே விரும்பியபடி சரிசெய்து கொள்ளும் நீளத்தில் வருவதால், அது உங்களுடைய உடலின் கச்சிதமாகப் பொருந்துகிறது. ஒவ்வொரு பேக்கிலும், இலவச கேர்ஃப்ரீ பெல்ட் ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

எளிதில் ஒதுக்கிவிடலாம்
கேர்ஃப்ரீ ஒரு ஆபத்தற்ற, எளிதில் ஒதுக்கித் தள்ளக்கூடிய நேப்கின்; இந்த பிளஷ்ஷில் தள்ளிவிடலாம்... வெளியில் செல்லும் போதோ, பயணத்தின்போதோ இது ஒரு வரப்பிரசாதம்—
கேர்ஃப்ரீ பாதுகாப்பு-முழுமையான பாதுகாப்பினை விரும்பும் பெண்மணிக்கு இது மிகவும் முக்கியமானது.
கேர்ஃப்ரீ: உங்களுக்கு முழுமையான உறுதி தரும் பாதுகாப்பு.



லாபகரமான 18 நேப்கின்கள் கொண்ட எகானமி பேக் வாங்குங்கள்.

© J&J 76

கேர்ஃப்ரீ:
உங்களுக்கு முழுமையான உறுதி தரும் பாதுகாப்பு.

*சானிடரி நேப்கின்களின் வர்த்தகப் பெயர், கேர்ஃப்ரீ மற்றும் ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன், ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன், யு. எஸ்.ஏ-வின் ட்ரேட்மார்க்குகள்.

Johnson & Johnson*



உன்னைச் சுற்றும் உலகம்

நாட்டுக்குத்தனமும் கள்ளம் கபடற்ற தன்மையும் கொண்ட கிராமத்துப் பெண் தன் தகப்பனார் இறந்த உடனே அடியோடு பதவி சாக மாறிப் பொறுப்பாகத் தன் தம்பியையும், தங்கைகளையும் வளர்த்து ஆளாக்கி, இடைவேளைக்குப் பிறகு பெரிய பணக்காரியாகி உடன்பிறப்புக்களுக்குப் புத்தி புகட்டுவது நம் திரைப்படங்களுக்குப் புதியதல்ல.

ஜெயலலிதா கிராமத்துப் பெண்ணாக வந்து 'சடுகுடு' விளையாடி, ஊரில் உள்ளவர்களுக்கு நாட்டாண்மையைப் போல் நியாயம் சொல்வதுமாகத் துடுக்காக நடிக்கிறார். பிறகு தந்தையை இழந்து கண் கலங்கிய வேளையில், சோகமாக நடிக்கிறார். அனுபவம் மிக்க அவரது நடிப்புத் திறன் பல இடங்களில் பாராட்டுப் பெறுகிறது.

சாவித்திரி உடன் பிறவாத சகோதரியாக இருந்து ஜெயலலிதாவிடம் அன்பைப் பொழிகிறார். அவர் நடிப்புமிக இயல்பாக இருக்கிறது.

ஏ. வி. எம். ராஜன் ஒரு சினிமா டைரக்டராக வருகிறார். ஜெயலலிதாவைத் தம் படத்தில் கதாநாயகியாக நடிக்க வைத்து புகழுக்கும் பணத்துக்கும் உரியவராக்குகிறார்.

ஜெயலலிதா நடித்த பழைய படங்களிலிருந்து பல காட்சிகளைத் தொகுத்துக் காட்டுகிறார்கள். அவற்றில் சிவாஜி, எம். ஜி. ஆர்., முத்துராமன் ஆகியவர்களோடு ஜெயலலிதாவைப் பல வேடங்களில் பார்க்க முடிகிறது. அந்தக் கதம்பக் காட்சிகள் சுவாரசியமாயிருக்கின்றன. எப்பொழுதுமே பழமைக்குத் தனிமதிப்புண்டு. மேலும் இப்பொழுதெல்லாம் பழைய படங்களுக்குத்தானே 'மவுஸ்' இருக்கிறது!

வி.எஸ். ராகவன் ஜெயலலிதாவின் தந்தையாக வந்து இருமல் நோயோடு போராடித் தத்ரூபமாக நடிக்கிறார்.

இந்தப் படத்தின் கதை வசனம் டைரக்ஷன் ஆகிய பொறுப்புக்களை ஏற்றுச் செய்திருப்பவர் சுப்பிரமணிய ரெட்டியார்.

''உன்னைச் சுற்றும் உலகம்'' — எதையோ சொல்ல நினைத்து, என்னத்தையெல்லாமோ சொல்லி, எப்படியோ சுற்றுகிறது! —காந்தன்

''நீ உன் நலனை விரும்பினால், பேசாமல் நடையைக் கட்டு! அநாவசியமாக என் கோபத்தைக் கிளறாதே!'' நான் என் குரலை உயர்த்தினேன்.

என் கோபத்தைக் கண்ட நிசிகாந்தன் பதறிப் போய் விட்டான். எனக்கு இப்படி ஒரு கோபம் வரக்கூடும் என்று அவன் நினைத்தும் பார்க்கவில்லை. ஆனால் ஒரு கணத்திலேயே அவன் தன்னைச் சமாளித்துக் கொண்டான். ''இன்றைக்கு நீங்கள் பேசுகிற முறையிலிருந்தே தெரிகிறது, மல்லிக் சாஹப் கட்டாயம் இங்கு வந்திருக்க வேண்டும் என்று! வந்து எனக்கு எதிராக இல்லாததும் பொல்லாததைச் சொல்லியிருப்பார். இல்லாவிட்டால் நீங்கள் இப்படியெல்லாம் பேசமாட்டீர்கள். முன்பெல்லாம் நீங்கள் என்னோடு இப்படிப் பேசியதும் இல்லை, பழகியதும் இல்லை. எனக்குத் தெரியாதா, உங்கள் சுபாவம்?'' என்றான்.

''இதோ பார்! உன்னோடு பேசிக் கொண்டிருக்க எனக்கு இப்பொழுது நேரம் இல்லை. அதனாலே என் வீட்டை விட்டுப் போய் விடு. உன்னிடம் நல்லபடியாகச் சொல்லுகிறேன். கேட்பாய் என்று நம்புகிறேன்!'' அவன் சொன்னபடி என் சுபாவத்தோடு கண்டிப்பையும் குழைத்துக் காட்டினேன். இருந்தாலும் நிசிகாந்தன் வீம்போடு அடம் பிடித்துக் கொண்டு நின்றிருந்தான். ''முதலில் நீங்கள் அதைச் சொல்லித்தான் ஆகணும். மல்லிக் சாஹப்பின் குடை இங்கே எப்படி வந்தது? இது எனக்கு நன்றாகத் தெரிந்த குடை, சார்! நீங்கள் என்னுடைய இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாதவரையில் நான் இங்கிருந்து அசையப் போவதில்லை!'' என்றான் தீர்மானமாக.

நான் நாற்காலியிலிருந்து எழுந்து நின்று, ''உனக்கு இத்தனை துணிச்சலா? என் வீட்டுக்குள்ளே வந்து என்னையே மிரட்டுகிறாயா?'' என்று சீறினேன்.

இதே சமயம் மல்லிக் சாஹப் அறைக்குள்ளிருந்து வெளியே வந்தார். (தொடரும்)

தேவியின் திருமணம்

ஜே. ஆர். விஜயாவின் நடிப்பாற்றல் திரைக் கதைக்கே புத்துயிர் தந்திருக்கிறது. தேவிக்கு ஏற்படும் பயங்கரமான கார் விபத்தில் தொடங்கும் திரைக்கதை எந்தவிதமான விபத்தும் இல்லாமல் விறுவிறு என்று போகிறது. கார் விபத்தில் சித்த சுவாதீனத்தை இழந்த தேவியைப் படிப்படியாகக் குணமாக்கும் டாக்டர் பாத்திரம் நன்கு படைக்கப்பட்டிருக்கிறது. ஆஸ்பத்திரியில் அக்காளைப் பார்க்க வரும் சாக்கில் டாக்டரைக் காதலிக்கும் வசந்தியின் பாத்திரம் ஒரு மாறுதலான பாத்திரம்; அக்காளிடம் பொறாமை கொள்ளும் தங்கை — கடைசி வரையில் திரைக்கதை தொய்ந்து விடாமல் நிமிர்த்தி வைக்கும் பாத்திரம்.

மன நோய் தெளிந்து ஆஸ்பத்திரியிலிருந்து அவள் வீட்டுக்கு அனுப்பப்பட வேண்டிய நேரத்தில் அவளாகவே கொட்டும் மழையில் நள்ளிரவில் வீடு திரும்பி அனைவரையும் அவள் வியப்பில் ஆழ்த்தியதோடு வேதனையிலும் ஆழ்த்தி விடுகிறாள். தான் நன்றாய்த் தெளிவடைந்த பிறகும் தன்னை வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் பைத்தியமாகவே நினைக்கிறார்கள் என்பதையறிந்து தேவி படும் வேதனை, தன்னைப் போலவே சித்தசுவாதீனம் இழந்தவர்களிடம் தேவி காட்டிய அளவு கடந்த பரிவு, அவள் பூரண குணம் அடைந்து விட்டாளா என்பதையறிய அவளைத் தொட்டு அணைக்க முயன்ற போது டாக்டரை அவள் அறைந்தது ஆகிய கட்டங்களில் விஜயா





தமக்கே உரிய விதத்தில் நடித்து ரசிகர்களை மகிழ்விக்கிறார்; அவர் உடல் மெலிந்து கவர்ச்சி கூடியிருக்கிறது.

மன நோய் டாக்டராக வரும் முத்துராமன் மிகவும் சிறப்பாக நடித்திருக்கிறார்.

தேவியின் தங்கை வசந்தியாகப் பத்மப்பிரியா 'வந்து மிகப் பொருத்தமாக நடிக்கிறார்.

மல்லியம் ராஜகோபால் திரைக் கதைக்கு ஏற்ற ' சப்ஜெக்டை'த் தேர்ந்தெடுத்துத் தருந்த முறையில் அதைக் கதையாக்கி யிருப்பதோடு சுவையான வசனத்தை அளவோடு தீட்டி யிருக்கிறார். அனுபவம் மிக்க டைரக்டர் பி. மாதவன் படத்தைப் பாராட்டும் வண்ணம் டைரக்ட் செய்திருக்கிறார்.

தேவியின் தம்பியாக வருபவர் ஒய். ஜி. மகேந்திரா. முதலில் அக்காளை எதிர்த்தாலும் பின்னால் அவளிடம் மன்னிப்புக்கோரும் நல்லதம்பியாகி விடுகிறார்; பொருத்தமாக நடிக்கிறார்.

தேவியின் தந்தை வி. எஸ். ராகவன்; அவர் நண்பராக வரும் தேங்காய் சீனிவாசன் இருவரும் மிக நன்றாக நடிக்கின்றனர். தான் தன் நண்பனுக்குச் செய்த மோசடி தன் மகளாலேயே வெளியாகி விடுமோ என்று பயப்படும் தேவியின் தந்தை தன் மகளின் பைத்தியம் தெளிந்துவிடக் கூடாது என்று விரும்பும் அளவுக்குக் கொடுமைக்காரராகி விடுகிறார்; ராகவன் நன்றாய் நடிக்கிறார். அவரால் மோசம் செய்யப்பட்டுப் பைத்தியமாகிப் பிறகு தேவியின் முயற்சியினால் தெளிந்துவிடும் பாத்திரம் தேங்காய்சீனிவாசன் ஏற்றிருப்பது. நகைச்சுவையாகவும், உருக்கமாகவும் அந்தப் பாத்திரத்தை அவர் நடித்துக் காட்டுகிறார்.


பி. என். சுந்தரத்தின் ஒளிப்பதிவு, தரமாயிருக்கிறது. படத்தை 'எடிட்' பண்ணும் போது குறைக்க வேண்டிய இடங்களைக் கவனித்துக் குறைத்திருந்தால் படத்தின் 'டெம்ப்போ' பிரமாதமாயிருந்திருக்கும். திரைக்கதையின் 'சஸ்பென்ஸ்? கடைசி வரையில் தெரியாமல் திறமையாகக் கொண்டு செல்லப்படுகிறது.

திரைக்கதை, வசனம், பாத்திரப்படைப்பு, நடிப்பாற்றல் அனைத்தும் கொண்ட பாராட்டுக்குரிய படம் ''தேவியின் திருமணம்.''

— காந்தன்

வேண்டாம் இந்தப் புகழாரம்!

கோமகள்



லேடீஸ் கிளப்பில் ஓரே கோலாகலம். அன்று ஆண்டு விழாவாதலால், எப்போதோ ஒரு முறை கிளப்பை எட்டிப் பார்க்கும் பெண்மணிகள் கூடச் சுறுசுறுப்பாக நடமாடிக் கொண்டிருந்தனர்.

பிரசிடெண்ட் விஜயா பாஸ்கரன் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுப் பொருட்களைப் பார்வையிட்டவாறே உமா கோபாலன் வந்திருக்கிறாளா என்று நோட்டமிட்டாள்.

உமா கோபாலன் வந்திருந்தாள். அதோடு வைஸ் பிரஸிடெண்ட் கமலா ஹரிஹரனிடம் அவள் சொல்லிக்கொண்டிருந்ததும் கேட்டது.

''இத்தனை செலவு செய்து, நமக்கு நாமே அதன் பலனை அடைவதை விட அதைப் பிறருக்கு உதவும்படியாகச் செய்யலாமே, மிஸஸ் ஹரிஹரன்? பாருங்களேன், பாட்மிண்டனிலும், செஸ்ஸிலும், காரம் போர்டிலும் வென்ற நம் பெண்மணிகளுக்கு, விலையுயர்ந்த பரிசுப் பொருட்களை அளிப்பதை விட, அந்தப் பணத்தை ஆண்டு விழா நினைவாக, ஏழைப் பெண்மணிகளுக்குப் புடவை வாங்கித் தரலாம்...''

''நன்றி மிஸஸ் கோபாலன்! இங்கே விளையாட்டுப் பயிற்சிக்கு ஊக்கமளிக்கும் திட்டம் இது!'' என்று விஜயா பாஸ்கரன் ஓங்கிக் கடுமையாகக் குரல் கொடுத்தாள். ''இது வருடா வருடம் நடந்து வரும் நிகழ்ச்சி.''

''அதை நான் வேண்டாம் என்று கூற வில்லை மிஸஸ் பாஸ்கரன். ஆனால் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலவிட்டுச் சிறிய பரிசாகவே வாங்கி வழங்கலாம்!''

''ஓ! யோசனைக்கு நன்றி!'' என்று எரிச்சலோடு கூறிவிட்டு, ''ஆண்டுவிழா நடக்கும் போதாவது குறை கண்டு விமரிசிக்காமல் தங்கள் பணியை நல்க வேண்டும்'' என்றாள் விஜயா பாஸ்கரன்.

விருந்து பரிமாறப்பட்டிருந்தது. ஒவ்வோர் இலையிலும் ஏகப்பட்ட உணவு வகைகள்!

இன்னும் சமூக சேவகி நர்மதா வராததால் விஜயா பாஸ்கரன் வாயிலையே பார்த்தவாறு படபடப்புடன் நின்றிருந்தாள்.

அதோ நர்மதா வந்தாயிற்று!

பேச்சின் அமர்க்களங்களும், சிரிப்பின் கிளுகிளுப்புகளும் அடங்கி அமைதி நிலவியது.

''மிஸஸ் உமா கோபாலன்! விருந்துக்கு அமரும்போது, 'இத்தனை 'காஸ்ட்லி ஐயிட்டங்கள்' ஏன்? இவற்றை ஏழைக் குழந்தைகளுக்குச் சாக்லேட்டாக வாங்கி விநியோகிக்கலாமே...' என்று நர்மதாவின் எதிரே உங்கள் கனிந்த சுபாவத்தைப் பறைசாற்றிக்கொள்ள வேண்டாம். ஷி ஈஸ் அவர் கெஸ்ட்!'' என்று விஜயா பாஸ்கரன் ஏளனமாகக் கூறவும் சிலர் 'கொல்'லென்று சிரித்தனர்.

சினத்தை அடக்கிக் கொண்டாள் உமா. செல்வந்தர் வீட்டுப் பெண்மணிகள் அநேகர் நிறைந்த இடம் இது. அந்த இடத்தில் சாதாரண அரசாங்க வேலையில் இருக்கும் ஒருவரின் மனைவியான உமா வாயைத் திறக்கலாமா?

தங்கள் லேடீஸ் கிளப்பின் பத்தாவது ஆண்டு விழாவைப் பணத்தைப் பணம் என்று பாராமல் தண்ணீராகச் செலவிட்டு விருந்தும் வைத்துக் கொண்டாடிய பிரஸிடெண்ட் மிஸஸ் பாஸ்கரன், மனமிரங்கித் தாராளமாக ஒரு கிலோ சாக்லேட் வாங்கி அந்த அனாதை இல்லத்துக்கு வழங்கினாள்.

அப்போது அனாதை இல்லத்தின் தலைவி, ''உங்கள் காலனியில் உள்ள உமா கோபாலனைத் தெரியுமா? மிகவும் இரக்கமுள்ளவர். அவர் தம் பழைய துணிகளைத் தைத்து வழங்குவதுடன், பிறரைக் கேட்டும் துணிகளை வாங்கி வழங்குகிறார். இது பல வருடங்களாகத் தொடர்ந்து நடந்து வருகிறது. எந்த வித பலனும் எதிர்பார்க்காமலேயே'' என்று கூறினார்.

''ஓ! உமா கோபாலனா? அவள் எங்கள் லேடீஸ் கிளப் அங்கத்தினர்தான்.'' என்று பெருமையாகச் சொல்லிக் கொண்ட விஜயா பாஸ்கரன் அடுத்த நாளே நிதி உதவி கேட்க வந்தவள் போல் உமா கோபாலன் வீட்டைத் தேடிக் கண்டு பிடித்து உள்ளே நுழைந்தாள்.

''ஹலோ மிஸஸ் உமா...!''

''வாங்க...!''

''நான்தான் இந்தக் காலனி லேடீஸ் கிளப் பிரஸிடெண்ட் விஜயா பாஸ்கரன். பிரபல தொழிலதிபர் பாஸ்கரன்தான் என் கணவர். பத்து வருடங்களாக இதில் ஈடுபட்டுச் சேவை செய்து வருகிறேன்.''

''அப்படியா? உட்காருங்கள்.''

''உங்களைப் பற்றி அனாதை இல்லத் தலைவி கூறக் கேட்டேன். உங்கள் பணிகளை எங்கள் கிளப் மூலம் செய்தால் என்ன?''

''மன்னிக்கவும். நான் அடக்கமாகவும், விளம்பரம் இல்லாமலும் என் பணியைச் செய்ய ஆசைப்படுகிறேன். தவிர, லேடீஸ் கிளப்பின் 'கிளாமர்' எனக்குப் பிடிப்பு இல்லை.''

''அப்படிச் சொல்லக் கூடாது. ஒரு ஸ்தாபனத்தைச் சார்ந்து தொண்டு செய்தால்,

அந்த ஸ்தாபனத்துக்கும் பெருமை, உங்களுக்கும் பெருமை.''

''நான் அப்படி நினைக்கவில்லை. ஒரு ஸ்தாபனத்தின் சட்ட திட்டங்களை ஏற்கும்போது என் சுதந்திரச் செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டு விடும்.''

''நோ, நோ! உங்கள் உரிமைகள் எதுவும் பறிபோகாது. நான் உறுதி தருகிறேன். மாதச் சந்தா ஐந்து ரூபாய்தான். கொடுத்து அங்கத்தினராகி விடுங்கள்...''

''ஐந்து ரூபாயா?....ப்ளீஸ்! எனது நிலைக்கு அது கட்டுபடியாகாது. என் கணவரின் வருவாயில் தேவையற்ற இந்தச் செலவைச் சேர்க்க என் மனம் அனுமதியாது.''

''உமா! வேண்டுமானால் உங்கள் சந்தாவை நானே கட்டி விடுகிறேன். உங்கள் சேவை எங்கள் கிளப்புக்குத் தேவை'' என்று எவ்வளவு மறுத்தும், பணம் வசூலித்ததாக ஒரு ரசீதை உமாவிடம் தந்துவிட்டு விஜயா பாஸ்கரன் விடைபெற்றாள்.

அன்றிலிருந்து உமா லேடீஸ் கிளப்புக்கு வர ஆரம்பித்தாள். அதோடு செவ்வாய்க் கிழமைகளில் சீட்டு விளையாடுவதற்குப் பதில் பஜனை வகுப்பு நடத்தலாம், ஞாயிறு தோறும் நடக்கும் கிளப் அங்கத்தினர்களுக்கான விருந்தை ஏழைகளுக்கு உணவளிக்கும் பழக்கமாக மாற்றலாம் என்றெல்லாம் ஆலோசனைகளைக் கூறினாள்.

பலன், விஜயா பாஸ்கரனுக்கு உமா பெரிய தலைவலியாய்ப் போய் விட்டாள். 'நானே சந்தாக் கட்டி இவளை அங்கத்தினராக்கி வைத்திருக்கிறேன். இவள் என்னையே சாடுகிறாளே?' என்று தனக்குள் குமுறினாள்.

குறிப்பறிந்த உமா கிளப் பக்கம் போவதை நிறுத்திக் கொண்டாள். பழையபடி தன் எளிய தொண்டுகளில் ஈடுபட்டாள்.

அன்று ஞாயிற்றுக் கிழமை.

கோபால் படுத்துக் கொண்டே இருந்தான். உடம்பு வரவர மழுவாய்ச் சுட ஆரம்பித்தது. மூடிய கண்களைத் திறக்காமல் முனகினான் அவன். அந்தக் காலனியில் இருந்த இரண்டொரு டாக்டர்களும் வீட்டில் இருக்கவில்லை.

அப்போதுதான் உமாவுக்கு ஞாபகம் வந்தது. ஞாயிறுதோறும் காலையில் கிளப் அங்கத்தினர்களுக்காக ஒரு டாக்டர் வந்து போவதைப் பலமுறை பார்த்திருக்கிறாள்.

உமா உடனே கிளப்புக்கு ஓடினாள். டாக்டரை உடனே வரும்படியாக வேண்டிக் கொண்டாள்.

''பிரசிடெண்டைக் கேளுங்கள், மேடம்!'' என்றார் டாக்டர்.

உமா லேடீஸ் கிளப்பினுள் சென்றாள்.

விஜயா பாஸ்கரன் இத்தனை நாட்கள் கழித்து இவளைப் பார்த்தும்கூட ஒன்றும் பேசாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''ப்ளீஸ் மிஸஸ் பாஸ்கரன்! எனக்குத் தயவுசெய்து ஓர் உதவி செய்யுங்கள்! என்





"என் பெயர், ஜில்ஜில் தேவிஸ்ரீ. அவர் பெயர் ராகவன். அவருக்குத் திருமணம். எனக்கு மறுமணம்..."

கணவருக்கு உடல்நிலை சரியில்லை. உடனே டாக்டரைக் கொஞ்சம் அனுப்புங்களேன்... பணம் கொடுத்து விடுகிறேன்."

விஜயாவுக்குச் சுவாரசியம் தட்டியது. இதழ்களில் கேலி மின்ன அவளைப் பார்த்துச் சாவகாசமாகக் கூறினாள்: "ஸாரி மிஸஸ் கோபாலன்! கிளப் அங்கத்தினர்களுக்கு மட்டும்தான் அந்தச் சலுகை உண்டு."

"அது எனக்குத் தெரியும். ஆனாலும் ஆபத்துக்கு உதவக் கூடாதா? நான் விசிட்டிங் பீஸ் தந்து விடுகிறேன்..."

"ஆகா! ஃபீஸைப் பற்றியா பேசுகிறாய்? ஒரு சமயம் அங்கத்தினராக இருந்தாய். மாதா மாதம் ஐந்து ரூபாய் கட்ட மறுத்தாய். நான் பணம் கட்டி உன்னை அங்கத்தினராக்கினேன். உடனே எல்லா உரிமைகளும் வந்து விட்டாற்போல் என் கிளப் நடவடிக்கைகள் பற்றிக் குறை கூறினாய். உன் பிரியம் போல் தான் கிளப் நடக்க வேண்டும் என்று மட்டம் தட்டினாய். இப்போது காரியம் ஆக வேண்டுமானால் காலைப் பிடிக்கிறாயா?"

"நான் ரொம்பவும் வருந்துகிறேன் மிஸஸ் பாஸ்கரன்! மனிதத் தன்மை இருக்கும் என்று நம்பி உங்களை வந்து சந்தித்தது என் தவறு. உங்கள் நேரத்தை வீணாக்கியதற்கு வருந்துகிறேன்" என்றவாறு வெளியேறினாள் உமா.

அவள் வீட்டை அடையும்போது அவளை ஒட்டினாற்போல் ஒரு வான் வந்து நின்றது. அனாதை இல்லத்தின் வான்!

"மிஸஸ் உமா! உங்களைத் தேடித்தான் வந்தோம்." வெள்ளைத் துணியில் தன்னைத் தூய்மையாக்கிக் கொண்ட அடையாளத்தோடு இறங்கிய கன்யா ஸ்திரீயை நோக்கினாள் உமா.

"உள்ளே வாருங்கள்!" என்று அன்பு கனிய உபசரித்தாள். "நல்ல சமயத்துக்கு வந்தீர்கள் ஸிஸ்டர்! நான் ஒரு தவிப்பான நிலையில் இருக்கிறேன். என் கணவருக்கு உடல் நிலை மிகவும் சரியில்லை. எந்த டாக்டரும் கிடைக்கவில்லை. நீங்கள் அவரை ஏதாவது ஓர் ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்த்து உதவ முடியுமா?"

"வித் பிளஷர் மிஸஸ் உமா! தொண்டு தானே நம் குறிக்கோள். உங்களுக்கு உதவாமல் இருப்பேனா? நம் ஆஸ்பத்திரிக்குச் சனிக்கிழமைதோறும் வந்து அபூர்வ கேஸ்களைப் பார்த்துத் தம் அபிப்பிராயங்களை வெளியிடும் டாக்டர் குருமூர்த்தி அடையாற்றில் பரமேசுவரி நகரில்தான் இருக்கிறார். அவரிடம் கொண்டு காட்டுவோம். அவர் ஞாயிறு விடுமுறையை ஏற்பதில்லை."

வான் உமாவையும் அவள் கணவரையும் ஏற்றிக் கொண்டு பரமேசுவரி நகருக்குப் பறந்தது. டாக்டர் குருமூர்த்தி பரிசோதித்து, "வெறும் ஜுரம்தான், வேறொன்றும் இல்லை" என்று கூறும்வரை உமா தவித்துப் போனாள். மருந்துகளோடு வீடு திரும்பிய உமாவிடம் ஸிஸ்டர், "எங்களுக்குச் சில பேர் பழைய துணிமணிகளை வழங்கியுள்ளனர். அவற்றைத் தைத்துத் தர முடியுமா என்று கேட்கவே வந்தோம். உங்கள் கணவருக்கு இப்பொழுது உடம்பு சரியில்லாததால்..." என்று இழுத்தாள்.

"அதனால் என்ன? இரண்டு தினங்களில் அவருக்குச் சரியாகி விடும். உடைகளைத் தந்து விட்டுப் போங்கள். திருத்தி மாற்றித் தைத்து வைக்கிறேன்..." என்று கூறி வானில் வந்த துணிகளைப் பெற்றுக் கொண்டாள்.

கணவனை அலுவலகத்துக்கும் குழந்தைகளைப் பள்ளிக்கும் அனுப்பிவிட்டு, தைத்து வைத்திருந்த துணிகளை இரு பெரிய பைகளில் எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் உமா.

அவள் தெருக் கோடியைக் கடக்கும்போது ஒரு கார் அவளை நெருக்கத்தில் உரசிச் சென்றது. என். எஸ். வி. 3763... விஜயா பாஸ்கரனின் கார்!... நினைத்த அடுத்த நிமிடமே அவள் விழிகள் பிதுங்கி விடும்போல் ஒரு சத்தம்... கார் எதிரில் வந்த லாரியுடன் மோதிக் கொண்டது. "ஐயோ!" என்று அலறியவாறே ஓடினாள் உமா. லாரி நிற்காமல் ஓடுவதும் புரிந்தது. அதன் நம்பரை மனத்தில் பதிவுசெய்து கொண்டாள். தெருவில் இப்பொழுது எந்தக் காரோ, ஜன சந்தடியோ இல்லை.

கார் இடது ஓரம் மோதி நடைபாதையில் ஏறி நின்றது. காரினுள் யாருமில்லை. உமா காரைச் சுற்றி வந்தாள். டிரைவர் கதவு திறந்து கிடந்தது. அதை யொட்டி நிலை குலைந்து கிடந்தார் பாஸ்கரன். அவர் வாயில் ரத்தம் வழிவதைக் கண்டு திடுக்கிட்டாள். உதவி... உதவி வேண்டுமே...?

பக்கத்திலிருந்த பங்களாவின் கதவைத் திறந்தால் நாய்கள் குரைத்தன. நாய்கள் இல்லாத இடத்தில் மனிதர்கள் குரைத்தனர்.

உமா ஓடோடிச் சென்று ஆசிரமத்தை அடைந்தாள். ஸிஸ்டரிடம் லாரி நம்பரைக் கூறிப் போலீசுக்குப் போன் பண்ணச் சொன்னாள். விஜயாவுக்கும் போன் பண்ணச் சொன்னாள். பிறகு வானை எடுத்துக் கொண்டு போய் பாஸ்கரனை அதில் ஏற்றி ஆஸ்பத்தி



டாக்டர் ஸ்ரீமான் திருவெங்கடாசல பிரசன்ன இராஜகோபாலாச்சாரியாரின் ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் சமீபத்தில் திருவல்லிக்கேணியில் ஸ்ரீமான் உ.. வே. முதலியாண்டான் ஸ்வாமிகள் முன்னிலையில் நடந்தேறியது..

யில் கொண்டு சேர்த்தாள். ஆபத்து ஒன்று மில்லை என்று தெரிந்து கொண்ட பின்னரே வீட்டுக்குப் புறப்பட்டாள்.

அடுத்த நாள் காலை விஜயா பாஸ்கரன் அவள் வீட்டுக்கு வந்தாள்.

''வாங்க மிஸஸ் பாஸ்கரன்! அவருக்கு உடம்பு எப்படி இருக்கிறது?''

விஜயாவுக்குப் பேச வாயெழவில்லை.

''உமா...உமா... உங்கள் பெருந்தன்மை யாருக்கும் வராது. உங்கள் கணவருக்கு மிக வும் உடம்பு சரியில்லாதபோது நான் வைத் திய உதவி தர மறுத்தேன். நீங்களோ நானே நாணும்படி நன்னயம் செய்துவிட் டீர்கள். நீங்கள் உதவவில்லை யென்றால் என் கணவர் பிழைப்பது அரிதாகி யிருக்கும். அது மட்டுமல்ல. அந்த லாரியின் நம்பரை நீங்கள் தந்ததால் மோதியவனையும் கண்டுபிடிக்க முடிந்தது.''

''ரொம்பவும் புகழ வேண்டாம், விஜயா! என் உதவி எதிர்பாராதது. யாராக இருந் தாலும், யாருக்காக இருந்தாலும் மனிதாபி மானத்தோடும், பரிவோடும் உதவ வேண்டிய நேரம் அது...''

''அடிபட்டவர் என் கணவர்தான் என்ற தும் நீங்கள் தவிர்த்திருக்கலாம். ஆனால் அப்ப டிச் செய்யவில்லை. இங்குதான் உங்கள் உயர்வையும் நான் காண்கிறேன். இந்த அன்பளிப்பை நீங்கள் மறுக்காமல் ஏற்க வேண்டும்... ''ஆயிரம் ரூபாய்க்கான ஒரு 'செக்'கை நீட்டினாள் விஜயா பாஸ்கரன்.

''ஓ! ஸாரி! மிஸஸ் பாஸ்கரன்! நான் எதையும் எதிர்பார்த்து இந்த உதவியைச் செய்யவில்லை. அதற்கு ஓர் அர்த்தத்தைச் சிருஷ்டி செய்து, இதை என்னிடம் தர முயல் கிறீர்கள். தயவுசெய்து இதை எனக்குத் தரவேண்டாம். இதை மறுப்பதற்கு மன் னித்து விடுங்கள்...''

''உமா! உங்களுக்கு என்மீது கோபம் இருக்கும். நான் உங்களிடம் மிகவும் கடுமை யாக நடந்து கொண்டது தவறுதான். இப் போது நான் மனதாரத் தருகிறேன். ஏற் பதில் தவறில்லை.''

''தவறு என்று சொல்லவில்லை. நான் ஏற்பதற்குத் தயாரில்லை என்றுதான் சொன் னேன். இந்த ஆயிரம் ரூபாயை நன்றிக் கட னாகச் செலுத்தத்தான் வேண்டும் என்று நீங்கள் நினைத்தால், இதனை அப்படியே மாற்றி, அனாதை ஆசிரமத்துக்குத் தந்து விடுங்கள்.''

''உமா! உங்களை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதை எப்படி மனதார மறுக் கிறீர்கள்?'' என்று உண்மையான ஆச்சரி யத்தோடும், கனிவோடும் கேட்டாள்.

''அது ரொம்ப சுலபம் விஜயா! நான் எளிமையான வாழ்க்கை நடத்துகிறேன்... அதை ஆடம்பரமாக்கும் உத்தேசமில்லை... உணவு, உறையுள், உடை மூன்றுமே மலி வான, ஆடம்பரமற்ற, எளிமையான முறை யில் இருக்க வேண்டும் என்று ஒரு நியதியைக் கடைப்பிடிக்கிறேன். எனவே என்னிடம் பிறர் பொருளை விரும்பும் ஆசையும், தொண் டுக்கும், உதவிக்கும் விலை பேசும் வியாபார நோக்கும் இல்லை...''

''யூ ஆர். கிரேட் உமா... ரியலி யூ ஆர் கிரேட்... எத்தனை அழகான பண்பாடு, எத் தனை மன அடக்கம், எத்தனை விவேகம். சலன மற்ற தீர்மானமான உங்கள் எண்ணங்களுக்கு என் பாராட்டுக்கள்.''

அனாதை ஆசிரமம் நடத்திய பாராட்டு விழாக் கூட்டத்தில் விஜயா பாஸ்கரன் உமா வின் சிறப்புக்குப் புகழாரம் சூட்டினாள். அதைச் செவிமடுக்கும் இன்பத்தைக் காட் டிலும் வீட்டில் அமர்ந்து பேரின்பம் கண்டு கொண்டிருந்தாள் உமா. ஆம், அநாதைச் சிறுவர்களின் உபயோகத்துக்கு ஆடை தைத் துக் கொண்டிருந்தாள்.

உலக ரிகார்டுகள்!

1. ராபர்ட் வாட்லோ - மிகவும் உயர்ந்த மனிதர். உயரம் எட்டு அடி பதினொரு அங்குலம்.
2. சார்லஸ் ஸ்டாரட்டன் - குள்ளன் 40 அங்குலமே!
3. ராபர்ட் ஹுாக்ஸ் - கனமான மனிதர் எடை: 1096 பவுண்டுகள்.
4. ஸ்ரீமதி பியோடர் வாஸலெட் - அறுபத்தொன்பது குழந்தைகள் பெற்றெடுத்த தாய்.
5. பலாஈரியாடின் - நீண்ட தாடி படைத்த ஆசாமி, தாடி 8 அடி 6 அங்குலம் உயரம் கொண்டது.
6. முகம்மது அலி தஜலி ஸி-மனித மூளையின் ஞாபக சக்திக்குப் பேர் போனவர். ஆறாயிரத்து அறு நூற்று அறுபத்தாறு குரான் பாடல்களை ஆறு மணி நேரத்தில் சரமாரியாகப் பொழிந்தவர்.
7. கரோலின் கரானின் - ஞாபக சக்தியின்றி, நினை வின்றி இந்தப் பெண்மணி 32 வருடங்கள் 99 நாட்களைக் கழித்தவர்.

ஆதாரம்: பயனீர் -- பி. எஸ். எம்.



நன்றியின் எல்லை!

அவசர நிலையின்போது ஸ்ரீமதி இந்திரா காந்தி நாட்டில் நிலவச் செய்த கட்டுப்பாட்டுக்கு நாமெல் லோரும் நன்றியுடையவர்களாக இருக்க வேண் டும் என்று ஒருவர் கூறியதற்குப் பிரபல சிந்தனை யாளர் ஒருவரின் கூற்றை எடுத்துக் காட்டி ஒருவர் கூறிய பதில் இது:

''தனி மனிதன் தன் சுயமரியாதையை இழக் கும் அளவுக்கு ஒருவரிடம் நன்றியுடையவராக இருக்கக் கூடாது. ஒரு பெண் தன் கற்பை விட்டுக் கொடுக்குமளவுக்கு நன்றியுடையவராக இருக்கக் கூடாது. ஒரு நாடு தன் உரிமையை இழக்குமளவுக்கு நன்றியுடையதாய் இருக்கக் கூடாது.''

- வி. ந. ஸ்ரீதரன்

ஊ நூ



ஊநுவுடன் ராஜேந்திரப் பிரசாத்

வழிப்பறிக் கொள்ளைக்காரனாக வாழ்ந்த வால்மீகி, ஒரு சமயம் முனிவர்களைக் கொள்ளையடிக்க முயன்ற போது, அவர்கள் சொன்னார்கள்: ''அப்பா எங்களைக் கொள்ளையடித்து உன் மனைவி மக்களுக்குச் செல்வத்தைப் பங்கிட்டு அளிக்கிறாயே. நீ செய்யும் பாவத்திலும் அவர்கள் பங்கு பெறுவார்களா என்று கேட்டு விட்டுவா!''

சுற்றத்தார், ''கொள்ளையடிக்கும் பொருளில்தான் பங்குக்கு வருவோமேயன்றி உன் பாவத்துக்கல்ல'' என்றார்கள். அது கொள்ளைக்காரராக இருந்த வால்மீகியின் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

பர்மியப் பிரதமராக முன்பு விளங்கிய ஊநூ, சிறு வயதில் முரட்டுப் பிடிவாதம் கொண்ட துஷ்டச் சிறுவனாக இருந்தார். பிறகு சிறிது விவரம் தெரிந்து கல்லூரி மாணவப் பருவம் எய்தியவுடனேயே ஒழுக்கம் கெட்டவராக வாழ்ந்தார். அப்படிப்பட்டவர் வாழ்க்கையில் ஒரு கட்டத்தில் பெருத்த மாற்றம் ஏற்பட்டது. பர்மிய சரித்திரத்தில் மிக நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தலைமைப் பொறுப்பு ஏற்றுத் திறமாக எத்தனையோ மகத்தான பணிகளைப் புரிந்தார்! அது மட்டுமா! பகவான் புத்தரின் பெரும் பக்தராகித் தவ வாழ்க்கை மேற்கொண்டார்.

தமது சுய சரிதத்தில் உண்மைகளை உள்ளபடி முழுதும் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக ஊநூ ஓர் உத்தியைக் கையாண்டிருக்கிறார். தம் தந்தையின் உற்ற நண்பர், தம்மைப் பற்றி எழுதுவது போல் — தம்மை மூன்றாவது பேர்வழியாகக் கருதி எழுதியிருக்கிறார்.

''இன்று எழுபது வயதடைந்துள்ள ஊநூ அவர்களுக்கு இளமையில் அரசியலில் ஈடுபாடே கிடையாது. அவர் பற்றுதல் எல்லாம் இலக்கியத்திலும் — நாடகம் எழுதுவதிலும் தான். ஆனால் ஜினேக தர்மத்துக்குக் கட்டுப்பட்டவர். இளமையில் தேசப் பற்றினால் உந்தப்பட்டு, பிரிட்டிஷாருக்கு எதிராகக் கிளர்ச்சிகள் நடத்திய கட்சியின் தலைவராக விளங்கினார். இரண்டாவது யுத்த காலத்தில் பிரிட்டிஷாரால் சிறைப்படுத்தப்பட்டு, பின்னர் ஜப்பானியர் ஆக்கிரமித்துக் கொண்டவுடன் சிறையிலிருந்து விடுதலையடைந்தார். ஜப்பானியர் நிறுவிய டாக்டர் பாமாவின் மந்திரி சபையில் சேர்ந்தார். ஜப்பானியர் தோற்று, மீண்டும் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டது. பின்னர் ஜெனரல் அவுங் ஸான் தலைமையில் பர்மா விடுதலையடைந்தது. இந்தச் சமயத்தில் ஊநூ அரசியலிலிருந்து ஒதுங்கியிருக்கவே விரும்பினார். ஆனால் அவருடைய நண்பர் அவுங் ஸான் வற்புறுத்திய தன் பேரில் அரசியலில் ஈடுபட்டுப் பர்மிய அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு சில மாதங்களில் அவுங் ஸானும் அவருடைய மந்திரி சபையினரும் பலாத்காரமாகக் கொல்லப்படவே, தேசம் ஊநூவின் தலைமையை நாடியது. 1947லிருந்து 56 வரை பர்மியப் பிரதமராகப் பணியாற்றி விட்டு, அரசியலிலிருந்து ஒதுங்கவே நினைத்தார். சந்தர்ப்பச் சூழ்நிலை அவரை 1957ல் மீண்டும் பிரதமராக்கியது. 1958ல் ராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றி — ஊநூவைச் சிறைப்படுத்தியது, ஆனால் 1960ம் ஆண்டு மீண்டும் பொதுத் தேர்தலில் அமோக வெற்றி பெற்றார்.

1962-ல் ராணுவம் ஜெனரல் நீவின் தலைமையில் ஊநூவைச் சிறைப்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றியது. 1962-லிருந்து 66 வரை சிறையிலிருந்த ஊநூ, பின்னர் தம் நாட்டை விட்டே வெளியேறித் தேசப் பிரஷ்டமானவராக வாழ்ந்து வருகிறார். இந்தியாவில் புத்த மதக் கோட்பாடுகளை ஆராய்வதில் பெரும் பகுதி காலத்தைக் கழித்து வருகிறார்.

பத்தொன்பது வயதுக்குள் கெட்டுப்போன ஊநூ, தம் தவற்றைத் திருத்திக் கொள்ள 108 நாட்களுக்கு 'இனி இப்படிப்பட்ட தவறுகள் செய்ய மாட்டேன்!' என்று தம் நாட்குறிப்பில் எழுதினாராம். இப்படி இரண்டு முறை பிராயச் சித்தம் செய்திருக்கிறார்.

நேருஜியை ஊநூ வெகு காலமாகவே அசோக சக்கரவர்த்தியின் மறு அவதாரம் என்று கருதி வந்திருக்கிறார். ஒரு சமயம், ''பண்டிட்ஜி தங்களுக்குச் சமய நம்பிக்கை ஒன்றும் கிடையாது என்று கேள்விப்படுகிறேனே! அது வாஸ்தவமா?'' என்று ஊநூ கேட்டார். நேருஜி, 'ஆம்' என்பது போல் தலையை அசைத்துவிட்டு; ''ஆனால் என் மனம் புத்த மதம் பக்கமாகவே சாய்ந்து போகிறது'' என்றார். அசோகரின் மறு அவதாரம்தான் நேருஜி என்று ஏற்கனவே ஊநூ கொண்டிருந்த அபிப்பிராயம் உறுதிப்பட்டது.

இப்படிப் பலப் பல ரஸமான சம்பவங்களைப் புத்தகம் முழுவதிலும் காணலாம்.

தொழில்களைத் தேச உடைமையாக்குவதிலுள்ள ஆபத்துக்களைத் தம் அனுபவத்தி

போதுமென்ற மனமே ஒரு திடகாத்திர மனிதனுக்குத் தலைசிறந்த உணவு. அதுவே ஒரு நோயாளியைக் கடைத்தேற்றும் நல்ல மருந்தும் கூட.

- டபுள்யூ. செக்கர்



விருந்து உணர்ந்து ஊநூ சொல்லுவதைப் படிக்கும் போது, ராஜாஜியின் குரலைக் கேட்பது போல் இருக்கிறது.

வட வியட்நாமின் தலைவர் ஹோ-சி-மின்னைப் பார்க்க ஹோனாயுக்குப் போனார், ஊநூ. அவர், ஹோசிமின் படத்தைக் கூடப் பார்த்தது கிடையாது. ஹோசிமின் அறைக்குள் நுழைந்ததும், கதவுச் சந்திலிருந்து ஒருவர் வெளிப்பட்டு, ஊநூவைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டார். ஊநூ, அவர் தாம் ஹோசிமின் என்று தெரிந்து கொள்ளாமல் சற்று நேரம் தவித்தாராம். பிறகு ஹோசிமினின் குடும்ப நலனை விசாரிக்கும் முறையில் ''உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்? எத்தனை பெண்கள்?'' என்று கேட்டார்.

ஹோசிமின் ''ரொம்பப் பேர்!'' என்று சொன்னார், சிரித்துக் கொண்டே.

''ரொம்பப் பேர் என்றால்....?'' என்று மீண்டும் கேட்டார் ஊநூ.

''வியட்நாமிலுள்ள ஆண்களும் பெண்களும் எல்லாருமே என் குழந்தைகள்தாம்!''

அப்போதுதான் ஹோசிமின் கல்யாணமாகாதவர் என்பது புரிந்தது ஊநூவுக்கு.

ஊநூ பயனுள்ள வாழ்க்கை வாழ்ந்தது மட்டுமன்றி மனித குலம் பயனுள்ள வாழ்க்கை நடத்த உதவும் வகையில் தம் சுய சரிதத்தை எழுதியுள்ளார். —எஸ். வி. எஸ்.

கிடைக்குமிடம்: பாரதீய வித்யா பவன், குலபதி கே. எம். முன்ஷி மார்க், பம்பாய்-7. விலை ரூ. 15.



● ''கடைசிப் பக்கம்'' மூலம், ''கல்கி''க்கு அறிமுகமான கவியரசு கண்ணதாசனை ''சேரமான் காதலி'' வழியாக நடுப் பக்கங்களுக்கு உயர்த்தி இப்போது 'கல்கி'யின் முதல் பக்கத்தை அலங்கரிக்கும் பொறுப்பைக் கொடுத்துச் சிறப்பித்திருக்கும் 'கல்கி'யைப் பாராட்டுகிறோம்!

பெங்களூர்
6—5—77 இமயன்

● உண்மையைச் சொல்கிறோமே, கவிஞர் கண்ணதாசன் இப்படி ஒரு சரித்திர நாவலை யாவரும் விரும்பிப் படிக்கும் வண்ணம் எழுதி முடிப்பார் என நாங்கள் கடைசி வரை கொஞ்சம்கூட எதிர்பார்க்கவே இல்லை.

திருவனந்தபுரம்
9—5—77 எஸ். எஸ். மணி

● கவிதைத் துறையில் தன்னிகரற்ற கவிஞர், சரித்திர ஆதாரங்களோடு, சேரமான்காதலியைப் படைத்து உரை நடைத் துறையிலும் தம் புகழை நிலைநாட்டிக் கொண்டு விட்டார்.

கண்ணனூர்
6—5—77 கி. சந்திரசேகரன்

● சரித்திரக் கதையையும், திறம்படத் தம்மால் எழுத முடியும் என்பதைச் 'சேரமான் காதலி' மூலம் நிரூபித்து விட்டார் கவிஞர்.

விருத்தாசலம்
5—5—77
எம். ஏ. அப்துல் காதர்

● சேரமான் காதலியின் முடிவு மனத்தை அப்படியே உருக்கி விட்டது. அதற்குத் துணை நிற்பது ஓவியர் விநுவின் அழகான ஓவியம்.

சிவகங்கை
5—5—77
ஏ. எஸ். ராஜசேகரன்

● திரு கவிஞர் கண்ணதாசன் இவ்வளவு சீக்கிரம் ''சேரமான் காதலி'' கதையை மிக மிக சோகத்துடன் முடிப்பார் என்று நினைக்கவில்லை. மலபாரில் மாப்பிள்ளை முஸ்லீம்கள் என்று சொல்லுவதற்கு நல்ல விளக்கம் தந்ததற்கு நன்றி.

ஈரோடு-1
6-5-77 ஜோதி வி.எம். ராமசாமி

● சென்ற வாரக் கல்கி இதழின் கருத்துப் படம் வெகுவாகக் கவர்ந்து சிந்திக்க வைத்தது. தி. மு. க.வின் நிலைமையை இதைவிடத் தெள்ளென யாராலும் விளக்க முடியாது.

சேலம்—2
27—4—77 வி. ரவிச்சந்திரன்

● நெடுஞ்செழியன் கையில் சூரியனைத் தூக்கி வந்து விட்டது போன்றும் கலைஞர் அரிக்கேன் விளக்கைப் பிடித்திருப்பதுமான கேலிச் சித்திரம் பார்த்தவுடன் சில பிரிவினருக்கு ஆனந்தத்தை அளிக்கலாம். ஆனால் தமிழ்நாடு முழுவதிலிருந்தும் ஐந்நூறு பேர்தான் ஆதரவு நெடுஞ்செழியன் கட்சிக்கு. தி.மு.க. தனிப்பட்டவரை நம்பி இயங்குகின்ற கட்சியல்ல. கலைஞரே கட்சியை விட்டுச் சென்றாலும் கட்சியில்தான் இருப்போமே தவிர கலைஞரின்பின் சென்று விட மாட்டோம்.

சென்னை—90
28-4-77 அ.ராமச்சந்திரன்

உரைநடைத் துறையிலும் உயர்ந்தார்!



● அரக்கோணம் அருகில் சோளிங்கர் பிரசித்தம். நரசிம்மர் மலையையும், ஆஞ்சநேயர் மலையையும் தரிசிக்க வரும் ஊர் கொண்டபாளையம். சோளிங்கரிலிருந்து நான்கு மைல். சோளிங்கர், அரக்கோணத்திலிருந்து கொண்டபாளையம் செல்லப் பஸ் வசதி தேவை.

மதுரை
10-5-77 -எஸ். சங்கரன்

மலரும் பூவெனப் பிள்ளை வளர்ந்திடப் பலமான துணை—

இன்க்ரிமின்*





இளமைப் பருவம் —பூவாய் மலரும் நாட்கள்—மலர்ந்து சிரித்து உங்கள் மனதை அள்ளி வளரும் பருவம்...இப் பருவத்தில் அவனுக்குக் கட்டாயம் தேவை—இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவன் வளர்ச்சியை! பசித்துப் புசிப்பான் ....உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்கள் இரும்புச் சத்து. இவற்றோடு உங்கள் மகனின் வளர்ச்சிக்கு மிக மிக அத்தியாவசியமான அமினோ அமிலம். லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.



டிராப்ஸ்:
2 மாதங்கள் முதல்
2 வயது வரையில்

ஸிரப்:
14 வயது வரையில்

இன்க்ரிமின்* டானிக்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும் உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

சிலம்புச் செல்வம்

ம. பொ. சி



பாண்டியன் ஒருவன்தான், தான் செய்த தவற்றுக்காகத் தன்னையே அழித்துக் கொள்ள விரும்பி, ''நான் ஒழிக'' என்று கோஷித்தான். இன்றைய அரசியல்வாதிகளோ, தங்களுக்குப் பிடிக்காதவர்களின் பெயர்களையெல்லாம் சொல்லி 'ஒழிக' என்று கோஷம் போடுகிறார்கள்.

அரியாசனத்தில் மதுரை மன்னனின் அருகில் இருந்த கோப்பெருந் தேவி, ''கணவனை இழந்தோர் புகலிடம் புகுவதற்கு இந்த உலகில் எதுவுமே இல்லை'' என்று கருதி, தன் கணவனின் திருவடிகளைத் தொட்டுத்தொழுது கொண்டே தானும் உயிர் நீத்தாள்.

பாண்டியனது உயிர்த் தியாகம் சிலப்பதிகார ஆசிரியரின் உள்ளத்தை உருக்கிவிட்டது. அதனால், வழக்குரை காதையை முடித்து விட்டு, இரண்டு வெண்பாக்கள் பாடி, அம் மாமன்னனுக்குத் தம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்:

'' காவி உகுநீரும் கையில் தனிச் சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும்—பாவியேன்!
காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும்
கண்டஞ்சிக்
கூடலான் கூடாயினான்.''

'' மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் —
வையைக்கோன்
கண்டளவே தோற்றான்; அக் காரிகைதன்
சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்.''

பாண்டியன் நெடுஞ்செழியன், ''யானோ அரசன்?'' என்று வினா எழுப்பி, ''யானே கள்வன்'' என்று விடையும் அளித்து, அதற்கு மேல் ''கெடுக என் ஆயுள்'' என்றும் கூறினானே ஒழியக் கண்ணகி தொடுத்த அப்பீல் வழக்கில் தீர்ப்பு அளிக்காமலே உயிர் துறந்து விட்டான்.

''பொன் செய் கொல்லன் தன் சொல் கேட்ட யானோ அரசன்?'' என்று அவன் கூறியதால், ''யான் அரசன் அல்லன்'' என்று அவன் சொல்லாமல் சொல்லி விட்டான். அவன் அரச பதவியிலிருந்து விலகிக் கொள்ளவில்லை. அந்தப் பதவியே, 'தான் குற்றமற்ற கோவலனைக் கொல்லுவித்ததால், தன்னிடமிருந்து விலகிச் சென்று விட்டது' என்று சொல்லாமல் சொல்லி விட்டான். ''யான் அரசன் அல்லன்'' என்று அவன் சொல்லி விட்ட பின், அவனுடைய தகுதி என்ன? அவன் சாதாரண நெடுஞ்செழியன்தான்! அதனால் கண்ணகி உரைத்தஅல்லது தொடுத்த வழக்கில் தீர்ப்பளிக்கும் உரிமை அவனிடமிருந்து போய் விட்டது.

செழியன் நினைத்திருந்தால், பொற்கொல்லனைத் தேடிப் பிடித்து வரச்சொல்லிக் கோவலன் மீது பொய்வழக்கு தொடுத்ததற்காக, அவனுக்கு மரண தண்டனை விதித்திருக்கலாம். அதற்கு மேல் பாண்டியன் தொடர்ந்து உயிர் வாழ்ந்திருக்கலாம். அரியாசனத்தில் நிலைத்து ஆட்சியும் செய்திருக்கலாம். ஆனால், நெடுஞ்செழியன், பொற்கொல்லன் செய்த தவறை விடவும் தான் செய்த தவறே பெரிது என்று கருதினான்.

பொற்கொல்லனைக் கண்டுபிடித்து அவனுக்கு மரண தண்டனை கொடுத்து விடுவதனால் கோவலன் திரும்பவும் உயிர்பெற்று எழுந்துவிடப் போவதில்லை. கண்ணகியும்வாழ்வரசியாகி, கோவலனுடன் கூடி மதுரை நகரிலோ, பூம்புகாருக்குத் திரும்பிச் சென்றோ வாழ்வு நடத்தப் போவதில்லை. அதனாற்றான், உயிர்த் தியாகம் புரிந்து தனக்கு ஏற்பட்டு விட்ட பழியைத் துடைத்துக் கொண்டான் செழியன். கோவலனைக் கொன்றதால் வளைந்த செங்கோலைத் தன்னுயிர் கொடுத்து நிமிர்த்தி விட்டான்.

தருமம் வேறு; நியாயம் வேறு. சில நேரங்களில் இந்த இரண்டும் ஒத்துப் போவதும் உண்டு. வேறு சில நேரங்களில் இந்த இரண்டுக்குமிடையே மோதல் ஏற்படுவதும் உண்டு.

பொய் வழக்கு தொடுத்த பொற்கொல்லனைக் கண்டு பிடித்து, அவனுக்கு மரண தண்டனை கொடுத்துவிட்டு, நெடுஞ்செழியன் தொடர்ந்து ஆட்சி நடத்தியிருந்தால், அது நியாயமாக இருந்திருக்கலாம். ஆனால், அரசியல் தருமமாக இருக்க முடியாது. நியாயத்தைக் கடைப்பிடித்து விட்டு, அத்துடன் மனத் திருப்தியடைவோர் சாமான்யர்கள். நியாயத்தை விடவும் தருமத்தையே பெரிதாக மதித்து அதற்காகத் தியாகம் புரிவோர் சரித்திர புருஷர்கள். இந்த உண்மையை உணர்ந்து, நியாயத்தை விடவும் தருமத்தைப் பெரிதாக மதித்து உயிர்த்தியாகம் புரிந்து சரித்திர நாயகனாகி விட்டான் நெடுஞ்செழியன்.

பாண்டியன் உயிரிழந்த அக்கணமே அவன் மனைவி பாண்டிமாதேவியும் உயிர் நீத்தது கண்ணகிக்கு ஒரு வகையில் வேதனையையும், இன்னொரு வகையில் வியப்பையும் தந்தது.

(தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.



ப்ளீச் செய்யாமலே கருநிற மேனியை சிகப்பாக்கும் க்ரீம்



உலகு காணும் புதுமை: நிறத்தைக் கரைக்காமலே (ப்ளீச் செய்யாமலே) கரு மேனியைச் சிகப்பாக்கும் சாதனம் எக்காலத்திலும் இருந்ததில்லை. சருமத்தைச் சிவப்பாக்க இதுநாள்வரை செய்த முயற்சிகள் எல்லாமே குருட்டு முயற்சிகள், முரட்டு முறைகள். ப்ளீச்சுகளின் சங்கதி உங்களுக்குத் தெரியும்: இருக்கும் நிறத்தையும் கரைத்து வெளிற வைத்து விடும். அடிக்கடி உபயோகிப்பதோ ஆபத்து: காரணம், சருமத்தையே பாதிக்கும் அவற்றின் கடுங்குணம்.

விடிவெள்ளி காட்டும் விஞ்ஞான சாதனையாம் ஃபேர் அண்ட் லவ்லி இரு வழிகளில் வேலை செய்கிறது:

1. உள்ளூர வேலை செய்யும் வைட்டமின் ஒன்று அதிலுள்ளது. இந்தக் க்ரீமை இடும்போதே, இதிலுள்ள வைட்டமின் சருமத்தினுள் இறங்குகிறது. இழைத்துத் தடவும் போதே உணருவீர்கள் இதன் செயல்-வேகத்தை: பரவும் சருமக் கருமையினை மெல்லத் திசைதிருப்புகிறது இது. வேளாவேளை ஆறு வாரங்கள் உபயோகித்துவந்தால் மேனி வண்ணம் மாறக் காண்பீர். பிறரும் காண்பார்.

2. வெளிப்புறத்திலிருந்து பாது-காப்பதற்கு, சூரிய ஒளி படாதபடி தடுக்கும் சாதனம் அடங்கியுள்ளது. நிறம் கருப்பதற்குக் காரணமான கதிரொளியை சருமத்தின் மீது படவிடாமல் தடுத்து விலக்கி, மேனியைக் காத்திடுகிறது ஃபேர் அண்ட் லவ்லி.

சிகப்பழகு தந்து, மேலும் பல வகையில் சிறப்பூட்டும் க்ரீம் ஃபேர் அண்ட் லவ்லி.

ஒப்பனைக்கு அடிப்படையாக தினமும் ஒரு முறை இடத்தக்கது ஃபேர் அண்ட் லவ்லி; இரு முறை உபயோகித்தாலோ நிறைவான பலனுண்டு. வேளாவேளை உபயோகித்துவாருங்கள், மங்காத சிகப்பு நிறத் தங்க மேனி மனம்போல் உங்களுக்கே.

சிகப்பான மேனியழகுக்கு மென்மையான வழி- ஃபேர் அண்ட் லவ்லி

தமிழ்நாட்டில் தேர்ந்தெடுத்த சில நகரங்களில் கிடைக்கும்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லின்டாஸ்-FALOV-4-140 TM [R]

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேயா காசு

